# குடியியற் கல்வி



# 9

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

**முதலாம் பதிப்பு** - 2017
**இரண்டாம் பதிப்பு** - 2018
**மூன்றாம் பதிப்பு** - 2019

**பதிப்புரிமையுடையது.**

ISBN 978-955-25-0167-8

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
கருணாரத்ன அன்ட் சன்ஸ்
65C, தள்கஹாவில வீதி, மிடெல்லமுளஹேன, ஹொறன
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீ ங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தரம் 6 முதல் தரம் 11 வரை சுமார் 91 வகையான பாடநூல்கள் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**யூ. எல். உவைஸ்**
கல்வி வெளியீட்டு உதவி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

**ஏ. எல். எஸ். அபேவிக்ரம**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

**தம்ம திசாநாயக்க**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
அரசியல் விஞ்ஞானம் மற்றும் அரச கொள்கைகள்
கற்கைத் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்.

**சட்டத்தரணி வசந்தா செனவிரத்ன**
தலைவர், பொது மற்றும் சட்டக்கற்றைகள் துறை,
சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

**எஸ். கருணாகரன்**
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

**யூ. எல். உவைஸ்**
கல்வி வெளியீட்டு உதவி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் (மொழி)


**ரீ. சுரேஸ்குமார்**

ஆசிரியர்,

கொ / டீ.எஸ்.சேனாநாயக்க கல்லூரி, கொழும்பு


## எழுத்தாளர் குழு


**எம். எப். முஹம்மட் றியாஸ்**

இணைப்பாளர் (கல்விப் பகுதி) விரிவுரையாளர்,

தேசிய கல்வியியற் கல்லூரி, தர்காநகர்.

**யூ. எல். சிபார்தீன் மரிக்கார்**

ஆசிரிய ஆலோசகர்,

வலயக் கல்வி அலுவலகம், வத்தேகம.

**எம். எம். எம். ஹுவைஸ்**

ஆசிரியர்,

வத் / அல் - சபா மகாவித்தியாலயம்,

வத்தேகெதர, பொல்கொல்ல.

**கலாநிதி டபிள்யூ. எம். சாமிந்த வனசிங்ஹ**

விரிவுரையாளர்,

இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல.

**சிறில் சாந்த ஜயசிங்க**

முகாமையாளர், (ஓய்வு)

ஆசிரிய மத்திய நிலையம்.

**ஜீ. ஜீ. சுசித்த பிரியந்த குமார**

ஆசிரியர்,

தும்பிணி வித்தியாலய, கொழும்பு - 5

**எச். அருண இந்திரசேன**

ஆசிரிய ஆலோசகர்,

வலயக்கல்வி பணிமனை, பலாங்கொடை.

**டபிள்யூ. எச். நாமல் ரேணுகா**

ஆசிரியர்,

எக / எகலியகொட மத்திய மகா வித்தியாலம்.

**கே. ஏ. நிலந்த புஸ்பகுமார**

அதிபர், ஹோ / வித்தியார்த்த கனிஷ்ட வித்தியாலயம்,

மகரகம.

**தமிந்து ஹேமஜீவக குடலிகம**

ஆசிரியர்,

கொ / ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு

**எம். கே. கின்ஸ்லி பிரியந்த**

விரிவுரையாளர்,

ருஹுணு தேசிய கல்வியியற் கல்லூரி,

வலஹந்துவ.

## சரவை நோக்கு

**ரி. மதிவதனன்**

ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை,

பிலியந்தல.

## நூல் வடிவமைப்பு

**எஸ். ஐஸ்வர்யா**

கணினி வடிவமைப்பாளர்,

## அட்டைப் படம்

**தினோலி செனேசா கொத்தலாவல**

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்


01 சமூகப் பாதுகாப்பு 1

02 சமகால மாற்றங்கள் 32


03 சனநாயக ஆட்சி 75

04 உள்ளூராட்சி மன்றங்கள் 100

05 மோதல் தீர்வு 125

06 வேலை உலகிற்கு ஆயத்தமாதல் 136

# 1 சமூகப் பாதுகாப்பு



## அறிமுகம்

கூட்டாகச் செயற்படல் என்பது மனித சமூகத்தில் காணப்படும் அடிப்படைப் பண்பாகும். பிரசைகள் சகலரும் அச்சமின்றி, சந்தேகமின்றி வாழ்வதற்கான உரிமையுடையவர்களாவர். இவ் உரிமைகள் உறுதிப்படுத்தப்படின் மட்டுமே சமூகப் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.

குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியன சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பல விசேட பணிகளை ஆற்றுகின்றன. அரசாங்கம் இதற்கென பல்வேறு நிறுவனங்களை நிறுவியுள்ளதுடன் அதற்கான சிறப்புப் பொறிமுறையும் செயற்படுத்தப்படுகின்றது.

சமூகப் பாதுகாப்பிற்காக பிரசைகள் சுய ஒழுக்கத்துடன் பிறரை மதித்து செயற்படுவது அவசியமாகும். பல்கலாசாரச் சமூகத்தில் சமூக இணக்கப் பாட்டை உறுதிப்படுத்துவதற்கு இது முக்கிய காரணியாக அமைகின்றது.

மனித சமூகத்தில் தனியாள் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, தேசிய அபிவிருத்தி என்பவற்றில் ''சமூகப் பாதுகாப்பு'' முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாதனமாகும்.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,**

- தனியாளும் சமூகமும்
- சமூகப் பாதுகாப்பு
- சமூகப் பாதுகாப்பிற்காக உதவிபுரியும் நிறுவனங்கள்
- சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொறி முறைகளும் சட்டதிட்டங்களும்
- சமூகப் பாதுகாப்பில் செல்வாக்குச் செலுத்தும் தனியாட்களின் கடமைகளும் பொறுப்புகளும் தொடர்பாக விளங்கிக்கொள்ள

**இயலுமாகும்.**

## 1.1 தனியாளும் சமூகமும்

### 1.1.1 சமூகம் அறிமுகம்


சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பமாகும். குடும்பங்கள் பல இணைவதால் சமூகம் உருவாகின்றது. யாதாயினுமொரு புவியியல் பிரதேசத்தில் வசிக்கின்ற சமூகக் குழுக்களால் தமது பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காகக் கூட்டாகச் செயற்படுவது சமூகத்தின் அடிப்படைப் பண்பாகும். இதற்காக மனிதர்கள் பல்வேறு நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் அமைப்புகளை உருவாக்கிக் கொள்கின்றனர். எனவே, இவ் அமைப்புகளின் கூட்டினை சமூகம் எனக் குறிப்பிடலாம். ஆகவே, சமூகமானது தனியாட்கள் பலரினது ஒன்றிணைவாகும்.



தனியாள்



குடும்பம்



சமூகம்

சகல பிரசைகளும் சமூகத்தின் உறுப்பினராவர். இவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக எப்பொழுதும் பல்வேறு வகையான தொடர்புகளைப் பேணி வருகின்றனர். அனைத்துச் சமூகங்களிலும் தனித்துவமான பழக்கவழக்கங்கள், சட்ட திட்டங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள் மற்றும் சம்பிரதாயங்கள் போன்றன உள்ளன. இவை சகல சமூகங்களினதும் பொதுப் பண்புகளாகும். அத்துடன் இவை சமூகங்களிடையே பல்லினத் தன்மையைத் தோற்றுவிக்கவும் காரணமாக அமைகின்றன. இவை ஒரு சமூகத்தை அடையாளப்படுத்தும் காரணிகளாகும்.

தற்கால சமூகம் மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. ஆகவே, பிரஜைகள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக ஏனையவர்களுடன் பரஸ்பர இடைத் தொடர்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டி உள்ளது. பல்வேறு நபர்களினதும் சமூக நிறுவனங்களினதும் உதவி சகல தரப்பினருக்கும் அவசியமாகும். தனியாளுக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பு வலுப்பெறுமளவுக்கு சமூகத்தின் ஆரோக்கியத் தன்மையும் இருப்பும் உறுதியாகப் பேணப்படும்.


### 1.1.2 சமூகப் பாதுகாப்பு

சகல பிரசைகளும் அச்சமின்றி, சந்தேகமின்றி வாழ்வதற்கும் வாழ்க்கையை வளப் படுத்திக்கொள்வதற்கும் சமூகத்திலிருந்து பாதுகாப்பும் அரவணைப்பும் கிடைக்கப் பெற வேண்டும். இதனைச் சமூகப் பாதுகாப்பு என்று எளிமையாகக் குறிப்பிட முடியும். அவ்வாறே சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகத்தின் ஆரோக்கியத் தன்மை உயர் நிலையில் காணப்படுவது சமூக அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதாகும்.

அனைத்து சமூகங்களிலும் உள்ள தனியாட்கள், சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்களை ஏற்று அவற்றுக்கு மதிப்பளித்துச் செயற்படும்போது அது சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது. எனவே, சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்குப் பல்வேறு தரங்களிலுள்ள தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வது அவசியமாகும்.

தீர்க்கதரிசனமிக்க பண்புள்ளவர்கள் அல்லது குழுக்கள் மூலமாகப் பாதுகாப்பான மனித சமூகத்தை உருவாக்குவதற்கான சிறந்த பங்களிப்பு வழங்கப்படுகின்றது.






ஆபிரகாம் லிங்கன்

ஐக்கிய அமெரிக்காவில் நிலவிய அடிமை முறையை நீக்குவதற்குப் பாடுபட்ட முன்னாள் அமெரிக்க சனாதிபதி ஆபிரகாம் லிங்கன் (1809 - 1865) அடிமைகளாகத் துன்பப்பட்ட மக்களுக்கு சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்திய சிரேஷ்ட தலைவராவர். அமெரிக்காவில் அடிமை முறை பரவலடைவதைத் தடுப்பதில் நேரடியாகத் தலையிட்ட அவர் ''இலவச மண்ணில் இலவச ஊழியம்'' (Free labour in free soil) என்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். அவ்வாறே அவர் 1863 இல் அடிமைப்பணிக்காக பயன்படுத்தியிருந்த பலமில்லியன் கணக்கான மக்களுக்கு விடுதலையளித்து அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்திய தூரநோக்குடைய தலைவராவர். ''நீங்கள் என்ன செய்தாலும் நல்லவராகத் திகழுங்கள்'' என்பது அவரது பிரபலமானதொரு கூற்றாகும்.


**செயற்பாடு 1.1**



- சமூகப் பாதுகாப்பு என்றால் என்ன என்பதை உமது சொந்த மொழி நடையில் தெளிவுபடுத்துக.

## 1.1.3 சமூகப் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களும் அவற்றால் ஆற்றப்படும் பணிகளும்

சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகச் செயற்படும் நிறுவனங்கள் பலவற்றை சமூகத்தில் காணலாம். அவற்றிற்கான உதாரணங்கள் சில இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.




### 1.1.3.1 சமூகப் பாதுகாப்பில் குடும்பத்தின் பங்களிப்பு

தரம் 7 குடியுரிமைக் கல்வியில் கற்ற ''எமது குடும்பம்'' என்ற பாடத்தை மீண்டும் நினைவுபடுத்துங்கள். அங்கு குடும்பமொன்றின் இயல்பு, கடமை மற்றும் குடும்பத்தின் முக்கியத்துவம் பற்றிய பல விடயங்களை அறிந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகவே, சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பல பொறுப்புகள் குடும்பத்தின் மூலம் சிறப்பான முறையில் நிறைவேற்றப்படுகின்றன. மனிதன் சமூக இசைவாக்கம் அடைவதற்கான அடிப்படைப் பயிற்சி குடும்பத்தின் மூலமே வழங்கப்படுகின்றது.



மகிழ்ச்சிகரமான குடும்பம்

குடும்ப அங்கத்தவர்களிடையே காணப்படும் சிறந்த நடத்தைகள், செயற்பாடுகள், முன்மாதிரிகள், சிந்தனைகள் என்பன மூலம் சிறந்த பிரசையொருவர் உருவாக்கப் படுகிறார். சிறப்பாகக் கருமமாற்றுகின்ற ஒழுக்கசீலமான பிரசையை சமூகத்திற்கு வழங்குவது குடும்பத்தின் பொறுப்பாகும். குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் குடும்பத்தில் அவருக்குக் கிடைக்கின்ற அரவணைப்பு, பாதுகாப்பு, அன்பு, கருணை, முன்மாதிரிகள் என்பன தன்னம்பிக்கை மற்றும் சமநிலை ஆளுமையை வளர்ப்பதற்குக் காரணமாகின்றன. இதன்மூலம் சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்தப்படுகின்றது. குடும்ப

அங்கத்தவர்களாக இணைந்து வாழ்வதால் பொதுப் பண்புகள் வளர்வதோடு அது சமூகப் பாதுகாப்பில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும்.


**சமூகப் பாதுகாப்பிற்காக குடும்பத்தினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள்**

- குடும்ப அங்கத்தவரிடையே நல்லுறவை விருத்தி செய்தல்
- உறவினர், அயலவரிடையே நல்லுறவைப் பேணல்
- பல்தரப்பட்ட நபர்களுடன் நல்லுறவைப் பேணல்
- சிறந்த சமூகநலத் திட்டங்களுக்காக வழிகாட்டுதல்
- அன்பு, கருணை, காருண்யம் போன்ற பண்புகள் வளர்க்கப்படுதல்
- பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்
- மதுபானம், போதைப்பொருட் பாவனை மற்றும் சமூக விரோத செயல்களிலிருந்து மீட்ப்புப் பெறல்
- கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கப் பழகுதல்
- பிறரது கருத்துகளுக்குச் செவிமடுக்கவும் அவர்களது ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்கவும் கற்றுக்கொடுத்தல்
- ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தல்
- முன்மாதிரியாகச் செயற்படுவதற்கு வழிகாட்டுதல்
- தனது முன்னேற்றம் கருதி மூத்தோர் வகுத்த ஆலோசனைகளைப் பின்பற்றச் செய்தல்
- உளத்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயிற்றுவித்தல்
- தனிப்பட்டோர், சமூகம் தொடர்பாக நல்மனப்பாங்கை ஏற்படுத்தல்
- தகுதிக்கேற்ற வாழ்க்கைக் கோலத்தில் வாழப் பழக்குதல்
- சட்டத்தை மதிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுதல்

இத்தகைய பண்புகள் நிறைந்த பிரசைகள் சகல குடும்பங்களிலுமிருந்து உருவாவதற்கான பின்னணியை ஏற்படுத்த வேண்டும். அப்போதே சமூகப் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.



ஒரு நாள் சிறுவனான தோமஸ் அல்வா எடிசன் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்து தனது தாயாரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ''அம்மா, எனது ஆசிரியர் இக்கடிதத்தை உங்களிடம் கொடுக்குமாறு இக்கடிதத்தை நீங்கள் மட்டுமே படிக்க வேண்டுமென்றும் கூறினார். இக்கடிதத்தில் என்ன விடயம் எழுதப்பட்டுள்ளது?'' என்று சிறுவன் வினவினான்.



தோமஸ் அல்வா எடிசன்
*(1841 - 1931)*

தோமஸின் தாயார் கடிதத்தைப் படிக்கும்போது அவரது கண்களில் கண்ணீர் ததும்பியது. அவர் கூறினார். '' உமது மகன் மகா கெட்டிக்காரன் எமது பாடசாலை அவனுக்குப் போதாது அவனுக்குப் படிக்கும் அளவிற்கு திறமையான ஆசிரியர்கள் இங்கில்லை. தயவுசெய்து அவனை வீட்டில் வைத்து நீங்களே கற்றுக் கொடுங்கள்.''

எடிசனின் தாயார் காலமாகிப் பல வருடங்களின் பின்னர் அவர் அந்த நூற்றாண்டின் சிரேஷ்ட கண்டுபிடிப்பாளராகப் பாராட்டுப் பெற்றார்.

பிற்காலத்தில் எடிசனின் பழைய தகரப் பெட்டியிலிருந்து அந்த ஆசிரியரின் கடிதம் அகப்பட்டது. அவர் அதனைப் பிரித்துப் படித்தார். அதிலிருந்த விடயம் ''உமது மகன் மகா முட்டாள். அவனுக்குப் படிப்பித்துக் காலத்தைப் போக்குவதற்கு இப்பாடசாலை ஆசிரியர்களால் முடியாது. மேலும், அவனை இப்பாடசாலையில் கற்க அனுமதிக்க முடியாது. எனவே, தயவு செய்து அவனை வீட்டிலே வைத்து நீங்கள் படிப்பிக்கவும்.'' அக்கடிதத்தை வாசித்து உணர்ச்சிவசப்பட்ட எடிசன் தனது டயரியை எடுத்து இவ்வாறு எழுதினார்.

''தோமஸ் அல்வா எடிசன் என்பவன் தனது தாயாரால் நூற்றாண்டின் சிரேஷ்ட மாணவனாக்கப்பட்ட ஒரு மகா முட்டாள்.''

### 1.1.3.2 சமூகப் பாதுகாப்பில் பாடசாலையின் பங்களிப்பு



பாடசாலை

பிள்ளைகள் குடும்பத்திலிருந்து அடுத்ததாகப் பிரவேசிப்பது பாடசாலைச் சமூகத்திலாகும். சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக குடும்பத்தைப் போன்றே பாடசாலையினாலும் ஆற்றப்பட வேண்டிய பணிகள் பல காணப்படுகின்றன. சமூகப் பாதுகாப்பை வளர்த்தெடுப்பதற்குத் தேவையான பின்புலத்தை ஒழுங்கமைக்கும் நிறுவனமாகப் பாடசாலையைக் குறிப்பிடலாம்.

பாடசாலையில் நீங்கள் பெற்றுக்கொள்கின்ற அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் பண்பார்ந்த வாழ்க்கைப் பழக்கம் ஆகியன நற்பிரசையொருவராக சமூகத்தில் வாழ்வதற்குப் பெரிதும் துணையாக அமைகின்றன.

**சமூகப் பாது காப்பிற்காக பாடசாலையினால் ஆற்றப்படுகின்ற பணிகள்**

- முறையான கல்வியைப் பெற்றுக்கொள்ளல்
- சிறந்த சமூகமயமான, ஒழுக்கமுள்ள பிரசைகளை உருவாக்குதல்
- தேர்ச்சிகளின் மூலம் பரிபூரணப்படுத்தல்
- சமநிலை ஆளுமையுள்ள பிரசைகளை உருவாக்குதல்
- உரிமைகளை அனுபவிக்கும் அதேவேளை கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்குப் பயிற்றுவித்தல்
- கலாசாரத்தைப் பொறுப்பளித்தலும் அவற்றைப் பாதுகாக்க உதவுதலும்
- சமூக நல நோக்கில் பணியாற்றப் பழக்குதல்
- மதுபானம், போதைப்பொருள் பாவனையின் பாதிப்புகளை விபரித்து அதிலிருந்து மீட்டெடுத்தல்
- சமூக விரோத மற்றும் நெறிபிறழ்வான செயல்களின் தீய விளைவுகளை உணர்த்துதலும் அவற்றிலிருந்து மீட்டுக் கொள்ளலும்
- சிறந்த சமூக நலச் சிந்தனகளைத் தோற்றுவிக்க உதவுதல்
- சமத்துவத்துக்கு மதிப்பளிக்கவும் உளப்பாதிப்புகளைக் கட்டுப்ப டுத்திக் கொள்ளவும் பழக்குதல்
- கூட்டாகவும் சமாதானமாகவும் செயலாற்றுவதில் ஈடுபாடு கொள்ளச் செய்தல்
- தேசிய ஒற்றுமை, சகோதரத்துவம், மற்றும் சமத்துவம் என்பவற்றை ஏற்படுத்துதல்
- சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு அவசியமான தேர்ச்சியை விருத்தி செய்தல்
- சமயம் மற்றும் பண்பாட்டு முறைகளுக்கேற்ற நற்பண்புகளை விருத்தி செய்தல்
- சகல பிள்ளைகளும் நாட்டிற்கு அவசியமானவர்கள் என்பதையும் திறமை உடையவர்கள் என்பதையும் விளக்குதல்

தமது பாடசாலைப் பிள்ளைகளுக்கு கல்வழிபுகட்டும் ஆசிரியையொருவர் தொடர்பான பின்வரும் கதையை வாசித்துப் பாருங்கள்.




தரம் ஒன்றிலிருந்து திவ்வியா எனும் சிறுமி எல்லாப் பாடங்களிலும் திறமையானவளாகவிருந்தாள். ஆயினும் வகுப்பில் இரண்டாந் தவணை யிலிருந்து திவ்வியாவின் செயற்பாடுகள் மந்தகதி அடைந்ததை வகுப்ப சிரியையால் அவதானிக்க முடிந்தது. அதுபற்றி அவர் கடந்த வருட தேர்ச்சியறிக்கையோடு இந்த வருடத் தேர்ச்சியறிக்கையையும் ஒப்பிட்டு நோக்கி திவ்வியாவின் மாற்றத்திற்கான காரணத்தைத் தேடினார். அவளை நெருங்கி அதுபற்றி ஆய்வு செய்தபோது மூன்றாம் வகுப்பில் முதலாம் தவணையில் திவ்வியாவின் தாயார் இறந்ததாகவும், அதுவே இவளது பின்னடைவிற்கான காரணமென்பதும் தெரிய வந்தது.

அதன் பின்னர் அவ்வாசிரியை திவ்வியாவின் தாயாகவே மாறினார். தாயிடமிருந்து கிடைக்க வேண்டிய அன்பு, கருணை, பாசம் என்பன அவ்வாசிரியையிடமிருந்து அவளுக்குக் குறைவின்றிக் கிடைத்தன. எனவே, திவ்வியாவின் முன்னரைப் போன்று கல்வியில் ஆர்வம் காட்டினாள். பாடசாலை அவளுக்கு வீட்டைப் போல விருப்பமான இடமாக மாறியது. ஆண்டிறுதியில் மாணவர்கள் கொடுத்த பரிசுகளால் ஆசிரியையின் மேசை நிறைந்திருந்தது. திவ்வியாவும் கடதாசியில் ஒரு பரிசைச் சுற்றிக் கொடுத்து ஆசிரியைக்கு வாழ்த்துத் தெரிவித்தாள். அது அவளது தாயார் அணிந்த ஒரு பழைய வளையலாகும். அதனை ஆசிரியை பெருமிதத்தோடு ஏற்றுக்கொண்டார்.

காலப்போக்கில் திவ்வியாவின் திறமைகள் வளர்ந்ததுடன் ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியை நிறைவுசெய்த திவ்வியா பல்கலைக்கழகப் படிப்பையும் வெற்றிகரமாக நிறைவு செய்தாள். அவளது திருமண நாள் வந்தது. தனது வாழ்வுக்கு ஒளியூட்டிய அந்த ஆசிரிய அன்னையைத் திருமணத்திற்கு அழைக்க திவ்வியா மறக்கவில்லை. அவரும் திருமண வைபவத்தில் கலந்து கொண்டார். அப்போது தான் திவ்வியா அவரது கையை அவதானித்தாள். அங்கு ஆண்டிறுதியில் அவளால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட அந்த வளையல் ஆசிரியையின் கையில் இருந்தது.

**செயற்பாடு 1.2**



- *உமது பாடசாலைச் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக நிறைவேற்றுகின்ற செயற்பாடுகளை அட்டவணைப்படுத்துக.*

### 1.1.3.3 சமூகப் பாதுகாப்பில் சமய நிறுவனங்களின் பங்களிப்பு

நற்பழக்கம் மற்றும் விழுமியங்களை உறுதிப்படுத்தி அமைதியான சமூகமொன் றினைக் கட்யெழுப்புவதற்காக சமய நிறுவனங்களின் மூலம் முக்கிய பணிகள் ஆற்றப்படுகின்றன. சகல சமயங்களினதும் நோக்கம் சமாதானம், ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வுடன் நற்பிரசையாக வாழ்வதன் முக்கியத்துவத்தை

மக்களுக்கு உணர்த்துவதாகும். அவ்வாறே இனங்களுக்கிடையில் சகவாழ்வை ஏற்படுத்துவது சமய நிறுவனங்களினால் ஆற்றப்பட வேண்டிய பாரிய பணியாகும். எனவே, சமய நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். அதற்கான உதாரணங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.






- சிறந்த சிந்தனைகளை உருவாக்குதல்
- ஒழுக்கம் மற்றும் போதனைகளை முன்வைத்தல்
- ஆன்மிக விருத்திக்கு வழிகாட்டுதல்
- நற்பண்புகளை மதிக்கும் பிரசைகளை உருவாக்குதல்
- மதுபானம், போதைப்பொருள் பாவனையின் பாதிப்புகளை விளக்கி அவற்றிலிருந்து மக்களை மீட்டெடுத்தல்
- சமூக விரோத மற்றும் நெறிபிறழ்வான செயற்பாடுகளின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தெளிவுபடுத்தி அவற்றிலிருந்து அவர்களை மீட்டுக்கொள்ளல்
- ஒத்துழைப்பு மற்றும் உதவிபுரிவதற்குப் பழக்குதல்
- பழக்கவழக்கம், சம்பிரதாயங்களைப் பேணுவதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் கற்றுக்கொடுத்தல்
- வாழ்க்கையைப் பற்றிய நன்னோக்கினை ஏற்படுத்தல்
- தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- நிலையான சமாதானத்திற்காகச் செயற்படல்




கத்தோலிக்க மதகுருவான மர்சலின் ஜயகொடி அவர்கள் பௌத்த சமயம் பற்றிய பரந்த அறிவைப் பெற்றிருந்தார். அவர் இயற்றிய பௌத்த பக்திப் பாடல்கள் மிகவும் பிரபல்யமானவை. சமயங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டமையால் அவர் ''பன்சலையின் பிதா'' என அழைக்கப்பட்டார்.



வண. பிதா. மர்சலின் ஜயகொடி


## செயற்பாடு 1.3



1. உங்களது பிரதேசத்தில் காணப்படும் சமய நிறுவனங்களைப் பெயரிடுக?
2. இத்தகைய சமய நிறுவனங்களால் சமூகப் பாதுகாப்புக்காகப் பொதுவாக ஆற்றப்படுகின்ற பணிகள் ஐந்தை எழுதுக.

### 1.1.3.4 சமூகப் பாதுகாப்பில் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு

நாளாந்த வாழ்க்கையில் பிரசைகளின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சமூக நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் ஒன்றிணைந்து செயலாற்றுகின்றன. அத்துடன் தனியாட்களின் தேவைகள் விரிவடைந்து காணப்படுகின்றமையால் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கான சில உதாரணங்களை பின்வரும் வரிப்படத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.





இவ் அமைப்புகளுள் பெரும்பாலானவை முறையான செயற்றிட்டத்துடன் யாப்பொன்றுக்கமைய இயங்குகின்றன. இவற்றின் அடிப்படை நோக்கம் ஒவ்வொருவருடனும் ஒத்துழைத்துச் செயற்பட்டு சமூகநலனை அபிவிருத்தி செய்வதாகும். இவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் சமூகப் பாதுகாப்பின் உறுதிக்கு பாரிய பங்களிப்பை நல்குகின்றன. இவற்றின் செயற்பாடுகள் சிலவற்றிற்கான உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.

**சமூகப் பாது காப்புக்காக பல்வேறு நிறுவனங்களின் மூலம் ஆற்றப்படு கின்ற பணிகள்**

- அங்கத்தவரிடையே கூட்டிணைப்பை விருத்தி செய்தல்
- அனைத்து நபர்களுடனும் சிறந்த முறையில் தொடர்புகளை ஏற்படுத்தல்
- பிறர் கருத்துக்களைச் செவிமடுத்தல் மற்றும் பிறரை மதிக்கப் பழகுதல்
- தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தலும் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றப் பயிற்றுவித்தலும்
- சட்டத்தை மதித்துச் செயற்படப் பயிற்றுவித்தல்
- சமூக, நலன்புரிச் சேவைகளை நடாத்திச் செல்லுதல்
- பொருளாதாரப் பாதுகாப்பிற்காக ஒத்துழைப்பு வழங்குதல்
- சமூக, சுகாதார சேவையை நடாத்திச் செல்லுதல்
- உணவு, போசணை தொடர்பாக அறிவுறுத்தல் வழங்குதல்
- தொற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கு ஒத்துழைத்தலும் பாதுகாப்பு தொடர்பாக அறிவுறுத்தலும்
- விழுமியப் பண்புகளை விருத்தி செய்தல் (அன்பு, கருணை, நட்பு போன்றன)
- தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நிலையான சமாதானம் என்பவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- தனியாள் மற்றும் சமூகம் தொடர்பான நற்சிந்தனையை உருவாக்க வழிகாட்டல்
- மதுபானம், போதைப்பொருள் பாவனை, சமூக விரோத செயல்கள், நெறி பிறழ்வான செயல்கள் போன்றவற்றி லிருந்து சமூகத்தை மீட்டெடுப்பதற்கான வேலைத் திட்டங் களை செயற்படுத்தல்
- மரணச் சடங்கு போன்ற சந்தர்ப்பங்களில் கவலை / சோகத் திற்கு ஆட்பட்டவர்களுக்கு உதவி புரிதல்

## செயற்பாடு 1.4



- உங்களது பிரதேசத்தில் காணப்படுகின்ற சமூக நிறுவனங்கள் (அமைப்புகள்) தொடர்பான தகவல்களைத் திரட்டி பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| அமைப்பின் பெயர் | உருவாக்கப்பட்டதன் நோக்கம் | சமூக பாதுகாப்புக்காக ஆற்றுகின்ற பணிகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

### 1.1.4 மதுபானம், போதைப்பொருள் பாவனை, சமூக விரோத மற்றும் நெறி பிறழ்வான செயல்கள்

தற்கால சமூகம் எதிர்கொள்கின்ற பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக மதுபானம், போதைப்பொருள் பாவனை என்பன அதிகரித்துக் காணப்படுவதைக் குறிப்பிடலாம். அவ்வாறே சமூக விரோதச் செயல்கள் மற்றும் நெறிபிறழ்வான செயற்பாடுகள் என்பனவும் பரவலாகக் காணப்படுகிறன. இதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கத்தின் மூலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அத்துடன் அரச நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியனவும் இதற்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனையானது பல்வேறு சமூக விரோதச் செயல்கள் மற்றும் நெறிபிறழ்வான செயல்கள் என்பன அதிகரித்துச் செல்வதில் நேரடித் தாக்கம் செலுத்துகின்றன. சமூகப் பாதுகாப்பு சீர்குலைந்து போவதற்குப் பிரதான காரணியாக அமைவது மது பாவனையும் போதைப்பொருள் பாவனையும் என்பதை பல்வேறு ஊடகங்கள் வாயிலாக தினசரி அறியக் கூடியதாக உள்ளன.

மதுபானம், போதைப்பொருள் பாவனை, சமூக விரோதச் செயல்கள் மற்றும் நெறிபிறழ்வான செயற்பாடுகளைத் தடுப்பதற்குக் குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் சமூகத்துக்கு மிக முக்கியமானவையாகும். அவ்வாறே சமூக விரோதச் செயல்களைத் தடுப்பதற்காகவும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் செயற்படுகின்ற நிறுவனங்கள் பல உள்ளன. அவற்றுக்கான உதாரணங்கள் சில வருமாறு

- தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை
- இலங்கை பொலிஸ்
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்
- மதுபானம், போதைப்பொருள், தகவல் நிலையம்
- ஹெல்தி லங்கா, சுமித்ரயோ, மித்துரு மிதுரோ போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள்

### 1.1.5 *சமூகப் பாதுகாப்பு தொடர்பான சட்டம்*

சட்டம் பற்றிய அறிமுகம்

*நாடொன்றில் அல்லது சமூகத்தில் உள்ள சகலரும் கீழ்ப்படிய வேண்டிய அரசாங் கத்தனால் விதிக்கப்படும் அனைத்து சட்டதிட்டத் தொகுதிகளையும் சட்டம் என எளிமையாகக் குறிப்பிடலாம். தனி மனிதன் சமூகத்தில் வசிக்கின்றபோது சமூகத்துக்கு ஏற்படும் பொருத்தப்பாடற்ற விளைவு மற்றும் சேதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் சமாதானம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சட்டம் அமுலாக்கப்படுகின்றது.*

*அனைத்து சமூகங்களும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும். தனது ஆட்சியில் சமாதானத்தையும் நீதியையும் பாதுகாப்பது அரசின் கடமையாகும். சட்டத்தை மீறும்போது தண்டனை கிடைக்கும் சட்டத்தின் மூலம் நீதி, சமாதானம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியன பாதுகாக்கப்பட்டுள்ளன.*

*சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக அரச நிறுவனங்களின் மூலம் ஆற்றப்ப டுகின்ற பணிகள் மிக முக்கியமானதாகும். அத்தகைய நிறுவனங்களாக நீதித் துறை நிறுவனங்கள், பொலிஸ், பாதுகாப்புப்படை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அரசாங்கத்தின் மூலம் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் இந்நிறுவனங்களின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றன.*

**சட்டத்தின் பண்புகள்**

- *அதிகார பலத்தை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்தினால் விதிக்கப்படுவது*
- *மனிதனின் புற நடத்தை மற்றும் செயற்பாடுகளைக் கட்டுப் படுதுவது*
- *சட்டத்தை மீறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்*
- *பொதுவாக சமூக நலனை நோக்காகக் கொண்டு விதிக்கப் பட்டிருத்தல்*
- *மாறும் சமூகத்திற்கு ஏற்ப மாற்றமடைதல்*
- *சகலருக்கும் நியாயமாக, சமமாகச் செயற்படுதல்*
- *தெளிவாகவும் விளக்கமாகவும் காணப்படுதல்*
- *சட்டம் சகலவற்றிற்கும் மேலாக உயர்வாகச் செயற்படல் (சட்ட மேலாண்மை)*

சட்டத்தின் மூலாதாரங்கள்

- *அரசியல் யாப்பு*
- *யாப்பு (கட்டளைச் சட்டம்)*
- *பழக்கவழக்கம்*
- *நீதிமன்றத் தீர்ப்புகள்*
- *சட்டவல்லுநர்களின் கருத்து*
- *சமயம்*

*சமூகப் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டமானது பல்வேறு மூலாதாரங் களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக அது சமூகத்தின் தேவைகளோடு பின்னிப் பிணைந்துள்ளது. ஆகவேதான் சகலரும் சட்டத் துக்கு கட்டுப்படுதல், சட்டத்தைப் பின்பற்றுதல் அவசியம் என்பது தெளிவாகின்றது.*

சட்டம் செயற்படுகின்ற முறைக்கேற்ப அதனை இரு பிரதான பிரிவுகளாக வகைப் படுத்தலாம்.

1. தேசிய சட்டம்
2. சர்வதேச சட்டம்

## 1. தேசிய சட்டம்

ஒரு நாடு தமது தேச எல்லைக்குள் அதிகாரம் செலுத்தக் கூடியவாறு அமுல் செய்யப் படுகின்ற சட்டம் தேசிய சட்டம் எனக் குறிப்பிடப்படுகின்றது. தேசிய சட்டம் நாட் டுக்கு நாடு வேறுபடலாம்.

### தேசிய சட்டம்

| அரசியலமைப்புச் சட்டம் | குற்றவியல் சட்டம் | குடியியல் சட்டம் |
| --- | --- | --- |
| அரச நிர்வாகம் தொடர் பான அடிப்படைச் சித் தாந்தங்களை உள்ளடங் கியதே நாட்டின் அதி உயர்ந்த அரசியல் திட்ட யாப்புச் சட்டமாகும். பல்வேறு பிரிவுகளுக்கு மான அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் மனித உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>உதாரணம் :-<br>• 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு | தனி நபரொருவர் அல்லது குழு வொன்றினால் சமூக விரோ தமாக செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான சட்டம்,<br><br>உதாரணம் :-<br>• கொலை அல்லது கொலை செய்ய முயற்சி த்தல்<br>• கொள்ளை<br>• பெண்கள் துஷ்பிர யோகம்<br>• சிறுவர் துன்புறுத்தல்<br>• கடத்திச் செல்லல்<br>• காணாமல் போதல்<br>• போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனை<br>• களவு | சமூகத்திலுள்ள நபர்கள் தொடர்பான சொத்து க்கள் தொடர்பான தவறுகள் அல்லது பிரச்சினைகள் மற்றும் சேதங்கள் தொடர்பான சட்டம்.<br><br>உதாரணம்<br>• ஒப்பந்தங்கள்<br>• குடும்ப உறவுகள் (விவாகா ரத்து, பிள்ளைகளின் பாது காப்பு)<br>• உரிமைகள்<br>• காணிப் பிரச்சினைகள்<br>• கடன் அறவிடுதல்<br>• நஷ்ட ஈடு |

## 2. சர்வதேச சட்டம்

ஒரு நாடு பிறிதொரு நாட்டுடன் அல்லது நாடுகள் பலவற்றுடன் கருமமாற்றும் போது அதிகாரம் செலுத்துவதற்கு அமுல்செய்யப்படும் சட்டத்தை சர்வதேச சட்டம் என எளிதாகக் குறிப்பிடலாம். அமுலிலுள்ள சட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- சர்வதேச மனித உரிமைகள் சட்டம்
- குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்
- சர்வதேச விமானப் போக்குவரத்துச் சட்டம்
- சர்வதேச முதலீட்டுச் சட்டம்
- சர்வதேச பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சட்டம்
- சர்வதேச சமுத்திரச் சட்டம்
- சர்வதேச சுற்றாடல் சட்டம்

சர்வதேச நியாயாதிக்க நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்றனவற்றின் மூலம் இத்தகைய சர்வதேச சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

### 1.1.6 சட்டத்தை அமுல்படுத்துவதற்கான பல்வேறு நிறுவனங்கள்

1. நீதிமன்றம்

சனநாயக ஆட்சி முறையொன்றில் நியாயத் தீர்ப்பு, பிரசைகளின் சுதந்திரம் மற்றும் உரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்துக் கொடுத்தல் நீதிமன்றம் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. நீதிமன்றம் சுயாதீனமாக இயங்கும் போது பிரசைகள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கையும் மதிப்பும் வைப்பர். நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையில் பிரதான நீதிமன்றங்கள் சில இயங்குகின்றன.

**இலங்கையில் தற்போது காணப்படும் நீதிமன்றக் கட்டமைப்பு**



## 2. இலங்கைப் பொலிஸ்

நாட்டின் சட்டம் மற்றும் சமாதானம் ஆகியவற்றைப் பேணி, சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது பொலிசாரின் பிரதான பொறுப்பாகும். இலங்கை பொலிஸ் செயற்பாடுகள் என்ற தலைப்பின் கீழ் பாடசாலைக் காலைக் கூட்டத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் சமீர் என்பவரால் நிகழ்த்தப்பட்ட உரை கீழே தரப்பட்டுள்ளது.



இலங்கை பொலிஸ்
உத்தியோகபூர்வ இலச்சினை

அன்பார்ந்த ஆசிரியப் பெருந்தகைகளே, அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே வணக்கம். ''தர்மத்துடன் இருப்பவன் தர்மத்தினாலேயே காக்கப்படுவான்'' இது பொலிஸ் பிரிவின் மகுட வாசகமாகும். நான் இன்று உங்கள் முன்னிலையில் உரையாற்றப்போவது இலங்கை பொலிஸ் பற்றியதாகும். இரவு பகலாக எம்மை எப்போதும் பாதுகாக்கின்ற நிறுவனம் பொலிஸ் ஆகும். காலையில் எழுந்தது முதல் இரவு நித்திரைக்குச் செல்லும் வரையிலும் இரவு நித்திரையில் இருந்து காலையில் எழும் வரையிலும் அச்சம், சந்தேகமின்றி நாம் நிம்மதியாக வாழ்வ தற்கான பாதுகாப்பைப் பொலிஸ் அதிகாரிகள் வழங்குகின்றனர்.





கள்வர்களிலிருந்தும் பல்வேறு குற்றச் செயல் புரிவோரிடமிருந்தும் எம்மை எப்பொழுதும் காப்பது பொலிஸாராகும். பாதைகளில் வாகன நடமாட்டம், பாதையைக் கடப்பதற்கு உதவிபுரிதல் என்பன நகர்ப்புறங்களிலே காண்கின்ற காட்சி களாகும். வீதிப் போக்குவரத்து ஒழுங்குபடுத் துநர்களாக எம்மைப் பயிற்றுவிப்பதானது பொலிஸ் எமக்குச் செய்யும் பாரிய உதவியாகும்.



பிரமுகர்களுக்கான பாதுகாப்பு, பல்வேறு விழாக்கள், கூட்டங்கள் போன்வற்றுக்குப் பாதுகாப்பு பாது காப்பான முறையில் வாகனப் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதும் பொலிஸ் மூலம் எமக்கு கிடைக்கின்ற விசேட சேவைகளாகும்.

மதுபானம், போதைப்பொருள் பாவனை போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல், குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துதல் என்பனவும்

பொலிசாரின் கடமையாகும். அவ்வாறே பல்வேறு பிரச்சினைகள், குழப்பங்கள், தீவிரவாதத்தை கட்டுப்படுத்துதல் போன்றவற்றுக்கு பொலிசாரால் மேற்கொள்கின்ற பணி அளப்பரியது. இவை அனைத்தும் எம்முடைய பாதுகாப்பை உறுதி செய்வதற்காகப் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும். அவ்வாறே எம்போன்ற சிறுவர்களுக்காகவும் பெண்களுக்காகவும் தனித்தனியான பிரிவுகள் உருவாக்கப்பட்டு எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற திடீர் அனர்த்தங்களின்போது பொலிசாரால் வழங்கப்படும் சேவையை மறந்துவிட முடியாது. இவை மாத்திரமல்ல குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை குறுகிய காலத்தினுள் கைதுசெய்வதற்கு பொலிசாரினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இங்கு குறிப்பிட வேண்டும். இதில் பொலிஸ் மோப்ப நாய்ப் பிரிவின் சேவையானது விசேடமாகக் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

அவ்வாறே 119 தொலைபேசி சேவையின் மூலமாகத் திடீர் அழைப்புகளுக்கும் உடனடியாகச் செயற்படுவதும் பொலிஸ் மூலம் ஆற்றப்படும் விசேட சேவையாகும்.

வெயில், மழை, இரவு, பகல் பாராது பொலிசார் எமது தாய்நாட்டுக்காகச் செய்கின்ற பணிகளுக்கு எப்பொழுதும் நாம் மதிப்பளிக்க வேண்டும். அதேபோன்று பொலிசாரின் பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு எப்போதும் நாம் உத வியாக இருக்க வேண்டும்.

சமூகப் பாதுகாப்புக்காகப் பொலிசார் மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகளில் நான் குறிப்பிட்டது ஒரு சிறு பகுதியாகும். எனது உரையை செவிமடுத்துக் கொண்டிருந்த அனைவருக்கும் நன்றி.

**ஓய்வு பெற்றுச் சென்ற பொலிஸ்மா அதிபர் ஏ. இத்தமல்கொட அவர்கள் ''POLICE'' என்பதற்கு வழங்கிய பொருள் விளக்கம் பின்வருமாறு,**

| | | |
|---|---|---|
| P | - Polite | - ஒழுக்கமான |
| O | - Obedient | - கீழ்ப்படிவான |
| L | - Loyal | - நம்பிக்கையான |
| I | - Intelligent | - விவேகமான |
| C | - Courageous | - துணிகரமான |
| E | - Efficient | - வினைத்திறன்மிக்க |

சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் இலங்கைப் பொலிசுக்கு சர்வதேச பொலிசாரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.




**ஐக்கிய இராச்சியத்தின் பொலிஸார் பற்றிய ஒரு சம்பவம்**

ஐக்கிய இராச்சியத்தின் தலைநகரான லண்டனில் Hide Park Coner என்பது வார இறுதியில் மக்கள் சுதந்திரமாக செயற்படும் ஓரிடமாகும். இங்கு வருவோரில் சிலர் நடனமாடுவர். சிலர் பாடுவர். சிலர் உரை நிகழ்த்துவர். ஒருநாள் Hide Park Coner அருகே தனது வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருக்கும்போது, மேடையிலிருந்து ஒருவர் ஒலிவாங்கியைக் வைத்துக் கொண்டு ஐக்கிய இராாச்சியத்தின் பொலிஸார்மீது கீழ்த்தரமான குற்றச்சாட்டொன்றைச் சுமத்தியவாறு உரை நிகழ்த்துவதைச் செவிமடுக்க நேர்ந்தது. வாகனத்தை ஓட்டிச் சென்றவர் வாகனத்தின் வேகத்தைக் குறைத்து அவ்வுரையைச் செவிமடுத்தார். அங்கு வந்த பொலிஸ் அதிகாரி தன்மீது குற்றஞ் சுமத்தப் போகிறார் என்று எதிர்பார்த்த போதும் அந்த பொலிஸ் அதிகாரியின் வேண்டுகோள் இவ்வாறிருந்தது.

''தயவு செய்து உங்கள் வாகனத்தின் என்ஜினை நிறுத்துங்கள். அதன் சத்தம் காரணமாக அடுத்தவர்களுக்கு அவர் ஆற்றும் உரையைக் கேட்க முடியாதுள்ளது'' என்பதாகும்.

## செயற்பாடு 1.5



- *சமீரின் உரையிலிருந்து சமூகப் பாதுகாப்பிற்காகப் பொலிசாரினால் ஆற்றப்படும் பணிகளை அட்டவணைப்படுத்துக.*
  *உதாரணம் - பொதுமக்களின் பாதுகாப்பும் சமாதானத்தை நிலைநாட்டலும்*

3. சட்டமா அதிபர் திணைக்களம்

*அரசாங்கத்தின் சட்டம் தொடர்பான சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பது சட்டமா அதிபர் திணைக்களமாகும். அரசு சார்பாக வழக்குத் தொடுத்தல் மற்றும் வழக்குகளுக்கு ஆஜராகுதல் என்பன இத்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் பணிகளாகும். இலங்கையின் பிரதான சட்ட அதிகாரி சட்டமா அதிபராவார். அத்துடன் சட்டத் திணைக்களத்தின் தலைவரும் இவரேயாவர். ஜனாதிபதி அவர்களினால் அரசியல் திட்ட யாப்புச் சபையின் பரிந்துரைக்கமைய சட்டமா அதிபர் நியமனம் செய்யப்படுவார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

- *அரசு தொடர்பான வழக்குகளின்போது தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.*
- *அரசாங்க மற்றும் அரச நிறுவனங்கள் சார்ந்த வழக்குகளுக்கு ஆஜகுராதல்.*
- *அரசு தொடர்பான அல்லது அரசாங்கத்திற்கெதிரான சகல சட்ட நடவடிக்கைகளையும் கோவைப்படுத்தல்.*

- பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் சட்டங்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனையை வழங்குதல்.
- உயர் நீதிமன்றினால் விசாரிக்கப்படும் வழக்குகளுக்கு அரசு சார்பாக ஆஜராதல்.
- மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரது தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தேவையான பரிந்துரைகளை ஜனாதிபதிக்குப் பெற்றுக் கொடுத்தல்.

**4. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

நீதிமன்றம், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்குச் சட்டவியல், உணவியல் தொடர்பான துறைகளின் பகுப்பாய்வு, நிபுணத்துவ ஆலோசனைச் சேவை என்பவற்றை வழங்குவது அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களமாகும்.

''சட்டத்தை மதிக்கும் நேர்மையான சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்'' என்ற வாசகம் அரச இரசாயனச் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நோக்கக் கூற்றாகும். அத்துடன் செயற்றிறன் மிக்க மற்றும் பொதுவான நியாயமான தீர்ப்புக்கான செயற்பாடுகளுக்குப் பங்களிப்புப் செய்தல் இதன் பிரதான நோக்கமாக உள்ளது. பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற மாதிரிகளை பரீட்சித்துப் பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்கான விடய நிபுணர்கள் இத்திணைக் களத்தைச் சேர்ந்தவர்களாவர். சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்துடன் இணைந்து செயற்படும் நிறுவனங்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- நீதிமன்றம்
- பொலிஸ் திணைக்களம்
- சுகாதாரத் திணைக்களம்
- இலங்கை தர நிருணய நிறுவனம்
- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- தொழிலாளர் நியதிச் சபை
- குற்றவியல் விசாரணைத் திணைக்களம்
- சுங்கத் திணைக்களம்
- மதுவரித் திணைக்களம்
- இலங்கை தேயிலைச் சபை

**5. சிறைச்சாலைகள் திணைக்களம்**

பல்வேறு குற்றங்கள், சமூக விரோதச் செயல்கள் தொடர்பான குற்றவாளிகள் என நீதிமன்றினால் தீர்ப்பளிக்கப்படுகின்ற நபர்களைப் புனர்வாழ்வளித்து நல்ல பிரசைகளாக அவர்களை சமூகமயப்படுத்துதலே சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முக்கிய பணியாக உள்ளது. அத்தோடு பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுவர்களை தடுத்து வைத்தல் மற்றும் பராமரித்துப் பாதுகாத்தல் என்பன இத்திணைக்களத்தினால் ஆற்றப்படும் மற்றுமொரு முக்கிய பணியாக உள்ளது.

இலங்கையில் சிறைவாசம் அனுபவிப்பவர்களில் அதிகமானவர்கள் பாடசாலைக் கல்வியை முறையாகப் பூர்த்தி செய்யாதவர்கள் என்ற விடயம் புள்ளி விபரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளைப் பராமரிப்பதன் மூலம் நிறைவேற்றப்படுகின்ற நோக்கங்கள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- சிறைவாசம் புரிபவருக்கு முறையாகப் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் சட்டத்தை மதிக்கக்கூடிய மனித நேயமுள்ள பிரசையை உருவாக்குதல்.
- கைதிகளைப் பாதுகாப்பாகப் பராமரித்தல்.

6. **இலங்கைப் பாதுகாப்புப் படை**

*சமூகப் பாதுகாப்பினை வழங்குவதற்காக சேவையாற்றுகின்ற முக்கிய நிறுவனங்களில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கு பிரதான இடமுண்டு. ஆகவே, பாதுகாப்பு அமைச்சினால் நெறிப்படுத்தப்படுகின்ற படைகளாக இராணுவப்படை, கடற்படை, விமானப்படை என்பன உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு படைப் பிரிவு தொடர்பாகவும் தரம் 09 ஐச் சேர்ந்த மூன்று மாணவர் குழுக்களினால் சுவர்ப் பத்திரிகைக்கு வழங்கப்பட்ட ஆக்கங்களின் தகவல்கள் வருமாறு,*

### இலங்கை இராணுவப் படை

*இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் 1949 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இலங்கை இராணுவப் படை ஆரம்பிக்கப் பட்டது. 1972 ஆம் ஆண்டு இலங்கை இராணுவப் படைக்கு ஸ்ரீலங்கா இராணுவப் படை என்று பெயரிடப்பட்டது. தேச மக்களின் பாதுகாப்பிற்காகத் தரைப் பகுதிகளில் பாது காப்பை வழங்குவது இவர்களது பணியாகும். இலங்கை இராணுவப் படையின் மகுட வாசகம்* ''**தந்தை நாட்டுக்காக**'' (For the Fatherland) *என்பதாகும். அவ்வாறே தேசியரீதியாகவும் சர்வதேசரீதியாகவும் எதிர்கொள்ளப்படும் பல்வேறு போர் நிலைமைகளின்போது தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கு இராணுவம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது.*



### இலங்கைக் கடற் படை

*1950 டிசெம்பர் 9ஆம் திகதி இலங்கை கடற்படை ஆரம்பிக் கப்பட்டது. இது 1972 ஆம் ஆண்டிலிருந்து ''ஸ்ரீலங்கா கடற்படை'' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. ''நாட்டைச் சுற்றிய தங்க வேலி''* (The golden defence around the country) *என்பது இதன் மகுடவாசகமாகும். உள்வாரி யாகவும், வெளிவாரியாகவும் நாட்டுக்கு ஏற்படும் அச்சு றுத்தல்களிலிருந்து தாய் நாட்டைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது இலங்கை கடற்படையின் பிரதான பணியாகும். பெரும் சமுத்திரத்தோடு முட்டிமோதிப் பெரும் சிரமங்களுடன் நாட்டுக்குப் பாதுகாப்பு வழங்க குகின்ற இலங்கை கடற்படையானது தரையிலும் கடலிலும் நாட்டுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றது. அத்தோடு*



கடற்பாதைகளில் இரகசியமாக இடப்பெறக்கூடிய சட்ட விரோத போதைப்பொருள் விற்பனை, சட்ட ரீதியற்ற இடம்பெயர்வுகள் என்பவற்றைத் தடுத்தல் இலங்கை கடற் படை செய்கின்ற முக்கிய பணிகளாகும். அத்துடன் கடற்பரப்பு எல்லை மீறப்படுவதால் ஏற்படக் கூடிய சட்ட ரீதியற்ற முறையில் இடம்பெறும் மீன்பிடி நடவடிக்கை களும் இலங்கை கடற்படையினரால் தடுக்கப்படுகின்றது. இதுவும் அவர்கள் செய்கின்ற மாபெரும் பணியாகும். அத்துடன் இலங்கையிலுள்ள தீவுகளுக்கிடையே போக்குவரத்து வசதிகளை வழங்குதல், அனர்த்தங்களின்போது உதவி புரிதல், பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகளையும் நாம் பாராட்ட வேண்டும்.



## இலங்கை விமானப் படை

1951 மார்ச் 2 ஆம் திகதி இலங்கை விமானப்படை ஆரம்பிக்கப்பட்டது. இது 1972 ஆம் ஆண்டிலிருந்து ‘‘ஸ்ரீலங்கா விமானப்படை’’ என்ற பெயரால் அழைக்கப்படுகிற ‘‘இலங்கை வான்பரப்பைப் பாதுகாப்போம்’’ என்பது இலங்கை விமானப்படையின் மகுட வாசகமாகும். வான்வெளியை ஊடறுத்துச் சென்று ஆகாயப் பரப்பிலிருந்து தாய்நாட்டுக்குப் பாதுகாப்பு வழங்குவது இலங்கை விமானப்படையின் பிரதான பணிகளாகும். தேசியரீதியாகவும் சர்வதேசரீதியாகவும் தாய்நாட்டுக்கு ஏற்படக்கூடிய யுத்த நிலைமைகளிலிருந்து நாட்டைப் பாதுகாப்பது மட்டுமன்றி உள்நாட்டு விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இலங்கை விமானப் படையின் இன்னுமோர் பணியாகும். திடீர் அனர்த்த நிலையின்போது தரை வழியாக அல்லது நீர் வழியாக அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல், உயிர்ப் பாதுகாப்பு வழங்குதல், பாதுகாப்பு வழங்குதல் என்பன இலங்கை விமானப்படையினால் வழங்கப்படுகின்ற பணி களாக இருக்கின்றன.





இவை மாத்திரமன்றி சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சிவில் பாதுகாப்புப் படையானது முப்படைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் தேசியரீதியில் சேவையாற்றுகின்றது.

இலங்கை முப்படைகள் நாட்டு மக்களுக்காகச் சிறப்பான வகையில் பணியாற்று கின்றன. இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் இறைமையைப் பாது காத்தல் முப்படைகளின் பிரதான பணியாகக் காணப்படுகின்றன. தரை, கடல், ஆகாயப் பிரதேசங்களைப் பாதுகாப்பதுடன் மக்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு விபத்துக்கள், அனர்த்தங்களைத் தடுத்து சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்து முப்படைகள் தாய் நாட் டுக்காக சிறப்பான சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறன.

பாதுகாப்புப் படைகள், சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஆற்றுகின்ற பணிகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.


- தேசியரீதியாக அல்லது சர்வதேச நாடுகளின்மூலம் ஏற்படக்கூடிய போர் அச்சுறுத்தல்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்
- புரட்சிகள், கலவரங்கள் மற்றும் தீவிரவாதச் செயற்பாடுகளைத் தடுத்தல்
- நாட்டின் பௌதிக, மனித வளங்களைப் பாதுகாப்பதற்கு பொலிசுக்கு உதவுதல்
- திடீர் அனர்த்தம் மற்றும் விபத்துக்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் உதவிகள் புரிதல்
- வேலைநிறுத்தப் போராட்ட நேரங்களில் அத்தியாவசிய சேவையை தடையின்றி மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கல்
- பல்வேறு காரணங்களுக்காக இடம்பெயர்ந்துள்ளவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை வழங்குவதற்கு ஒத்துழைத்தல்
- தேசியரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்காக அவசியப்படும் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்குப் பக்கபலமாக இருத்தல்.

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் சமாதானத்திற்கான ஏக்கத்தையும் அதன் பெறுமதியையும் கண்ணதாசனின் சினிமாப் பாடலொன்றின் மூலம் அறிந்து கொள்வோம்.

அமைதிப் புறாவே அமைதிப் புறாவே
அழைக்கின்றேன் உன்னை
நிம்மதியே நிம்மதியே - நான்
நேசிக்கின்றேன் உன்னை
(அமைதிப் புறாவே)
காலங்களாலே தென்றல் வருக! புயலே வரவேண்டாம்.
மேகங்களாலே மழையே வருக! வெள்ளம் வரவேண்டாம்.
வீடுகள் தோறும் ஒளியே வருக! இருளே வரவேண்டாம்.
நாடுகள் தோறும் உறவே வருக! பகையே வரவேண்டாம்.
சமாதானமே சமாதானமே, தழுவுகின்றேன் உன்னை,
தர்ம தேவனே தர்ம தேவனே, சரணடைந்தேன் உன்னை,
(அமைதிப் புறாவே)
புத்தர் வழியில் அசோகன் சேவை, புரிந்தது எதற்காக?
புன்னகை முகமே தேவனின் வீடென, சொன்னது எதற்காக?
சத்திய நெறியை தாரணியெங்கும், தந்தது எதற்காக
சமாதானமாம் சமாதானமாம் தாயே உனக்காக.
(அமைதிப் புறாவே)

- கவிஞர் கண்ணதாசன்

## செயற்பாடு 1.6



*சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக செயற்படும் ஒரு நிறுவனம் பற்றிய விபரங்கள் அடங்கிய சிறு நூல் ஒன்றைக் (கையேடு) தயாரிக்குக.*


## 1.2 சமூகப் பாதுகாப்புக்கு பங்களிப்புச் செய்யும் பொறிமுறை தொடர்பான தனிநபர் பொறுப்புக்களும் கடமைகளும்

சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தும் பிரதான பொறுப்பு தனிநபருக்குரியதாக உள்ளது. அதற்கேற்ப சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்குத் தனிநபர் மூலம் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன. சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும்போது தனது கடமையைக் குறைவின்றி நிறைவேற்றுவது தனிநபரின் பொறுப்பாகும். ஒவ்வொரு பொறிமுறை தொடர்பாகவும் தனிநபரினால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளும் கடமைகளும் தொடர்பான சுருக்கமான விளக்கமொன்று இங்கு தரப்பட்டுள்ளது.

### 1.2.1 அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டதிட்டங்கள் தொடர்பான தனிநபர் பொறுப்புகளும் கடமைகளும்

அரசியலமைப்புச் சட்டம் என்பது நாட்டின் அடிப்படைச் சட்டமாகும். இது அதியுயர் சட்டமாகக் கருதப்படும். சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அரசியலமைப்புச் சட்டம், குற்றவியல் சட்டம் போன்ற பல சட்டப் பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு இணைந்ததாக செயல்படுவதும் சட்டதிட்டங்களை மதித்து அதற்குக் கீழ்ப்படிந்து செயலாற்றுவதும் அவசியமாகும்.

அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டதிட்டங்கள் தொடர்பாகத் தனிநபர் பொறுப்பும், கடமையும் என்ற தொனிப்பொருளில் தரம் 9 மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற உரையாடலொன்றின் போது இடம்பெற்ற சில கருத்துகள் இங்கு தரப்பட்டுள்ளன.




### 1.2.2 நீதிமன்றம் தொடர்பான தனிநபர் பொறுப்புகளும் கடமைகளும்


சமூகப் பாதுகாப்பு தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள பொறிமுறைகளுள் நீதிமன்றம் மிக முக்கியமானது. நீதிமன்றமானது நாட்டின் நியாயமான தீர்ப்பு வழங்கும் நிறுவனமாகும்.

**நீதிமன்றம் தொடர்பான பொறுப்புகளும் கடமைகளும்**


- நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு இடையூறு செய்யாது அதன் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்
- நீதிமன்றத்தை மதித்தல்
- நீதிமன்றை அவமதிக்கும் வகையிலான நடவடிக்கை களில் ஈடுபடாதிருத்தல்
- நீதிமன்றச் செயற்பாடு களுக்கு கீழ்ப்படிதல்
- நீதிபதிகளை மதித்தல்
- நீதிமன்றத்தின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுதல்

### 1.2.3 பொலிஸ் தொடர்பான தனிநபர் பொறுப்புகளும் கடமைகளும்

சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பொலிஸார் பெரும் பணியாற்றுகின்றனர். அதற்காக தனிநபர் என்ற வகையில் எம்மால் நிறைவேற்றக் கூடிய பொறுப்புகளும் கடமைகளும் பல காணப்படுகின்றன. உதாரணத்திற்காக சில விடயங்கள் கீழுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளன.



## செயற்பாடு 1.7



- பின்வரும் அட்டவணையில் நிரல் I இல் சமூகப் பாதுகாப்புக்காக பொலிஸ்மூலம் ஆற்றப்படும் பணிகள் சில குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை சிறப்பாக நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தனிநபரினால் நிறைவேற்றக் கூடிய கடமைகளை நிரல் II இல் பூரணப்படுத்துக.

| **நிரல் I**<br>**பொலிஸ்மூலம் ஆற்றப்படும் பணிகள்** | **நிரல் II**<br>**பிரஜைகள்மூலம் நிறைவேற்றக் கூடிய கடமைகள்** |
|---|---|
| வீதிப் பாதுகாப்பு | |
| போதைப்பொருள் நிவாரணம் | |
| டெங்கு போன்ற பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல் | |
| சுற்றாடல் பாதுகாப்பு | |

### 1.2.4 பாதுகாப்புப் படை தொடர்பான தனிநபர் பொறுப்புகளும் கடமைகளும்

பாதுகாப்பு படையினரால் சமூகப் பாதுகாப்பிற்காக அளப்பெரிய சேவை வழங்கப்படுகின்றது. இச்சேவையைப் புரிவதனால் அவர்கள் நாட்டின் காவலர் களாக மதிக்கப்படுகின்றார்கள். பாதுகாப்புப் படையினருக்குரிய பணிகள் நிறைவேற்றப்படும்போது தனிநபர் என்ற வகையில் எம்மால் அவர்களுக்காக நிறைவேற்றமுடியுமான கடமைகளும் பொறுப்புக்களும் காணப்படுகின்றன. அவற்றிற் சில பின்வருமாறு

- சமாதானத்தையும், பாதுகாப்பையும் அமுல்படுத்துவதற்கு உதவியாக இருத்தல்
- அனர்த்த உதவிப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- போரில் இறந்தவர்களின் நலன்புரி விடயங்களுக்கு இயன்ற வகையில் பங்களிப்புச் செய்தல்
- புரட்சி, குழப்பங்களின் போது பாதுகாப்பு படையினருக்கு அறிவித்தல்
- போரில் இறந்த மற்றும் அங்கவீனமுற்ற படை வீரர்கள் தொடர்பில் அனுதாபம் காட்டுதல்
- பாதுகாப்புப் படையினரால் உயிரை துச்சமாக மதித்து செயற்படும் பணிகளை மதித்தல்
- புரட்சிகளை தடுக்கும் பணிகளுக்கு இடையூறு விளைவிக்காதிருத்தல்



## 1.2.5 இணக்க சபைகள் தொடர்பான தனிநபர் கடமைகளும் பொறுப்புகளும்

இலங்கையில் இணக்க சபைகள் 1988ம் ஆண்டின் இல 72ஆம் இலக்க இணக்க சபைகள் சட்டத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப் பட்டது.

இம்முறையின் மூலம் மக்களுக்கு ஏற்படும் சிறு பிணக்குகளை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லாமல் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட் டுள்ளது. இதன் மூலம் சமூகத்தில் அதிகரித்துக் காணப்படும் பிரச்சினைகளைக் குறைப் பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இணக்க சபைகளுக்கான அங்கத்தவர்கள் இணக்க சபை ஆணைக்குழு மூலம் நியமனம் செய்யப்படுகின்றார்கள். இச்சபைக்கு அங்கத்தவர்களாகக் கல்விமான்கள், புத்தி ஜீவிகள் மற்றும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தையுடைய நபர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

பிணக்கொன்றை இணக்க சபைக்குக் கொண்டு செல்வதற்கான மூன்று வழிமுறைகள் காணப்படுகின்றன. அவையாவன,

1. பொலிஸ் மூலம்
2. நீதிமன்றம் மூலம்
3. தனிப்பட்டோர் சபையுடன் தொடர்பு கொள்வதன் மூலம்

இணக்க சபைகள்மூலம் ஆற்றப்படும் சேவையைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள் வதற்கு தனிநபர் கடமைகளும் பொறுப்புகளும் நிறைவேற் றப்படுதல் வேண்டும். அவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

**இணக்கசபை தொடர்பான தனிநபர் கடமைகளும் உரிமைகளும்**

- இணக்க சபையொன்றுக்கு பிரச்சினைகளை முறைப்பாடு செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்
- சிறிய பிணக்குகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வ தற்காக இணக்க சபையை நாடுதல்.
- இணக்க சபையால் முன்வைக்கப்படும் தீர்ப்புகளுக்கு மதிப்பளித்தல்
- இணக்கப்பாட்டாளருக்கும் ஏனைய தரப்பினருக்கும் அவர்களது கௌரவம் பாதிக்கப்படாதவாறு நடந்து கொள்ளல்
- இணக்க சபை ஊடாக ஏற்படுத்திக் கொள்கின்ற உடன் பாட்டிற்கமைய இணக்கப்பாட்டைக் கடைப்பிடித்தல்
- அவர்களுடன் நல்ல முறையில் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்ளல்.

### 1.2.6 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தொடர்பான தனிநபர் கடமைகளும் பொறுப்புக்களும்

*1998 ஆம் ஆண்டின் 50ஆம் இலக்கப் இலக்கம் 50 ஐக் கொண்ட பாராளுமன்ற சட்டமூலத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உருவாக்கப்பட்டது. சிறுவர் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கும் அத்தகைய துன்புறுத்தல்களினால் பாதிக் கப்பட்ட சிறுவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்குவதை நோக்காகக் கொண்டு இது ஸ்தாபிக்கப்பட்டது.*


| **நோக்கக் கூற்று** | **பணிக் கூற்று** |
|---|---|
| சிறுவர்களுக்காக நட்புள்ள, பாதுகாப்பான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல் | சிறுவர்கள் சகல விதமான துஷ்பிரயோகங் களிலிருந்தும் சுதந்திரமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துதல். |

*தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மூலம் ஆற்றப்படுகின்ற சேவைகள் சில பின்வருமாறு,*

*சிறுவர் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களைக் கொடுப் பதற்கான நேரடித் தொலைபேசி இலக்கமான 1929 ஐப் பயன்படுத்துதல்.*

- *சட்டத்துக்குப் புறம்பான சிறுவர் உரிமை மீறல் நடைபெறும்போது அதில் தலையீடு செய்தல்.*
- *சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகச் சட்டரீதியாக தலையிடுதல்.*
- *கல்விக் கண்காட்சி, அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.*
- *பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உளவியல், சமூக மயமாக்கல் சேவைகளை வழங்குதல்.*
- *சுனாமி, பெற்றோர், பாதுகாவலர் அர்ப்பணிப்பு வேலைத்திட்டங்களை நடைமு றைப்படுத்தல்.*
- *விசேட பொலிஸ் விசாரணையை முன்னெடுத்தல்.*

*மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பெரும் சேவையாற்றுகின்றது. அப்பணிகளினூடாக சமூகப் பாதுகாப்பை ஏற்படுத் துவதற்கு அதனோடு தொடர்புடைய தனிநபர் கடமைகளும் பொறுப்புகளும் காணப் படுகின்றன.*




மேற்குறிப்பிடப்பட்ட கடமைகள் மற்றும் உரிமைகளை அடைந்து கொள்வதினூடாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சமூகப் பாதுகாப்புக்காக வழங்குகின்ற பங்களிப்புக்கு எமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

### 1.2.7 மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான தனிநபர் பொறுப்புகளும் கடமைகளும்





*மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது.*

மனித உரிமைகளைப் பாதுகாப்பதினூடாக இவ் ஆணைக்குழு சமூகப் பாதுகாப்புக்கான பெரும் பணியை ஆற்றுகின்றது. இப்பணிகளை நிறைவேற்றுவதற்குத் தனிநபர் என்ற வகையில் எமக்கும் ஆணைக்குழுவோடு இணைந்த கடமைகளும் பொறுப்புகளும் காணப்படுகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு,

- மனித உரிமைகள் மீறப்படுமிடத்து அவை தொடர்பான முறைப்பாட்டை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல்.
- மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு மதிப்பளித்தலும் அதற்கு கீழ்ப்படிதலும்.
- மனித உரிமைகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் பங்கு கொள்ளல்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படும்போது அதற்குத் தேவையான சரியான தகவல்களை வழங்குவதன் மூலம் அதற்கு ஒத்துழைப்பு நல்குதல்.
- மனித உரிமைகளுடன் இணைந்த கடமைகளை நிறைவேற்றுதல்.

## செயற்பாடு 1.7



- *சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக செயற்படுகின்ற நிறுவனங்கள் சிலவற்றின் பெயர்கள் அட்டவணையில் நிரல் I இல் தரப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களுடன் இணைந்த உமது கடமைகளை நிரல் II இல் எழுதிக் காட்டுக.*

| நிரல் I<br>சமூகப் பாதுகாப்புக்காக செயலாற்றும் நிறுவனங்கள் | நிரல் II<br>எம்மால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் |
|---|---|
| 1. நீதிமன்றம் | |
| 2. பாதுகாப்புப் படை | |
| 3. இணக்க சபை | |
| 4. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | |
| 5. மனித உரிமைகள் ஆணைக்குழு | |



## சாராம்சம்

- தனியாட்களுக்கும் சமூகத்துக்கும் இடையில் பிரிக்க முடியாத அன்னியோன்னியத் தொடர்பு காணப்படுகின்றது.
- சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு உரிய வாய்ப்புகள் உயர்ந்த நிலையில் பேணப்படுவதை உறுதிப்படுத்துதலே சமூகப் பாதுகாப்பாகும்.
- சமூகப் பாதுகாப்புக்காகப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களுள் குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் என்பன முக்கியமானவையாகும்.
- சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்டதிட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- நீதிமன்றம், பொலிஸ், பாதுகாப்புப்படை, இணக்கசபை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட பல நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக இலங்கையில் செயற்படுகின்றன.
- சமூகப் பாதுகாப்புக்காகச் செயற்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பில் பிரசைகளினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் பல காணப்படுகின்றன.
- தனிநபர் கடமைகளை முறையாக நிறைவேற்றுதல் மற்றும் பொறி முறையை உரியவாறு செயற்படவைத்தல் என்பன சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவதற்கு மிகவும் அவசியமாகும்.
- சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் நாட்டின் அபிவிருத்திக்கும் நிலையான சமாதானத்துக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

# 2 சமகால மாற்றங்கள்

### அறிமுகம்

விஞ்ஞானத்தின் வளர்ச்சி மற்றும் பல்வேறு ஆராய்ச்சிகளினதும் தேடல்களினதும் விளைவாகப் பல புதிய கண்டுபிடிப்புகள் தோன்றின. அதற்கமைய மனிதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழினுட்பக் கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கு மனிதனால் முடிந்தது. இதனால் மனித நடவடிக்கைகளை மிகவும் இலகுவாக்கிக் கொள்வதற்குத் தொழினுட்பம் அவசியமான ஒன்றாக மாறியது. தொழினுட்பத்தின்மூலம் பொருளாதாரத்தின் பல துறைகளிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. அவை மனித வாழ்வில் சாதகமான வகையில் மாத்திரமன்றி பாதகமான வகையிலும் செல்வாக்குச் செலுத்தக் கூடியவை. இதன் காரணமாக சமகால மாற்றங்கள் குறித்த தொடர்ச்சியான கவனத்தை நாம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,**

- தொழினுட்பம் என்றால் என்ன?
- புதிய தொழினுட்பக் கருவிகளின் பயன்பாடு
- மனித வாழ்வில் தொழினுட்பம் சாதகமாகவும் பாதகமாகவும் செல்வாக்குச் செலுத்தும் விதம்
- பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம்
- பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சமகால மாற்றங்கள்
- இத்தகைய மாற்றங்களை அனுசரித்துச் செயற்படுதல்
- தொழிற் சந்தையும் அதன் பரம்பலும்
- புதிய தொழில் வாய்ப்புக்களுக்காகப் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள்
- போட்டிகரமான உலகுடன் இணைந்து செயற்படுகையில் நல்வாழ்வுடன் கூடிய சகவாழ்வின் அவசியம்
- கூட்டுறவு இயக்கம், அதன் பொறுப்புகள் மற்றும் அவற்றின்மூலம் வழங்கப் படும் சேவைகள்
- சமகால மாற்றங்களுக்கு அமைவாக தேசிய அடையாளத்தைப் பாதுகாத்தவாறு கொண்டு பூகோளக் கிராமத்தின் ஓர் உறுப்பினர் என்றரீதியில் செயற்படு வதற்கான அனுபவங்களை விருத்திசெய்து கொள்வதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்துதல் போன்ற பல பயன்களை அடைந்து கொள்ளவும்

**இயலுமாகும்.**

## 2.1 தொழினுட்ப மாற்றங்களும் அதன் பிரதிபலிப்பும்


### 2.1.1 தொழினுட்பம் ஓர் அறிமுகம்

மனிதர் ஆரம்பக் காலம் முதலே தமது நடவடிக்கைகளை இலகுவாக்கிக் கொள்வதற்காக பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தியுள்ளனர். அதற்குரிய ஊக்கம் பிறப்பிலேயே மனிதரிடத்தே காணப்படுகின்றது. இதன்படி ''மனிதன் தமது நடவடிக்கைகளை மிகவும் இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளே'' தொழினுட்பமாகும் என எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

### 2.1.2 தொழினுட்ப மாற்றங்கள்

மானிய முறையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மனிதர்கள் நூல்களைத் தேடிப் பெற்று வாசித்தறிய முற்பட்டனர். இது மனித சிந்தனையாற்றல் விருத்தியடைவதில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தியது. இதன்பேறாக விஞ்ஞானமும் தொழினுட் பமும் படிப்படியாக வளர்ச்சி கண்டன. இதற்கமைவாக பல்வேறு புதிய கண்டு பிடிப்புக்கள் உலகிற்கு அறிமுகமாயின. இவற்றின் இறுதி விளைவாக உலகின் முழு சமூகத்திலும் தொழினுட்ப மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன்மூலம் தொழினுட்பமானது மனிதர்களின் தேவைகளை இலகுவாக்கிக் கொள்வதற்குரிய வழிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பது தெளிவாகின்றது.

வேடுவர் யுகத்தில் வாழ்ந்த மனிதர்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்லாயுதங்களைப் பயன்படுத்தினர். அவை பிற்காலத்தில் படிப்படியாக முன்னேற்றம் கண்டன. ஆதிகால மனிதரின் வாழ்வு மிகவும் எளிமையானதாகவே காணப்பட்டது. இதனால் அவர்கள் தமது குடியிருப்புக்கு இயற்கையின் கொடையாக விளங்கிய கற்குகைகளைப் பயன்படுத்தினர். இருப்பினும் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழினுட்பங்களில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக இந்நிலைமை படிப்படியாக மாற்றத்திற்குள்ளாகியது. இதன் விளைவாகக் கற்குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் தற்காலத்தில் அதிநவீன முறைகளில் நிருமாணிக்கப்படும் சொகுசு வீடுகளை தமது வாழிடங்களாக மாற்றிக் கொண்டுள்ளனர்.



தொழினுட்ப முன்னேற்றத்துடன் மனிதர்களின் தேவைகளும் அதிகரித்தன. இதன் விளைவாக ஆரம்ப காலங்களில் பயன்படுத்திய கல்லாயுதங்களுக்குப் பதிலாக பல்வேறு விஞ்ஞான தொழினுட்பக் கருவிகள் உலகிற்கு அறிமுகமாயின. ஆரம்ப காலம் முதல் இன்றுவரை வீட்டுச் சமையலறை உபகரணங்களை பரிசீலனை செய்வதன்மூலம் இது குறித்து மிகவும் தெளிவான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.



பாரம்பரிய வீடொன்றின் சமையலறை



நவீன வீடொன்றின் சமையலறை

## 2.1.3 ஆய்வுகள், பரிசோதனைகள் மூலமான புதிய கண்டுபிடிப்புகள்

சனத்தொகை படிப்படியாக அதிகரித்ததோடு மனிதத் தேவைகளும் கூடவே அதிகரித்தன. அத்தகைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக கருவிகளின் தேவையும் ஏற்பட்டது. இதற்கு உறுதுணையாக 18 ஆம் ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாக பல புதிய கண்டுபிடிப்புக்களும் உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டன. இதற்கு அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் பெரும் தாக்கம் புரிந்தன. **''விஞ்ஞானபூர்வ முறைகளைப் பின்பற்றி பிரச்சினையொன்று தொடர்பான தீர்வினைத் தேடுகின்ற செயன்முறை ஆராய்சியாகும்.''** தற்கால உலகில் கண்டுபிடிப்புகளும் ஆராய்சிகளும் விசேடமான வகிபங்கினை மேற்கொள்கின்றன. இதன்படி மனித தேவைகளும் அதிகரித்து வருகின்றன. அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக முன்னேற்றகரமான கருவிகளின் தேவைகளும் ஏற்படுகின்றன. இது தொழினுட்ப உற்பத்திகள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதானமான காரணியாகும் எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது.

## 2.1.4 தொழினுட்ப முன்னேற்றத்துடன் ஏற்படும் சமூக மாற்றம்

தொழினுட்ப மாற்றமானது சமூகத்தின் பல்வேறு துறைகளில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒன்பதாம் தர மாணவர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சில முன்வைப்புக்கள் கீழே காணப்படுகின்றன. இவற்றைக் கற்பதனூடாக தொழினுட்ப மாற்றங்கள் அந்தந்தத் துறைகளில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்குகளை மேலும் விளங்கிக் கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

ஆரம்ப காலம் முதல் இன்றுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளுக்கு அமைய தொழினுட்பத்தின் காரணமாக பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை தெளிவாகின்றது. இத்தகைய மாற்றங்கள் காரணமாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள் கீழே காணப்படுகின்றன.

- மனிதரின் நுகர்வுக்கோலம் மாற்றமடைந்தமை
- பல்வேறு புதிய தொழில்கள் உருவாகியமை
- புதிய வடிவமைப்புகள் தோற்றம் பெற்றமை
- நவீன மருத்துவ முறைகள் தோற்றம் பெற்றமை
- உணவுப் பொருள்கள், பானங்களின் உற்பத்தியும் பயன்பாடும் மாற்றமடைந்தமை
- ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு முறைகள் மாற்றம் கண்டமை
- சமூகத் தொடர்புகள் இலகுவாகியமையும் விரிவடைந்தமையும்
- பழைய சம்பிரதாய முறைகளும் கலைகளும் மறைந்து போனமை
- மனிதரின் விருப்பு வெறுப்புகள் மாற்றமடைந்தமை

- **தொழினுட்ப மாற்றத்தின் மூலம் மனித வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சாதக, பாதக விளைவுகள்**

தொழினுட்ப மாற்றங்கள் எவையானாலும் அவை மனிதரால் பயன்படுத்தப்படுவதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகள் பலவாகும்.

**சாதகமான விளைவுகள்**

- வேலைகள் இலகுவாக்கப்பட்டமை
- நேரம் மீதப்படுத்தப்பட்டமை
- பயன்பாடு அதிகரித்தமை
- விளைதிறன் அதிகரித்தமை
- மானிட சமூகத் தொடர்புகள் இலகுவாகியமை
- வளங்களின் விரயம் குறைவடைந்தமை

**பாதகமான விளைவுகள்**

- மனிதர் பொருத்தமற்ற நுகர்வுக் கோலத்திற்கு மாறியமை
- மனித வாழ்வு இயந்திரமயமாகியமை
- சமூகச் சிக்கல்கள் அதிகரித்தமை
- சமூகத் தொடர்புகள் வீழ்ச்சியடைந்தமை
- சுற்றாடல் மாசடைதல் வேகமடைந்தமை
- மனித தேவைகள் அதிகரித்தமை
- மனிதர் பல்வேறு நோய்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகியமை

### 2.1.5 ஆக்கத்திறன்மிக்க ஒரு பிரசையென்ற வகையில் தொழினுட்ப மாற்றங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்

பல்வேறு துறைகளில் ஏற்பட்ட தொழினுட்ப மாற்றங்கள் குறித்து நாம் இதுவரை நோக்கியிருந்தோம். தொழினுட்பத்தை மனிதர்களது நலன்களுக்காகப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற பிரதிபலன்கள் அளப்பரியனவாகும். பல்வேறு நடவடிக்கைகளுக்காகத் தொழினுட்பத்தை ஆக்கத்திறனுடையதாகப் பயன்படுத்துவது சிறந்ததாகும் என்பது கீழ்வரும் கவிதைவரி மூலம் எமக்குத் தெளிவாகின்றது.

> ''புதுப்புது விடயங்களை அறியாதவர் உலகை அறியார்.''
> குமாரதுங்க முனிதாச

அவ்வாறு தொழினுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

- வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக
- பல்வேறு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக (கல்வி, போக்குவரத்து, தொடர்பாடல், சுகாதாரம்)
- ஓய்வு மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக
- சமூகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்காக
- புத்தாக்கங்களை உருவாக்குவதற்காக
- உற்பத்திகளை வினைத்திறனான வகையில் அதிகரித்துக் கொள்வதற்காக

இவை போன்ற அநேக நடவடிக்கைகளுக்காக இன்று தொழினுட்பம் பயன்படுத்தப் படுகிறது. தொழினுட்பத்தைப் பொருத்தமான வகையில் பயன்படுத்துவது தனிப் பட்டவர்களிடத்தில் ஆக்கத்திறன் வளர்வதற்குக் காரணமாகின்றது.

### 2.1.6 பேண்தகு தொழினுட்பம்

நாட்டில் நிலவக்கூடிய சமூக, பொருளாதார, கலாசார, சுற்றாடல் கோலத்திற்கு ஏற்ப தொழினுட்பங்களைப் பயன்படுத்துவது பேண்தகு தொழினுட்பம் என எளிமையாகக் குறிப்பிடலாம். உதாரணமாக மனித வளத்தைக் குறைவாகக் கொண்ட நாடுகள் உச்சப் பயனைப் பெறுவதற்காக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதனைக் காணலாம். மரபுரீதியான கைத்தொழில்களைப் பாதுகாத்துக் கொண்டு கைத்தொழில் மயமாக்கத்திற்கு உட்படுத்தல் நாட்டின் உற்பத்தித்துறைக்குப் பொருந்தும் வகையில் கைத்தொழிற்றுறைகளை முன்னேற்றுதல் போன்றன தொடர்பில் தொழினுட்பத்தைப் பயன்படுத்தும்போது கவனஞ் செலுத்துவது முக்கியமானதாகும்.

### 2.1.7 பேண்தகு அபிவிருத்தியை (நிலையான அபிவிருத்தி) ஏற்படுத்துவது தொடர்பில் பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகள்

பேண்தகு அபிவிருத்தி என்பது நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியதும் வளங்களைப் பேணக்கூடியதுமான அபிவிருத்தியாகும். அதாவது எதிர்காலச் சந்ததியினரின் தேவை களைக் கருத்திற் கொண்டு வளங்களை இல்லாமல் செய்யாது சுற்றாடலுக்குத் தீங்கு ஏற்படாத வகையில் சமகால நடவடிக்கைகளுக்காக வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியே நிலையான அபிவிருத்தி அல்லது பேண்தகு அபிவிருத்தி எனப்படும். இங்கு நாட்டில் காணப்படக்கூடிய வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெறுவதோடு விரயங்களைத் தவிர்த்து அபிவிருத்தியை மேற்கொள்ளல் இடம்பெறுகின்றது. பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற பயன்கள் பல வகைப்பட்டவையாகும். அவற்றுள் சில வருமாறு,

- வளங்கள் அழிவடைதல் தடுக்கப்படுகிறது.
- மனித வளத்திலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ள முடிகிறது.
- சுற்றாடற் பாதிப்பு குறைவடைகிறது.
- சுற்றாடற் சமநிலையைப் பேணிப் பாதுகாக்க முடிகிறது.
- நாட்டின் பொருாதாரத்தைப் பேணிட முடிகிறது.

## செயற்பாடு 2.1



- உமது வீட்டில் பயன்படுத்தக்கூடிய பல்வேறு தொழினுட்ப உபகரணங்கள் பற்றி அறிந்து பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| தொழினுட்ப உபகரணங்கள் | பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்கள் |
|---|---|
| A | 1 ................................................................<br>2 ................................................................ |
| B | 1 ................................................................<br>2 ................................................................ |

- Face book, instergram, linked In என்பன இன்றைய சமூக வலைத்தளங்களில் சிலவாகும். இவற்றின் மூலம் தனியாள் தொடர்புகள் மேலும் விரிவடைகின்றன. கல்வி நிகழ்ச்சிகள், மரநடுகை, சிறுநீரக நோயாளிகளுக்கு உதவுதல், வீடு கட்டிக் கொடுத்தல் முதலிய சமூக சேவைகள் இதன் மூலம் ஆற்றப்படுகின்றன. ஆயினும் இச்சமூக வலைத்தளங்கள் மூலம் பாரிய சமூகச் சீர்கேடுகளும் ஏற்பட்டுள்ளன. அவ்வாறாகச் சமூக சீர்கேடுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றைத் தடுத்துக் கொள்ளும் முறைகள் இரண்டையும் குறிப்பிடுக.
- தொழினுட்ப மாற்றத்தின் காரணமாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளைப் பட்டியல்படுத்துக.
- மேற்படி பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதை முன்வைக்குக.
- நாளாந்த நடவடிக்கைகளின்போது பயன்பெறக்கூடிய புதிய உற்பத்திகளின் முக்கியத்துவம் பற்றிய குறிப்பொன்றை எழுதுக.

## 2.2 பொருளாதாரத் துறையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள்

### 2.2.1 தொழினுட்பத்தினால் பொருளாதாரத் துறையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள்

மனிதர்களின் வரையறையற்றதும் சிக்கலானதுமான தேவைகளை நிறைவு செய்வதற்காக சுற்றாடலின் வளங்கள் பெருமளவில் நுகரப்படுகின்றன. அத்தகைய வளங்கள் மிகவும் வரையறுத்த அளவிலேயே சுற்றாடலில் காணப்படுகின்றன. இந்த வளங்களை உபயோகித்து தமது தேவைகளுக்காக பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கு ஆரம்பகாலம் முதல் மனிதர் முயற்சி செய்துள்ளனர். அதற்கேற்ப எந்தவொரு நாட்டினதும் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பிரதான செயற்பாடுகளை மூன்றாக வகைப்படுத்த முடிகிறது.

- உற்பத்தி
- பங்கீடு
- நுகர்வு

பொருளாதார முறைமையொன்றில் நிலவும் மனிதர்களது தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் வளங்களை மாற்றியமைத்தல் **உற்பத்தி** எனப்படுகிறது. மனித உழைப்பு மற்றும் தொழினுட்ப முறைகளையும் பயன்படுத்தி கிடைக்கும் வளங்களை மனித தேவைகளுக்கேற்ற விதத்தில் பொருட்களாக மாற்றியமைத்தல் உற்பத்தியின்போது இடம்பெறுகிறது. இங்கு இடம்பெறும் பிரதான செயற்பாடு மூலப் பொருள்கள் முடிவுப் பொருள்களாக மாற்றப்படுவதாகும்.

உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருள்கள் மற்றும் சேவைகளை நுகர்வோரிடம் வரை கையளிக்கும் **செயன்முறை பங்கீடு** எனப்படுகிறது. இதற்ககாக போக்குவரத்து ஒரு பிரதான தேவைப்பாடாக விளங்குகிறது. பொருளாதார முறையொன்றில் உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருள்கள் சேவைகளைப் பயன்படுத்தி மனிதர்களது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வது **நுகர்வு** எனப்படுகிறது.

பொருளாதாரத் துறையில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பிரதானமாக மூன்று பிரிவுகளின் கீழ் நோக்கலாம்.

**பொருளாதாரத் துறையில் ஏற்படும் மாற்றங்கள்**
- விவசாயத் துறை
- கைத்தொழில் துறை
- சேவைத் துறை

### 2.2.1.1 விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள சமகால மாற்றங்கள்

இலங்கை புராதன காலம் முதலே விவசாயத்தைச் சீவனோபாயமாகக் கொண்டதொரு நாடாகவே இருந்து வந்துள்ளது. இதில் நெற்செய்கை பிரதான இடம் வகிக்கிறது. மேட்டுநில விவசாயமாக சேனைப் பயிர்ச்செய்கை இருந்து வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக மரக்கறிகள், பழவகைகள், கிழங்கு வகைகள், தானியங்கள் மற்றும் பலசரக்குப் பயிர்கள் போன்றனவும் விவசாயத் துறையில் அடங்கும்.

மேலைத்தேய நாட்டவரின் ஆக்கிரமிப்பையடுத்து பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பிரபல்யமானதாக மாற்றமடைந்தது. இதன்கீழ் வர்த்தகப் பயிர்களான தேயிலை இறப்பர் தெங்கு என்பவற்றுக்கு விசேட முக்கியத்துவம் வழங்கப்பட்டது. எனினும், இவை முதன்மை உற்பத்திகளாகவே இடம்பெற்றன. தொழினுட்பத்தில் ஏற்பட்ட விரைவான முன்னேற்றம் காரணமாக இந்நாட்டின் விவசாயத் துறையில் தெளிவான முன்னேற்றத்தினைக் காணமுடிந்தது. தற்போதைய விவசாயத் துறையில் இவ்வாறான வகையில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்கள் பலவற்றைக் காணமுடிகின்றது.

உதாரணம் :-

- நிலத்தைப் பண்படுத்தல், பயிர்நடுகை, அறுவடை செய்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்காக இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- இரசாயன வளமாக்கிகளினதும் பூச்சிநாசினிகளினதும் பயன்பாடு
- குறுங்காலப் பயிரினங்கள், வித்துகளின் கண்டுபிடிப்பு மரபணுமாற்றம் செய்யப்பட்ட புதிய விதையினங்கள் மற்றும் ஒட்டு முறை விருத்தி மூலமான தாவரங்கள் என்பவற்றின் அறிமுகம்
- முளைதிறன் தொழினுட்பப் பயன்பாடு
- புதிய நீர்ப்பாசன முறைகளின் பயன்பாடு
- புதிய பயிரிடல் முறைகள் மற்றும் பசுமை இல்லப் (Green) பயிரிடல் முறையின் பயன்பாடு
- உற்பத்திப் பல்வகைமையாக்கம்

**விவசாயத் துறையில் தொழினுட்பப் பயன்பாடு**


நிலத்தைப் பண்படுத்தல்


நாற்று நடுகை


அறுவடை

*இரசாயனப் பசளை மற்றும் பீடை நாசினிப் பாவனை*



*இரசாயனப் பசளையிடல்*



*பீடை நாசினிப் பாவனை*

**விவசாய நடவடிக்கைகளில் புதிய நீர்ப்பாசன முறைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்**





*விசிறல் முறையிலான நீர்ப்பாசனம்*

புதிய பயிரிடல் முறை



*பச்சை இல்லத்தில் பயிரிடல் முறை*



*நீர்மய ஊடாக வளர்ப்பு*

பல்வகைமையாக்கம் செய்யப்பட்ட தேயிலை உற்பத்திகள் சந்தைக்கு வழங்கப்படும் முறைகள் (தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்)



உடன் தேயிலை



சேதனத் தேயிலை (திரவ நிலை)



பெட்டிகளில் அடைக் கப்பட்ட தேயிலை





பச்சைத் தேயிலை



கருந்தேயிலை



சிறுபொதி முறையிலான தேயிலை

### 2.2.1.2 கைத்தொழிற்றுறையில் ஏற்படும் மாற்றங்கள்

இதற்கு மேலதிகமாக விவசாய உற்பத்தியின் கீழ் நெல்லுற்பத்தி உட்பட ஏனைய தானிய வகைகளின் செய்கையினை முன்னேற்றுவது தொடர்பில் நவீன தொழினுட்பங்களின் பயன்பாடு பரவலடைந்துள்ளது. பின்வருவன அதற்கான உதாரணங்களாகும்.

- மனித உழைப்பிற்குப் பதிலாக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துதல்
- ஒன்று திரட்டும் கைத்தொழில் உருவாதல்
- அதிதொழினுட்பக் கைத்தொழில் உருவாதல்
- உற்பத்திச் செயற்பாடுகளுக்கு ரோபோக்களைப் பயன்படுத்துதல்
- இலத்திரனியல் தொழினுட்பத்தையும் நனோ தொழினுட்பத்தையும் பயன் படுத்தல்
- பல்வேறு ஆய்வுகளுக்கும் பரிசோதனைகளுக்கும் தேவையான சாதனங்களை உருவாக்குதல் (செய்மதிகள், ரொக்கட்டுகள்)


முதலிய துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.



வாகன உற்பத்தித் தொழிற்சாலை



வீட்டு ஜன்னல்களுக்குப் பயன்படுத்தப்படும் வெளித்தெரியக் கூடிய சூரியப்படலம்



தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் நனோ ரோபோ இயந்திரம்

### 2.2.1.3 சேவைகள் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

தற்காலப் பொருளாதார முறைமையில் சேவைகள் துறையும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது. பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி தொடக்கம் நுகர்வு வரை பல்வேறு மட்டங்களில் சேவைகள் வழங்கல் இடம் பெறுகிறன. இங்கு கல்வி, சுகாதாரம், வங்கி, காப்புறுதி, போக்குவரத்து மற்றும் வர்த்தத் துறை போன்ற பல்வேறு பிரிவுகளின் மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் சேவைகள் துறை ஏனைய துறைகளிலும் பார்க்க தற்காலத்தில் முன்னிலை வகிப்பதைக் காணமுடிகின்றது.

**கல்வி**

கல்வித்துறை முன்னேற்றத்தில் தொழினுட்பத்தின் செல்வாக்கு

**துவாரகா :** ஆரம்ப காலத்தில் கிராமத்துப் பிள்ளைகள் கிராமத்திலுள்ள படித்த முதியவரிடமே கல்வி கற்றனர். இது குரு வீடு எனப்பட்டது. பின்பு பன்சல, பிரிவேனாக்கள் உள்ளிட்ட சமய நிறுவனங்களில் கல்வி வழங்கப்பட்டது. அக்காலத்தில் மணல் தட்டுகளில் எழுதிப் பின்னர் கரும்பலகைக்கு மாறினர்.



மணல் தட்டு

**பவித்ரா :** எமது நாட்டில் ஐரோப்பிய நாட்டவர் ஆட்சி செய்த காலத்திலேயே முறையான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போதே கரும்பலகையும் வெண்கட்டியும் பயன்படுத்தப்பட்டன



சிலேட்

**அமீனா :** எமது பாடசாலையைத் தான் பாருங்களேன்! கல்வியைக் கற்பதற்கு எவ்வளவு வசதிகள் தற்போதுள்ளன. மின்சாரம், வானொலி, தொலைக்காட்சி, மேந்தலை எறியி, கணினி போன்ற கருவிகள் எமது கல்வி நடவடிக்கைகளுக்கு பலம் சேர்க்கின்றன. இல்லையா?...



மேந்தலை எறியி (OHP)

**சிந்துஜா:** தற்காலத்தில் கல்வித் துறையின் தொழினுட்பங்களைப் பயன்படுத்துவது பிரதானமானதாக மாறியுள்ளது. இணையத்தைப் பயன்படுத்தி உலகின் வேறு நாடுகளில் நடைமுறையிலுள்ள கற்கைகளை நிகழ்நிலை (Online) முறையில் கற்பதற்கு எமக்கு முடியுமாக உள்ளது.



பல்லூடக எறியி

**மிதுனன் :** கல்வியில் இப்புதிய கல்வி முறை இணையம்மூலம் கற்றல் (e – Learning) எனப்படுகிறது.

**தர்ஷினி :** அதுமட்டுமல்ல. கல்வியுடன் தொடர்புடைய பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புக்களும் மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகள் காணப்படுகின்றன. தொழினுட்பத்தில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றமே இதற்குக் காரணமாகும் என்பதை என்னால் உணர முடிகிறது.

**சுகாதாரம்**

புதிய தொழினுட்பம் காரணமாக சுகாதார சேவைகளும் இன்று முன்னேற்றம் கண்டுள்ளன. நோய்களைக் கண்டறிதல், சிகிச்சையளித்தல், மருந்து வகைகளை உற்பத்தி செய்தல் போன்ற துறைகள் விரைவாக முன்னேற்றத்தை எட்டியுள்ளன. நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி மிகவும் கடினமான சத்திர சிகிச்சைகள் போன்றவற்றை மிகச் சுலபமாக மேற்கொள்ளக்கூடிய வைத்திய உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நோயாளிகளைப் பரிசோதிப்பதற்கு அவசியமான எக்ஸ், கதிர் இயந்திரம், சி.டி ஸ்கேனர் இயந்திரம் போன்றவற்றின் பயன்பாடு காரணமாக சுகாதாரத் துறையில் சேவை வழங்குதல் உயர்மட்டத்தை எட்டியுள்ளது.






*கழியொலி அலகிடலிகள்* (Scan Machines)

**வங்கி நடவடிக்கைகள்**

மனிதர்களது அன்றாட நடவடிக்கைகளின்போது கொடுக்கல் வாங்கல்களை மிகவும் இலகுவாக்குவதற்கு வங்கிகள் தொழிற்படுகின்றன. இவற்றின் மூலம் தமது மூலதனத்தைப் பாதுகாப்பாகச் சேமிப்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களின்போது பணத்தை மீளப் பெறுவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. சமகாலத்தில் பணத்தை அங்கும் இங்கும் எடுத்துச்செல்லாது வங்கி அட்டைகள் மூலம் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கிட்டியுள்ளது.






(ATM)

தானியங்கி ரெலர் இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதனால் பண மீதியை அறிந்துகொள்ள முடிவதுடன் பணத்திற்கு மேலதிக பாதுகாப்பும் கிடைக்கின்றது. இதன் காரணமாக வங்கி நடவடிக்கைகளின் மூலம் தேசிய மற்றும் சர்வதேசரீதியாக மிகவும் இலகுவான வகையில் சேவைகளை மேற்கொள்வதற்கு முடியுமானதாகவுள்ளது. அதேபோன்று பணத்தை எண்ணுவதற்கும் மற்றும் போலி நாணயத்தாள்கள், போலி காசோலைகள், போலியான கையொப்பங்கள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கும்

## போக்குவரத்து

தொழினுட்பத்துடன் இணைந்த வகையில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம்

**நிரோஷன் :** ஆரம்ப காலத்தில் மனிதர் நடந்தே பிரயாணம் செய்தனர். பின்னர் மிருகங்களைப் பயன்படுத்தி பிரயாணத்தில் ஈடுபட்டனர். சக்கரம் கண்டுபிடிக்கப் பட்டதன் பின்னர் பல்வேறு வகையான வாகனங்களை உருவாக்கிப் பயன்படுத்துவதற்குத் தூண்டப்பட்டனர். இன்று அவை நவீன தொழினுட்ப வாகனங்களாக வளர்ச்சியடைந்துள்ளன.



மாட்டு வண்டி

**தமீம் :** மனிதர்கள் பிரயாணம் செய்வது போன்று பொருள்களை எடுத்துச் செல்வதற்கும் பல்வேறு நவீன முறைகள் பயன்படுத்துகின்றன.



மோட்டார்க் கார்

**தனுஷா :** போக்குவரத்துகள் பல்வேறு முறைகளில் இடம் பெறுகிறன. அவை தரைவழி, நீர்வழி மற்றும் ஆகாயவழிப் போக்குவரத்து என்ற வகையில் இடம் பெறுகின்றன. அதி சொகுசு பேருந்து, கப்பல்கள் போன்று விமானங்களும் காணப்படுகின்றன.



பயணிகள் கப்பல்

**ஹப்ஸா :** அதுமட்டுமா? அதிகளவு பயன்களையும் ஆயிரக் கணக்கான கிலோ நிறையுடைய பொருட்களையும் ஏற்றிக் கொண்டு விமானங்கள் ஆகாயத்தில் சுலபமாகப் பயணிக்கின்றன. அதேபோன்று ஆயிரக்கணக்கான கொள்கலன்களைக் காவிக் கொண்டு கப்பல்கள் கடலில் பயணிப்பது விசித்திரமாக உள்ளது.



வானூர்தி

**நிரோசன் :** மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குப் பேருந்துகள் பெருஞ்சேவைகளை வழங்குகின்றன அல்லவா? அதேபோன்று நீண்டதூர விமான சேவைகள், சாரதி யின்றிச் செல்லும் வாகனங்கள், சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்காத வாகனங்கள் என்பனவும் இன்று பிரபல்யம் பெற்று விளங்குகின்றன.




சொகுசு பேருந்து

**ஹப்ஸா :** புகையிரத சேவையும் உலகில் மிகவும் பிரபல் யமானதொன்றாக விளங்குகின்றது. மக்கள் போக்குவரத்து மற்றும் பொருள்கள் கொண்டு செல்லல் என்பவற்றுக்காகப் புகையிரத சேவைகள் நடைபெறுகின்றன. தொழினுட்பத்தின் விருத்தி மக்கள் நலன்களுக்கு எந்தளவு பயனளிக்கின்றது.



அதிவேக தொடருந்து

நவீன தொழினுட்பத்துடன் இணைந்து தொடர்பாடலில் ஏற்பட்ட முன்னேற்றம்


தீ மூட்டல்

**ஹாசிம் :** சாலினி! உங்களுக்குத் தெரியுமா? முற்காலத்தில் மனிதர்கள் தொலைவிலுள்ள ஒருவருக்குச் செய்தியொன்றை அனுப்பப் பெரும் ஒலியெழுப்பினர். அப்போது தூரத்தில் இருப்பர் செய்தியை அறிந்து அதற்குப் அவர் ஒலியெழுப்புவார்.


புறா மூலம் செய்தி அனுப்புதல்

**சாலினி :** அது மட்டுமா? தீச்சுவாலை எழுபுதல், முரசு கொட்டுதல், ஓலைகளில் செய்தியை எழுதி அம்புமூலம் எய்தல் போன்றவையும் முற்கால மனிதர்கள் செய்துள்ளதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.


அலெக்சாண்டர் கிரகம் பெல் கண்டு பிடித்த தொலைபேசி 1815

**சுஜிதா :** அப்போ! நாம் எவ்வளவோ இன்று முன்னேறி விட்டோம்... இப்போது இவை அத்தனையையும் செல்லிடத் தொலைபேசி மூலம் செய்யலாமல்லவா?

**புவனா :** இவ்வளவு பேசுகின்றீர்கள் தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யாரென்று கூறுங்கள் பார்க்கலாம்?

**சுஜிதா :** நானறிந்த வகையில் அது அலெக்சாண்டர் கிரஹம் பெல்....


நவீன தொலைபேசி


**சுதன் :** சுஜிதா மிகவும் கெட்டிக்காரி.

**ஹாசிம் :** அதென்றால் உண்மைதான்... அவள் நிறையப் புத்தகங்கள் வாசிக்கின்றாள். இன்று கம்பித் தொடர்புடைய தொலைபேசி போன்று கம்பித் தொடர்பற்ற பல்வேறு வசதிகள் கொண்ட செல்லிடத் தொலைபேசிகளும் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.


தொலைநகல்

**லக்ஷன் :** ஏன் .... டெலிமெயில், ஸ்பீட்போஸ்ட் போன்ற சேவைகளும் நடைபெறுகின்றன அல்லவா?


செய்மதி


நவீன செல்லிடத் தொலைபேசி

## 2.2.2 பல்வேறு பொருளாதார மாற்றங்கள் தனிநபர் மற்றும் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள்

மேலே கலந்துரையாடப்பட்டதற்கு அமைய பொருளாதாரத் துறையில் பரந்தளவிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதனை அறியமுடிகிறது. இம்மாற்றங்கள் தனிப்பட்டோர் மத்தியிலும் சமூகத்திலும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இதன்மூலம் ஏற்படுகின்ற விளைவுகள் வருமாறு,


- மனிதர்கள் பொருத்தமற்ற நுகர்வுக் கோலத்திற்குப் பழக்கப்படல்
- பொருளாதாரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வாழ்க்கைக் கோலத்தினுள் நுழைதல்
- பிழையான நடத்தைகளுக்குப் பழக்கப்படல்
- நகரமயமாக்கம் ஏற்பட்டல்
- உள நெருக்கீடு போன்ற உள நோய்களுக்கு ஆளாதல்
- இயந்திரமயமாகுதல்
- இனங்காணப்படாத நோய்கள் பரவுதல்
- சுற்றாடல் மாசடைந்தல்

இவற்றின் காரணமாக எத்தகைய பொருளாதார மாற்றங்கள் ஏற்படினும் அத்தகைய மாற்றங்களை உரிய வகையில் பயன்படுத்துவது தொடர்பில் மிகுந்த அவதானத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. பொருளாதார மாற்றங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்

- தமது தேவைகளை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்
- தொழினுட்பத்திற்கு அதிகமாக அடிமையாகாதிருத்தல்
- பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களை உரியவகையில் அனுசரித்தல்

இந்தக்காரணிகள் தொடர்பாகக் கவனமாகச் செயற்படுவது மிகவும் சமயோசிதமானதாகும்.

**செயற்பாடு 2.2**



- புதிய தொழினுட்பங்கள் காரணமாக உமது பிரதேசத்தில் அதிகளவில் காணப்படக்கூடிய சுற்றாடற் பிரச்சினைகளைப் பெயரிடுக.
- அத்தகைய பிரச்சினைகளைக் குறைப்பதற்குரிய உமது ஆலோ சனைகளை முன்வைக்குக.
- பொருத்தமான தொழினுட்பம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு அது தற்காலத்திற்கு ஏன் மிகவும் அவசியமாகிறது என்பதை விளக்குக.

# 2.3 தொழிற்சந்தையும் அதனுடன் இணைந்த புதிய முன்னேற்றமும்

## 2.3.1 தொழிற்சந்தை மற்றும் அதனோடு இணைந்த புதிய முன்னேற்றம் தொடர்பான அறிமுகம்

சமூகத்தில் காணப்படக்கூடிய சகல தொழில் சந்தர்ப்பங்களும் வேலையுலகு எனப் படுகிறது. வேலையுலகினுள் தொழில் வாய்ப்புகள் தொடர்பான காணப்படக்கூடிய நிலைமைகளே தொழிற் சந்தையாகும். தற்கால உலகில் தொழில்கள் தொடர்பாகக் காணப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமானதாகும். அப்படியாயின் அந்தத் தொழில் நிலைமைகளுக்கு ஏற்ற, பயிற்றப்பட்ட உழைப்பாளர்கள் இல்லாமை உலகின் அநேக நாடுகள் எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினையாக விளங்குகிறது. எனவே, தொழிற்சந்தையில் காணப்படக்கூடிய வேலைவாய்ப்புக்களைப் பற்றி அறிவது அவசியமானதாகும். இதற்கிடையே தொழிற்சந்தையில் காணப்படக்கூடிய சமகால முன்னேற்றம் தொடர்பாகவும் தொடர்ச்சியாக அறிந்து வைத்திருப்பதும் அவசியமானதாகும். அத்துடன் அதற்குப் பொருத்தமான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதும் மிகவும் பொருத்தமானதாகும்.

சமகால சமூகத்தின் பல்வேறு துறைகளில் பல்வேறு தொழில்கள் பரவலடைந்து காணப்படுகின்றன. சமகால தொழிற் சந்தையில் ஏற்பட்டுள்ள புதிய முன்றேறங்கள் பலவாகும். இத்தகைய முன்னேற்றங்கள் தொடர்பாக நீங்கள் அறிந்திருக்க வேண்டும். தொழினுட்பத்தின் வளர்ச்சியுடன் பல்வேறு துறைகளில் உருவாகின்ற புதிய தொழில் நிலைமைகள் தற்கால சமூகத்தின் பல்வேறு துறைகளில் காணக்கூடியதாக உள்ளன. இவ்வாறான முன்னேற்றங்கள் தொடர்பாகப் பாடசாலை மாணவர் என்ற வகையில் நீங்கள் அறிந்து வைத்திருப்பது அவசியமாகின்றது. புதிய முன்னேற்றங்கள் மூலமாகத் தோன்றியுள்ள தொழில் நிலைமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| விவசாயத் துறை | கைத்தொழில் துறை | சேவைகள் துறை |
|---|---|---|
| • உக்காத கழிவுகளை மீள் சுழற்சி முறையில் உற்பத்தி செய்வோர்<br>• சேதனப் பசளை தயாரிப்போர்<br>• உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வோர்<br>• விவசாய ஆய்வாளர்கள்<br>• விதைகள், நாற்றுகள் உற்பத்தி செய்வோர்<br>• விவசாயத் தொழினுட்ப வல்லுனர்கள் | • விஞ்ஞான தொழினுட்ப வல்லுநர்கள்<br>• புகைப்படக்கருவி இயக்குநர்கள்<br>• நனோ தொழினுட்ப வல்லுநர்கள்<br>• தொடர்பாடல் சேவை வல்லுநர்கள்<br>• மென் தொனுட்ப வல்லுநர்கள் | • விழா மண்டபங்கள், பொருட்கள் விநியோகஸ்தர்கள்<br>• ஒலிபெருக்கி வசதிகளை வழங்குவோர்<br>• சட்ட ஆலோசனை வழங்கும் ஆலோசகர்கள்<br>• மனை அலங்காரப் பணியாளர் |

அண்மைக்காலமாக உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழிற்சந்தைகளில் பல்வேறு மேலதிகத் தொழில்சார் தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

சமகால மாற்றங்களுடன் தொழிற் சந்தையில் பல்வேறு தொழில்களுக்காக நிலவுகின்ற கேள்வியும் மாறியுள்ளது. அதற்கான காரணங்கள் சில வருமாறு,

- மனித தேவைகள் சிக்கல் மிக்கதாகியமை
- கல்வி பெறுவோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தமை
- மனித உழைப்புக்குப் பதிலாக பல்வேறு இயந்திர சாதனங்கள் பாவனைக்கு வந்தமை
- சனத்தொகை விருத்தியோடு உழைப்பான விருத்தியடைந்துள்ளமை
- மக்கட்தொகை அதிகரித்ததுடன் உழைப்பாளர் படையினரும் அதிகரித்தமை.

சமகால தொழிற்சந்தையின் பால் அவதானத்தைச் செலுத்தும்போது அவற்றைப் பிரதானமாக இரு வகைகளாக வகைப்படுத்தலாம். அவை பின்வருமாறு

- தேசிய தொழிற்சந்தை
- சர்வதேச தொழிற்சந்தை

இன்று தேசிய மற்றும் சர்வதேசரீதியாகப் போட்டிகரமான தொழிற்சந்தை நிலவி வருவதனைக் காணமுடிகிறது. இதன்காரணமாகப் பாடசாலைப் பருவத்திலிருந்தே பொருத்தமான கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

### 2.3.2 புதிய முன்னேற்றத்துடன் விரிவடையும் தொழில்கள்

உலகத் தொழிற் சந்தைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களின் காரணமாகப் பல புதிய தொழில்கள் உருவாகியுள்ளன. அத்தகைய தொழில்களுக்குரிய சில உதாரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- கணினித் தரவுகள் நிரற்படுத்தும் தொழினுட்பவியாலாளர்
- மென்பொருள் தொழினுட்பவியலாளர்
- மரபணுத் தொழினுட்பவியலாளர்
- பூந்தோட்டத் தொழினுட்பவியலாளர்
- அலங்கார வடிவமைப்பாளர்
- சித்தரிப்புத் தொழினுட்பவியலாளர்
- மொழி பெயர்ப்பாளர்

- அலங்கார பூக்கள் வளர்ப்போர்
- கட்டடக் கலைஞர்
- அலங்கார மீன்கள் வளர்ப்போர்
- ஊடகவியலாளர்
- விழா ஏற்பாட்டாளர்
- தரவுப் பகுப்பாய்வாளர்
- ஆலோசனைச் சேவை வழங்குவோர்

இவ்வாறான விசேடத்துவம் வாய்ந்த தொழில்களும் தொழினுட்ப முன்னேற்றத்துடன் வேலையுலகில் தொழிற் சந்தர்ப்பங்களும் மேலும் முன்னேற்றமடைந்துள்ளதைக் காணமுடிகிறது. இவை தொடர்பாக அவதானிப்புடன் இருப்பது எதிர்காலத்தில் தொழிற் சந்தையில் பிரவேசிப்பதற்கு மிகவும் முக்கியத்துவமானதாகும்.

தொழிற் சந்தையில் நிலவும் புதிய போக்கிற்கு ஏற்ப தமது தகுதியைப் பூரணப்படுத்திக் கொள்வது தொடர்பான பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

- புதிய தொழினுட்ப உபகரணங்கள் தொடர்பான பயிற்சி
- கணினிப் பாவனை தொடர்பான அறிவு
- மேலும் பயிற்சி பெறுவதற்குள்ள விருப்பம்
- மேலதிக சேவை வழங்குவதில் அர்ப்பணிப்பு
- நெகிழ்வான தன்மை
- பல்வேறு மொழிகளிலும் தேர்ச்சி பெறுதல் ( ஆங்கிலமொழி, சிங்களமொழி, சீனமொழி, கொரிய மொழி, ஜப்பான் மொழி, பிரான்ஸ் மொழி)

**செயற்பாடு 2.3**



- தொழினுட்பம் மாற்றமடைந்ததுடன் விவசாய, கைத்தொழில், சேவைத் துறைகளில் ஏற்பட்டுள்ள புதிய தொழில் வாய்ப்புகள் பற்றிப் பத்திரிகை அல்லது இணையத்தில் தேடியறிந்து அவற்றின் பெயர்களை எழுதுக.
- இப்போது தரம் 9 இல் கல்விபயிலும் நீங்களும் எதிர்காலத்தில் தொழிற் சந்தைக்குள் நுழைய நேரிடலாம். எனவே, எதிர்காலத்தில் நீங்கள் செய்வதற்கு எதிர்பார்க்கும் தொழிலைக் குறிப்பிட்டு அத்தொழிலின் மூலம் உங்களுக்கும் நாட்டுக்கும் கிடைக்கும் நன்மைகளை விளக்குக.
- ''தொழினுட்பத்தின் புதிய புரட்சி நனோ தொழினுட்பமாகும்.'' இது பற்றிய தகவல்களைத் திரட்டி சிறு நூலொன்றை உருவாக்குக.

## 2.4 போட்டி நிறைந்த உலகில் நல்வாழ்விற்கான பண்புகளை மேம்படுத்துதல்

### 2.4.1 நல்வாழ்வு

**''சிறந்த முறையில் வாழ்வதே நல்வாழ்வாகும்''** அல்லது அடுத்தவருக்குத் தொல்லை யில்லாத வகையில் சட்டரீதியாகப் பணம் சம்பாதித்து தார்மீக முறையில் வாழ்வது நல்வாழ்வாகும். சிங்கள இலக்கியத் துறையின் புகழ்மிக்க பெருங்கவிஞராக முனிதாச

குமாரதுங்க அவர்களால் எழுதப்பட்ட ‘சிக்ஷா மார்க’ (போதனா வழி) எனும் நூலின் முதலாம் பாகத்தில் இடம்பெறும் ‘சிரிமத்’ எனும் கவிதையை சகோதர சிங்கள மாணவர்கள் சிறுவயதிலே பாடநூலின் மூலம் அறிந்துள்ளனர். அக்கவிதை வரிகளின் மொழிபெயர்ப்பு இங்கு தரப்படுகின்றது. அதனை வாசித்து அதன் பொருளை அர்த்தத்துடன் உள்வாங்கிக் கொள்ளுங்கள்.



சிரிமத் என் நண்பன்
நல்லதொரு சிறுவன்
அறிவும் உடையவன்
ஆற்றலும் உடையவன்

அதிகாலையில் எழுந்து
பல்துலக்கி முகமும் கழுவி
கடவுளை வணங்கி
வீட்டு வேலைகளிலும் உதவிடுவான்



பாடந்தனைப் படிப்பதற்காய்
புத்தகத்தைத் திறந்தே
மனதையெங்கும் அலைபாயவிடாது
புத்தி மேலோங்கவே படித்திடுவான்



மூத்தோரிடம் எதையும்
முன்கூட்டியே கேட்டு
வேலைகள் செய்திடவே
விரும்பிடுவான் எப்போதும்

நல்லதை நினைப்பான்
நினைத்ததைச் சொல்வான்
சொன்னதைச் செய்வான்
என்றும் எங்கள் சிரிமத்

**சிக்ஷா மார்க (போதனா வழி) முதலாம் பாகம்**

மேற்படி கவிதையில் இடம்பெறும் சிரிமத்திடம் காணப்படும் நல்வாழ்விற்கான பண்புகளை உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள். அவற்றுள் எங்களிடம் காணப்படும் பண்புகள் எவை? என சற்று சிந்தித்துப் பாருங்கள். பாடசாலை மாணவர் என்ற வகையில் நல்வாழ்விற்கான பண்புகளையும் பழக்கங் களையும் நீங்களும் வளர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

திருக்குறளில் திருவள்ளுவர் நல்வாழ்விற்கான பல்வேறு பண்புகள் பற்றி கூறியுள்ளார். அவற்றுள் சிலவற்றை அவதானிப்போம்.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்ற அறம்



அதிகாரம் - 4, குறள் 35

**பொருள்**

பொறாமை, ஆசை, கோபம், தீயசொற்களால் திட்டுதல் என்பவற்றைத் தவிர்த்தல் நல்லறமாகும்.

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழக்கார் குடிப்பிறந் தார்

அதிகாரம் - 96, குறள் 952



**பொருள்**

நல்லொழுக்கம், உண்மை பேசுதல், வெட்கம் கொள்ளல் இம்மூன்றையும் நல்ல குடியில் பிறந்தவர்கள் இழக்க மாட்டார்கள்.

நிறைநீர் நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு

அதிகாரம் - 79, குறள் 782

**பொருள்**

கல்வியறிவுடையோரின் நட்பு வளர்பிறைபோல வளரும். கல்வியறிவு குறைந்தோரின் நட்பு தேய்பிறை போலத் தேயும்.

நல்வாழ்விற்காக மகாகவி பாரதியார் பல்வேறு கருத்துக்களைத் தமது கவிதைகள் மூலம் முன்வைத்துள்ளார். அவைகளுள் ஒன்றை நோக்குவோம்.

**மனதில் உறுதி வேண்டும்,**
**வாக்கினிலே இனிமை வேண்டும்,**
**நினைவு நல்லது வேண்டும்,**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்,**
**கனவு மெய்பட வேண்டும்,**
**கைவசமாவது விரைவில் வேண்டும்,**
**தனமும் இன்பமும் வேண்டும்,**
**தரணியிலே பெருமை வேண்டும்**

**கண் திறந்திட வேண்டும்**
**காரியத்தில் உறுதி வேண்டும்**
**பெண் விடுதலை வேண்டும்**
**பெரிய கடவுள் காக்க வேண்டும்**
**மண் பயனுற வேண்டும்**
**வானகமிங்கு தென்பட வேண்டும்,**
**உண்மை நின்றிட வேண்டும்**




எனதுள்ளம் பக்குவமானது பக்குவமானது பக்குவமானது
உனதுள்ளம் புனிதமானது அமைதியானது பக்குவமானது
அன்பு, கருணை, பாசம் பொங்கிப் பிரகாசிக்கும்
எனதுள்ளத்தில் கலையும் தர்மமும் நிலைத்திருக்கும்
ஆசிரியர் பெற்றார் முறையைப் பார்த்திருப்பார் அன்புடன்
எனதுள்ளம் பக்குவமானது பக்குவமானது பக்குவமானது
நான் சூழலைப் பாதுகாப்பேன் எனைப் பாதுகாப்பேன்
உலகுக்குப் பாரமாகாது எதிர்காலம் நோக்கி பாடசாலையிலே
வழிகண்ட நல்ல பிள்ளை நான்



**குறிப்பு -** இவ்வாறான பாடல்களைக் காலை வேளையில் பாடசாலையில் செவிமடுக்க வழிசெய்யவும்

### 2.4.2 நல்வாழ்விற்கான தேவை

போட்டிமிக்க இவ்வுலகில் மனிதன் சிக்கல்கள் மிகுந்த வாழ்க்கை முறைக்கு முகங்கொடுத்து வாழ நேரிட்டுள்ளது. நவீன விஞ்ஞான, தொழினுட்பத் தொடர்பாடல் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி இதில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதேபோன்று தனிநபர் விருப்பு வெறுப்பின் பல்வகையான சிக்கல்களை மேலும் வலுவடையச் செய்கின்றது. எனவே, இன்றைய சமூகத்தில் வாழும் பெரும்பான்மையானோர் நல்லது - தீயது என்பதை விளங்கிக் கொள்ளாது பின்பற்றுவதற்கு முயற்சிக்கின்றனர். அந்நிலைமை இன்றைய சமூகத்தில் பிரதான பிரச்சினையாகத் திகழ்கிறது. எனவே, சமூக முன்னேற்றத்திற்காக நல்வாழ்விற்கான தேவை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பலவாகும். அவற்றுக்கான உதாரணங்கள் சில வருமாறு,



- **சமூகத்தின் சிறந்த நிலைப்பாட்டிற்கும்**

*சட்டரீதியாக சமூகத்தில் செயற்படவும், சட்டத்தை மதிக்கும் பிரஜையாக வாழ்வதற்காக*

- **தனிநபர் விருப்பு - வெறுப்பின் பல்வகைமை**

*மனித சிந்தனை, எதிர்பார்ப்பு, ஆசை, ஆவல் என்பன பல்வகைப்படுவதனால் ஏற்படும் விருப்பங்களை சரியான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்காக*

- **வாழ்க்கைக் கோலம் சிக்கலாக அமைந்தமை**

*வாழ்க்கை அமைப்பு சிக்கலார்ந்ததாகும்போது மனிதன் பிழையான வழிகளில் பணம் சம்பாதிக்க முயற்சிப்பான். அவ்வாறின்றி சரியான வழியில் பணம் சம்பாதித்து சாதாரண வாழ்க்கைக் கோலத்திற்கு இசைவாக்கமாக்குவதற்கு*

- **நேர்மையான வழியில் பணமீட்டவும் செலவு செய்வதற்கும்**

*சமூகத்தில் வாழும் போது தான் வியர்வை சிந்திக் கஷ்டப்பட்டு உழைத்து சுயமுயற்சியால் ஏதாவதொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக*

- **சமூக நீதியை ஏற்படுத்துவதற்கும்**

*தனது சீவனோபாயம் மற்றும் வாழ்க்கைமுறை என்பவற்றைச் சமூகத்தில் நிலவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைக்கேற்ப நடைமுறைப்படுத்துவதற்காக*

- **சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும்**

*சமூகத்தை சமாதானமாக செயற்படுத்துவதற்கு*

### 2.4.3 நல்வாழ்விற்கான பண்புகள்

மனித சமூகத்தில் நிலவும் சிறந்த சமாதானப் பண்புகளே நல்வாழ்விற்கான பண்புகளாகும். இப்பண்புகள் சிறந்த வாழ்க்கையைக் கொண்டு நடாத்த உதவும் என்பதனால் நல்வாழ்விற்கான பண்புகள் தனிநபரொருவரின் உடலியல், உளவியல், சமூகவியல், ஆன்மிகவியல் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகும். நற்பண்புடைய சமூகத்தில் வாழ்கின்ற மனிதனிடம் காணப்படவேண்டிய பண்புகள் சில வருமாறு. இப்பண்புகளில் உங்களிடம் காணப்படும் பண்புகள் எவையென்று சுய விசாரனை செய்யுங்கள்.

- சட்டத்தை மதித்தல்
- நன்றாகச் செவிமடுத்தல்
- தியாக மனப்பான்மை
- நன்றியுணர்வு
- உள்ளதைக் கொண்டு திருப்தியடைதல்
- நல்லிணக்கம்
- தார்மீகத் தன்மை
- எளிமையான வாழ்க்கை
- மனவுறுதி
- சமூக விரோதச் செயல்களிலிருந்து விலகியிருத்தல்

- முயற்சி செய்தல்
- மகிழ்ச்சியுடன் இருத்தல்
- சுறுசுறுப்பான தன்மை
- உண்மையான தன்மை
- நன்றியுடமை
- இரக்க சுபாவம்
- பொறுமை
- சூழலை நேசித்தல்
- மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படல்
- போதைப்பொருள் பாவனையைத் தவிர்த்தல்

இவ்வாறான பண்புகளை சிறுவயதிலிருந்தே உங்களிடம் வளர்த்துக் கொள்ள முயச்சியுங்கள். அது உங்களின் நிகழ்கால, எதிர்கால வெற்றிக்கும் சமூகத்தின் நிலையான தன்மைக்கும் நாட்டின் எதிர்காலத்தைச் சிறப்பித்துக் கொள்வதற்கும் பெருந்துணை புரியும்.

**அறிவும் கல்வியும் உடைமையே**
**ஒருவரின் உண்மையான உடைமை - உன்**
**குணப்பண்புகளைக் கண்டவுடன்**
**நாடே உம்மை மதித்துப் போற்றும்**

என்று முன்னைய பண்டிதர்கள் சொல்லி வைத்தது அதற்காகவேயாகும். எனவே நல்வாழ்விற்கான பண்புகளை நாம் வளர்த்து நாட்டிற்குப் பயன் தரக்கூடிய நல்லதொரு சமூகப் பிரஜையாகச் சேவையாற்றுவதற்கு முன்வர வேண்டும்.

### 2.4.4 நல்வாழ்விற்கான நெறி தவறுவதனால் ஏற்படும் விளைவுகள்

சிறுவயதிலிருந்தே நல்வாழ்விற்கான பண்புகளைப் பழக்கத்திற் கொள்ளா விட்டால் பிற்கால வாழ்க்கையில் பாரிய விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

நல்வாழ்வுக்குரிய பண்புகளை மேம்படுத்திக் கொள்ளாவிட்டால் பெறுமதியான மனித உயிர்கள், பொதுச் சொத்துகள், இயற்கைச் சூழல் என்பவற்றின் மீது மோசமான தாக்கங்கள் ஏற்படும். சிங்களப் பாடகர் சுனில் எதிரிசிங்க அவர்களின் பாடலொன்றின் மொழிபெயர்ப்பு இங்கு தரப்படுகின்றது. ஒரு சிறைக்கைதி பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.



தம்பியே கெட்ட நண்பனோடு சேராதே
தங்கையே தீய பழக்கங்களைப் பழகாதே
போகம்பரை சிறைச்சாலைக்கு வந்துவிடாதே
எதிரிக்காவது எனது கதி நேரக்கூடாது

தலதா மாளிகையின் இனிய ஓசை கேட்கிறது
செய்தபாவத்தை நினைத்துக் கண்ணீர் வருகிறது
செத்துச் செத்துத் தினமும் பிழைக்கின்றேன்
தண்ணீருக்குப் பதிலாக கண்ணீரைக் குடிக்கின்றேன்

எச்சரிக்கை மீறியதால் கிடைத்தது சிறைக்கூடு
நன்னெறி தவறியதால் விளைந்ததோ சனியின் கேடு
நான் நடந்ததோ குற்றங்கள் மலிந்த பாதையூடு
அது என்னை அனுப்பி வைத்ததோ தூக்கு மரத்தோடு


நல்வாழ்விற்கான பண்புகளைப் பழக்கப்படுத்திக் கொள்ளாது சமூகத்தில் வாழ்கின்ற எந்தவொரு நபருக்கும் இப்பாடலில் கூறப்படும் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். அதனால்,

- மனிதனின் வாழ்க்கை துன்பத்தில் முடிவுறும்
- மனிதர்கள் ஒதுங்கிப் போவதால் தனிமைப்பட நேரிடும்
- இயற்கை வளங்கள் அழிவுறும்
- செலவு அதிகரித்து சேமிப்புக் குறைவடையும்
- வீண் விரயம் அதிகரிக்கும்
- நல்வாழ்வு சீர்குலையும்
- சமூகப் பாதுகாப்பு அற்றுப் போகும்
- சமூக சமாதானம் அற்றுப்போகும்
- சமூக விரோதச் செயல்கள் அதிகரிக்கும்
- மனவழுத்தம் அதிகரிக்கும்
- குற்றச் செயல்கள் அதிகரிக்கும்
- இலஞ்சம், ஊழல் அதிகரிக்கும்
- அச்சத்துடனும் சந்தேகத்துடனும் வாழ நேரிடும்.

### 2.4.5 நல்வாழ்வு சமூகத்தின் நிலைத்திருப்பில் செல்வாக்குச் செலுத்தும் விதம்

மேற்கூறப்பட்ட விதத்தில் எல்லோரும் நல்வாழ்விற்கான பண்புகளோடு செயற்படும் போது அது சமூகத்தின் நிலைத்திருப்பிற்குப் பெருந்துணை புரியும். அதன்மூலம் நாம் அடையக்கூடிய பிரதிபலன்கள் பலவாகும். அவற்றில் சில பின்வருமாறு,

- அடுத்தவரின் உரிமைகள் பாதுகாக்கப்படும்
- தனது கடமைகளைக் குறைவுறாது நிறைவேற் றுவதற்கு முன்வருதல்
- சமூகத்தில் சமாதானமான சூழல் உருவாதல்
- சமூகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல்
- தார்மீக சுதந்திர சமூகம் கட்டியெழுப்பப்படல்
- இலஞ்சம், ஊழல், குற்றச் செயல்கள், திருட்டு முதலிய தீய செயல்களைப் புறந்தள்ளுதல்



அன்பார்ந்த பிள்ளைகளே! நல்வாழ்விற்குரிய பண்புகளை மேம்படுத்திச் சமூகத்தின் நிலைத்திருப்பிற்குப் பங்களிப்புச் செய்வதற்கு நீங்களும் சிறுவயதில் இருந்தே திடசங்கற்பம் கொள்ளுங்கள். ''நாட்டிடமிருந்து நாம் ஏதாவது எதிர்பாராது நம்மால் நாட்டுக்கு ஏதாவது நடைபெற வேண்டும்'' எனும் கருத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது முழுச் சமூகத்தையும் உலகையும் பயனுறச் செய்ய உங்களால் முடியும்.

### 2.4.6 சகவாழ்வு

சமூகத்தின் சிறிய அலகு குடும்பமாகும். நாமனைவரும் அதன் அங்கத்தவர்கள் ஆவோம். குடும்ப உறுப்பினர் ஒருவராக நாம் வாழ்வதற்கு அடுத்த நபர்களின் அன்பும் பாதுகாப்பும் எமக்குத் தேவைப்படும்.



**''சகவாழ்வு தொடங்குவது குடும்பத்திலாகும்''**

சமூகத்தில் வாழும் எந்தவொரு நபராலும் தனித்து வாழமுடியாது. பல்வேறு நபர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் செயற்படவும் மனிதனுக்கு நேரலாம். மனிதன் ஆரம்ப காலந்தொட்டே ஒத்துழைப்புடன் வாழப் பழகியிருந்தான். அதன்படி ஒன்றாக வாழ்ந்து ஒத்துழைப்புடன் செயற்படுவது சகவாழ்வாகும். இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட அறிஞர் கருத்தொன்று பின்வருமாறு,

"Coexistence is a state in which two or more groups are living together while respecting their differences and resolving their conflicts nonviolently"

**By - Angela Nyawira**

இரு குழுக்களிடையோ அல்லது பல குழுக்களிடையோ வாழ்க்கையின்போது ஏற்படும் முரண்பாடுகளை முகாமைப்ப டுத்தி ஒருவரையொருவர் மதித்து வேறு பாடுகளைக் களைத்து வாழ்வதே சக வாழ்வாகும்.

அஞ்சலா நியவீரா

### 2.4.7 சகவாழ்வின் தேவை

பின்வரும் செய்திகளை நன்கு வாசியுங்கள். அவற்றின் மூலம் சகவாழ்வின் அவசியத்தை நன்கு புரிந்து கொள்ளலாம்.

வீட்டுக் கூரையை வேய்வதற்கு ஊரில் உள்ளவர்கள் வந்து உதவி செய்தனர்.

தேவையுடைய மாணவர்களுக்கு புத்தகங்கள், உணவு, பானங்களை நண்பர்கள் வழங்குவது சந்தோஷத்துடன் ஆகும்.

இலங்கை முகங்கொடுக்க நேரிட்ட வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்பு நாடுகள் பலவற்றிலிருந்தும் உதவி கிடைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 14 ஆவது சர்வதேச வெசாக் தினம் 2017 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றது

இலங்கையில் கல்வியை மேம்படுத்த சீனா உதவியுள்ளது.

பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்காக பல நாடுகளுக்கும் யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவி கிடைத்துள்ளது.

இன்றைய சமூகத்தில் சகவாழ்வின் தேவைக்கான உதாரணங்கள் சில மேலே காட்டப்பட்டுள்ளன. அதன்படி

- பல்வகைமைச் சமூகத்தில் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்கும்
- சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும்
- தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாதோருக்கு உதவுவதற்கும்
- அசமநிலையிலான சமூகத்தின் சமநிலையை மேம்படுத்துவதற்கும்
- சகவாழ்வு இன்றியமையாததாகும்.

### 2.4.8 சகவாழ்வின் பண்புகள்

மனிதன் இயல்பாகவே ஒரு சமூகப் பிராணியாவான். குழு மனப்பான்மை, ஒத்துழைப்பு, ஐக்கியம் முதலிய பண்புகளுக்கு மனித சமூகத்தில் மேலான அங்கீகாரம் கிடைத்திருப்பதும் இதனாலாகும். அதேபோன்ற சகவாழ்விற்கான பண்புகள் வருமாறு,

- ஒத்துழைப்புடன் செயற்படல்
- பகிர்ந்து கொள்ளுதல்
- அடுத்தவரை மதித்தல்
- நேசமான தன்மை
- பரஸ்பர நம்பிக்கை
- நேர்மையான தன்மை
- உடன்பாடான தன்மை




திரு. சுனித்தா பீ. விக்கிரமகே அவர்கள் இயற்றி, திருமதி. இந்தீவரி ஆரியசிங்க பாடிய ஒரு பாடலில் மொழிபெயர்ப்பு இங்கு தரப்பட்டுள்ளது.

நந்தியாவட்டையும் அரலியும் மரத்தில் பூக்கின்றன
மல்லிகையும் ரோஜாவும் கொடியில் பூக்கின்றன
அல்லியும் தாமரையும் நீரில் பூக்கின்றன
ஒரே தட்டில் பூஜைக்குச் செல்கின்றன//

கிளியும் மைனாவும் வானில் பறக்கும்
மணிப்புறாவும் வானில் சஞ்சரிக்கும்
சிட்டுக் குருவிகளும் மேலே பறக்கும்
வானுக்கு யாரும் உரிமை கோரவில்லையே//

சிற்றெறும்பும் வளை அமைக்கும்
கறையானும் ஒன்றுகூடி புற்றமைக்கும்
பெருமழை பொழிந்து ஈசல் பறக்கும்
மண்ணுக்கு உரிமை கோர எவருக்கு முடியும்//

### 2.4.9 சகவாழ்வின் பண்புகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவம்



மனிதனால் தனியாக வாழமுடியாது. குடும்பம், சமூகம், சமுதாயம் என்பவற்றுடன் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். எனவே, அன்றாட கடமைகளில் ஈடுபடும்போது ஒத்துழைப் புடன் செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிக மாகும். அப்போது சகவாழ்விற்கான பண்புகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களும் அதிகமாகும். எனவே, தினசரி அடுத்தவருடன் செயற்படும்போது சகவாழ்விற்கான பண்புகளை வாழ்க்கைக்குரி யதாக்கிக் கொள்வதனால் கிடைக்கும் நன்மைகள் சில வருமாறு,

- தனிநபர் அபிவிருத்தி ஏற்படும்
- சமூகத்தில் சமாதானம் நிலைக்கும்
- அந்நியோன்னிய நேசம் உருவாகும்
- சமூக அபிவிருத்தி துரிதமாகும்
- சமூகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்



## 2.4.10 நல்வாழ்வும் சகவாழ்வும் தனிநபர், சமூக அபிவிருத்தியில் முக்கியத்துவம் பெறும் விதம்

நல்வாழ்வு என்பதும் சகவாழ்வு என்பதும் ஒன்றாக இணைந்த இரண்டு எண்ணக் கருக்களாகும். முற்காலத்திலிருந்தே பாரம்பரியமாக எமக்குக் கிடைக்கப் பெற்றதும் எம்மால் வழக்கப்படுத்திக் கொள்ளப்பட்டதுமான நல்வாழ்வுப் பண்புகள் பலவுள்ளன. அவை சகவாழ்வை ஏற்படுத்தவும் அதனைத் தொடர்வதற்கும் பெருந்துணை புரிகின்றன. நாம் வாழும் சமூகத்தில் பல்வேறு தனிநபர்கள் குழுக்கள் வாழ்கின்றனர். அத்தனிநபர்கள் குழுக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### 1. நல்வாழ்வு வாழ்ந்தாலும் சகவாழ்வற்றோர்

இவர்கள் மற்றவருக்குத் தொல்லையின்றி வாழ்வர். தார்மீக வழியில் சட்டரீதியாகப் பணம் சம்பாதிப்பர். அயலவருக்கு உதவி செய்யவோ அடுத்தவரின் துன்பத்தில் பங்கு கொண்டு பரிகாரம் செய்யவோ முன்வரார். அடுத்த வீட்டில் மரணம் நிகழ்தாலும் பொருட்படுத்தமாட்டார்கள். இவர்கள் நல்வாழ்வு வாழ்ந்தாலும் சகவாழ்வு இல்லாதோராவர்.

### 2. நல்வாழ்வு வாழாத சகவாழ்வுடையோர்

இவர்கள் சட்டரீதியற்ற முறையில் பணம் தேடுவர். தார்மீக வழியில் வாழ்க்கை நடத்தமாட்டார்கள். களவெடுத்தல், போதைப்பொருள் வர்த்தகம், கள்ளக்கடத்தல் முதலிய முறைகேடான வழிகளில் மற்றவருக்குத் தொல்லை தரும் தொழில்களில் ஈடுபடுவர். ஆயினும் பெரும்பாலும் தனது அயலவர், உறவினர்களுடன் மிகவும் நேசமாக இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு வாழ்க்கை நடாத்துவர். நல்வாழ்வு வாழாத இவர்கள் பெரும்பாலும் தனது பாதுகாப்புக் கருதி சகவாழ்வை உச்சளவு பயன்படுத்துவர். இவ்வாறானவர்கள் சமூகத்தில் வாழ்கின்றனர். அவர்கள் பணமீட்டும் முறையை சமூகம் அங்கீகரிப்பதில்லை.

### 3. நல்வாழ்வு, சகவாழ்வு இரண்டுமில்லாது வாழ்வோர்

இவர்கள் இயற்கையாகவே மற்றவருக்குத் தொல்லையாக அமைவர். சட்டரீதியற்ற முறையில் பல்வேறு முறையற்ற முறைகளில் பணம் சம்பாதிப்பர். தீய செயல்களில் ஈடுபடுவர். முறைகேடாகத் தேடியவற்றிலிருந்தாவது யாருக்கும் எதுவும் கொடுக்க மாட்டார்கள். இவர்களால் அயலவருக்கோ உறவினருக்கோ எவ்வித உதவியும் கிடைக்காது. இவர்கள் முழுச் சமூகத்திற்கும் தொல்லையாகவும் சுமையாகவும் அமைவர்.

4. நல்வாழ்வு, சகவாழ்வு இரண்டுமுடையோர்

இவர்கள் சட்டரீதியாக தார்மீக வழியில் பணம் தேடுவர். மற்றவருக்குத் தொல்லையாகவோ பாரமாகவோ அமையமாட்டார். சம்பாதித்த பணத்தைத் தார்மீக வழியிலே செலவிடுவர். அயலவருக்கும் உறவினருக்கும் எப்போதும் உதவி செய்வார். ஒருவருக்கு கஷ்டம், துன்பம் நேரும்போது உதவி உபகாரங்கள் செய்து ஒத்துழைப்புடன் வாழ்வர். இவ்வாறான நல்வாழ்வும் சகவாழ்வும் உடையவர்கள் கிராமத்திற்கும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் வரப்பிரசாதமாக அமைவர்.

எனவே நல்வாழ்வு, சகவாழ்வு என்பவற்றுக்குரிய பண்புகளை வளர்த்து சமூக அபிவிருத்திக்ககாக பயனுள்ள வகையில் பங்களிப்புச் செய்ய முடியும்.

**செயற்பாடு 2.4**



- உங்களிடமும் உங்கள் நண்பர்களிடமும் மூத்தோரிடமும் காணப் படும் நற்பண்புகளை அட்டவணைப்படுத்துக.
- நல்வாழ்விற்கான பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் இரண்டும் நிமிட நேரம் நடித்துக் காட்டுங்கள்.
- ''நல்வாழ்விற்கான பண்புகளைக் கடைப்பிடிக்காமையால்'' என்ற வகையில் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| தனிநபர் அடையும் நன்மைகள் | சமூகம் அடையும் நன்மைகள் |
|---|---|
| 1 ............................................................ | 1 ............................................................ |
| 2 ............................................................ | 2 ............................................................ |

- நல்வாழ்வுப் பண்புகளை சமூகத்தில் பரப்புவதற்கு மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் சிலவற்றை ஆலோசனைகளாக முன்வையுங்கள்.
- சமூக அபிவிருத்திக்கு நல்வாழ்வு, சகவாழ்வு ஆகியன முக்கியத்துவம் பெறும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.

## 2.5 கூட்டுறவு இயக்கம் (Cooperative Movement)

### 2.5.1 கூட்டுறவு இயக்க அறிமுகம்

இலங்கை மக்கள் ஆதிகாலம் முதலே சகவாழ்வுடன் செயற்படுவதற்கு முன்வந்தமை குறிப்பிடத்தக்கது. அதுபற்றி நல்வாழ்வு, சகவாழ்வு பற்றிப் படித்த உங்களால் புரிந்துகொள்ள முடியும். அத்தம் முறை, சிரமதானம், புண்ணிய கருமங்கள், நாற்று நடுதல், அறுவடை செய்தல் எனும் நடவடிக்கைகளின் போது ஒருவருக்கொருவர் உதவி மனப்பாங்குடன் செயற்படுவதற்கு அதிக விருப்புடையோராய் இருந்தனர்.

அதன்படி உதவி, ஒத்துழைப்புடனும் சமத்துவத்துடனும் பொதுத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்காகவும் சமூக நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்து வதற்காகவும் சுயவிருப்பத்தின்படி உருவாக்கிக்கொள்ளப்பட்ட அமைப்பே கூட்டுறவு இயக்கம் என அறிமுகப்படுத்தலாம்.



கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ரொபட் ஓவன்




கூட்டுறவு இயக்கத்தின் இலச்சினை

கூட்டுறவு இயக்கத்தின் தந்தை எனக் கருதப்படுபவர் பிரித்தானியவைச் சேர்ந்த ரொபட் ஓவன் என்பவராவர். அவரால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணத்தை நன்கு வாசித்துப் பாருங்கள்.

**பொருளாதார வளர்ச்சி கருதி மனிதரிடையே நிலவும் போட்டிக்குப் பதிலாக ஒத்து ழைப்பும் ஒழுக்கமும் நிறைந்த நல்லதொரு சமூகச் சூழலை அடிப்படையாகக் கொண்ட சேவையே கூட்டுறவாகும்.**

**ரொபட் ஓவன் 1845**

நவீன கூட்டுறவு இயக்கம் தொடர்பான உத்தியோகபூர்வ வரைவிலனக்கணம் (ICA - International Co - operative Alliance) சர்வதேச கூட்டுறவு அமைப்பினால் முன்வைக்கப் பட்டுள்ளது. அது வருமாறு,

**கூட்டுறவு என்பது சுயாதீனமாக ஒன்றிணைந்த தனிநபர்களின் சுயநிருவாக சங்கமொன்றின் ஊடாக அவர்களின் பொதுவான பொருளாதார, சமூக, கலாசாரத் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் கூட்டு உரிமையும் ஜனநாயக நிருவாகமும் கொண்டதொரு முயற்சியாண்மையாகும்.**

(International Co - operative Alliance -ICA - 1995)

ஒத்துழைப்புடன் வேலை செய்தல் அன்னியோன்னியமான முறையில் ஒருவருக் கொருவர் உதவிசெய்தல் என்பன கூட்டுறவு முறையின் பிரதான இயல்புகளாகும். சமூகத்திலுள்ள போட்டிக்குப் பதிலாக ஒத்துழைப்பு வளர்ச்சியடைவதே இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் விசேட பண்பாகும்.

### 2.5.2 கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்களுள் சில

- அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவேற்றல்
- மனிதனின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவி செய்தல்
- தனியாக நிறைவேற்றிக்கொள்ள முடியாத தேவைகளை ஒத்துழைப்புடன் இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளல்

கூட்டுறவின் தொனிப்பொருள்

**ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு**

என்பதாகும்.

### 2.5.3 கூட்டுறவு இயக்கத்தின் இன்றைய செயற்பாடுகள்




கூட்டுறவு இயக்கம் கடன் வழங்கும் சங்கம் எனும் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. தும்பற கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம் இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது கூட்டுறவுச் சங்கமாகும். அது 1906 ஆம் ஆண்டு தெல்தெனியாவில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அது பல்வேறு கூட்டுறவு விற்பனை நிலையங்களாகவும் வேறு முயற்சிகளாகவும் பரிணமித்துள்ளது. இவ்வாறு இலங்கையில் செயற்படும் கூட்டுறவு சங்கங்களின் வகைகள் வருமாறு,




- பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம்
- விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம்
  உ + ம் - தேயிலை, தென்னை, இறப்பர்
- மீனவர் கூட்டுறவுச் சங்கம்
- கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம்
  உ + ம் - நெசவுத் தொழில், தச்சுத் தொழில், தும்புக் கைத்தொழில்
- பல்வகை வளங்கள் கூட்டுறவுச் சங்கம்
  உ + ம் - பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், முட்டை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்
- வைத்தியசேவைக் கூட்டுறவு சங்கம்
- போக்குவரத்துச் சேவைக் கூட்டுறவுச் சங்கம்
- வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம்
- பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்

***கூட்டுறவுச் சங்கங்களால் ஆற்றப்படும் பணிகள்***

- நியாயமான விலையில் நுகர்வுப் பொருள்களை விற்பனை செய்தல்
- கடன் வசதிகள் செய்தல்
- நலன்புரி சேவைகளைச் செயற்படுத்தல்
- அங்கத்தவரின் சேமிப்பை நடைமுறைப்படுத்தல்
- விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்
  உ + ம் :- சுயதொழில்,
  சிறுவியாபாரம்,
  கல்விக் கருத்தரங்கு.
- வங்கிச் சேவை வழங்குதல்
- போக்குவரத்துச் சேவைகள்
- விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல்
- காப்புறுதி சேவைகளை வழங்குதல்
- மருத்துவமனைகளை நடாத்துதல்
- மரணச் சடங்கு சேவைகளை வழங்குதல்
- எரிபொருள் நிரப்பு நிலையங்களை நடாத்துதல்

இவ்வாறு நாம் வாழ்வின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வ தற்கான சேவைகள் பலவற்றை வழங்குவதற்குத் தயாராகவுள்ள கூட்டுறவு இயக்கத்தை மதிக்க வேண்டும்.

### 2.5.4 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கமும்

**1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

கூட்டுறவுத் திணைக்களத்தால் நிருவகிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இவையனைத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டுள்ள நிறுவனம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனப்படும். கடன் வழங்கும் சங்கங்களுக்குப் பதிலான செயற்பாடுகள் பலவற்றை மேற்கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் என்று இது அழைக்கப்படுகிறது.

இதன் அடிப்படை நோக்கம் கூட்டுறவுக் கொள்கையின்படி அங்கத்தவர்களிடையே பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகும். அங்கத்தவரிடையே சிக்கனம், சுய உதவி, அன்னியோன்னிய உதவி முதலிய உணர்வுகளை ஏற்படுத்துவதும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாகும். இக்கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு 18 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். தாம் வாழும் பிரதேசத்தில் வதிவிடத்தைக் கொண்டுள்ள சகலருக்கும் அப்பிரதேச கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெற முடியும். இன்று இலங்கையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றைக் காணமுடிகின்றது. 2013 டிசம்பர் மாதம் அளவில் இலங்கையில் 14221 கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 308 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். அவற்றுள் 304 செயற்படும் சங்கங்கள் ஆகும்.

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆற்றப்படும் சேவைகள்**

- பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்காகக் கூட்டுறவுச் சங்கக் கடைகளை நடாத்துதல்
- கடன் வழங்கும் சங்கங்களை நடாத்துதல்
- மரணச் சடங்கிற்குரிய சேவைகளை வழங்குதல்
- போக்குவரத்துச் சேவை, எரிபொருள் நிரப்புச் சேவை என்பவற்றை வழங்குதல்
- வைத்திய சேவைகளை நடாத்துதல்
- வங்கிச் சேவைகளை நடாத்துதல்
- சுயசேவையுடன் கூடிய விற்பனை நிலையங்களை நடாத்துதல் ( உதாரணம் :- கோப் சிட்டி)
- பால் விற்பனை நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகளை நடாத்துதல்
- கல்விச் சேவைகளை நடாத்துதல்
- காப்புறுதிச் சேவைகளை நடாத்துதல்
- பாலர் பாடசாலைகளை நடாத்துதல்
- அடகுச் சேவைகளை நடாத்துதல்

**2. பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்** ( School Co-op )

சிறுபராயம் முதல் கூட்டுறவை ஏற்படுத்த வேண்டும் எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்புடன் மாணவர்களின் இக்கூட்டுறவுச் சங்கம் செயற்படும். 2013 டிசம்பர் மாதத்தில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1134 ஆகும். இவற்றுள் 371 செயற்படும் சங்கங்களின் ஆகும்.

**பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் குறிக்கோள்கள்**

- கூட்டுறவுக் கொள்கைகளுக்கு ஏற்ப அங்கத்தவர்களின் பொருளாதார, சமூக, கலாசார, நலன்புரித் தேவைகளை நிறைவேற்றுதல்
- கூட்டுறவு முறையை செயற்படுத்துதல்
- பாடசாலையினுள் கூட்டுறவுப் பண்புகளைப் பரப்புதல்
- ஆக்கபூர்வமான தலைமைத்துவத்தை உருவாக்குதல்
- அறிவுடன் செயற்படக் கூடிய பிரஜைகளை உருவாக்குதல்

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் அதிபர், ஆசிரியர் குழுவின் பங்களிப்புடன் மாணவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்கள்

- மாணவர்களுக்குத் தேவையான எழுது கருவிகளை நியாய விலையில் வழங்குதல்
- பால் உட்பட வேறு உணவுப் பொருள்களை நியாய விலையிலும் சுத்தமாகவும் வழங்குதல்
- சிறு வயது முதலே பிள்ளைகளிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல்
- கல்வித் தேவைகளை நிறைவேற்றுதல்
- பயனுள்ள வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், போட்டிகளை நடாத்துதல்
- ஒழுக்கம், மரபுகள் என்பவற்றைப் பேணுவதற்கு மாணவர்களைப் பழக்கப்படுத்துதல்

### 2.5.5 பாடசாலை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள்

- எழுதுகருவிகளை நியாய விலையில் பெறுதல்
- உணவுப் பொருள்களை நியாய விலையில் பெறுதல்
- விளையாட்டுப் பொருள்களை நியாய விலையில் பெறுதல்
- தலைமைத்துவப் பயிற்சியை வழங்குதல்
- ஒத்துழைப்புடனான வாழ்க்கைக்குப் பழக்கப்படுதல்
- ஏனைய தேவைகளை நிறைவேற்றல்

இன்று மலேசியாவில் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகரமாகச் செயற் படுவதாக அறிய முடிகிறது. அதேபோன்று இலங்கையில் கண்டி தர்மராஜ கல்லூரியின் கூட்டுறவுச் சங்கமும் வெற்றிகரமாகச் செயற்படுவதாக அறிய முடிகிறது.

(ICA அமைப்பின் இணையத்தளம் *www.ica.org*)

**செயற்பாடு 2.5**



- உங்கள் பாடசாலையில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதன் முக்கியத்து வத்தை சுருக்கமாக முன்வைக்க

## 2.6 தேசியத்துவத்தைப் பாதுகாத்தவாறு உலகக் கிராமத்தின் அங்கத்தவராகச் செயற்படுவதன் முக்கியத்துவம்

### 2.6.1 உலகம் பற்றிய விரிவான பார்வை

மனிதன் உலகக் கிராமத்தின் அங்கத்தவனாவான். நாம் உலகக் கிராமத்தின் அங்கத் தவராகச் செயற்படும்போது உலகம் பற்றிய தெளிவான புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும். போட்டிமிக்க இவ்வுலகில் செயற்படுவதற்கு உலகம் பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.

''இன்றைய உலகில் பொருளாதார, சமூக, அறிவியல் துறைகளில் அடிக்கடி பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. பிரசை என்ற வகையில் அவ்வெல்லா மாற்றங்களையும் பற்றிய அறிவு, புரிந்துணர்வு என்பவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துணர்வுடனும் விளக்கத்துடனும் உலகுடன் இணைந்து செயற்படுவது உலகம் பற்றிய விரிவான பார்வை'' எனப்படும்.

உலகில் நிதமும் நிகழக்கூடிய மாற்றங்கள் காரணமாக இன்றைய நிலையை மாற்றி புதிய தகவல்கள், ஆக்கங்களை உலகுக்கு வழங்கக்கூடிய அங்கத்தவராகச் செயற்படுவதுடன் இம்மாற்றங்களுக்கு உதவியாக இருக்கவும் வேண்டும். இது எமது வாழ்க்கையைப் போலவே ஏனையவர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்துவதற்குத் துணைபுரியும்.

### 2.6.2 தேசியத்துவத்தை அர்த்தமுள்ள வகையில் மதித்தல்

**தேசிய கலாசாரம்**

உலகின் ஏனைய நாடுகளுக்குள்ளானதைப் போன்று எமது நாட்டிற்குரிய விசேட கலாசாரம் காணப்படுகின்றது. அதுவே அந்நாட்டின் தேசிய கலாசாரமாகும். இலங்கை பண்டைக் காலந்தொட்டு பல்கலாசார நாடொன்றாகும். இலங்கையில் ஆதிவாசிகள், சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் முதலிய பல்வேறு இனக்குழுக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் முதலிய பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்றனர். இவ்வனைத்து இனத்தவர்களுக்கும் தத்தமக்குரியதான கலாசாரம் காணப்படுகிறது. அதனுடன் பல்வேறு கலாசார அம்சங்களும் அடங்கியுள்ளன.

- இலங்கைக்கே உரிய பல்வேறு இனத்தவரிடையே காணப்படும் பிரபலமான கலாசார அம்சங்கள்.



**உள்நாட்டு உற்பத்தி**

தமது நாட்டின் வளங்களையும் சேவைகளையும் உற்பத்திசெய்வதே உள்நாட்டு உற்பத்தியாகும். இலங்கைக்கே உரிய அவ்வாறான உற்பத்திகள் சிலவற்றைப் பின்வரும் படங்களில் அவதானிக்கலாம்.





**தேசத்திற்கு மட்டும் உரித்தானவை**

ஒரு நாட்டிற்கு மட்டுமே உரித்தான வளங்களைத் தேசத்திற்கு மட்டும் உரித்தானவை எனலாம். இலங்கையில் மட்டுமே காணக்கூடிய சில அம்சங்களை நாம் நாட்டினுள் காணலாம். உள்நாட்டு மருந்துவகை, உள்நாட்டு தாவரங்கள், உள்நாட்டு விலங்குகள் என்பன இதனுள் அடங்கும்.


**எமது நாட்டிற்கே உரித்தான மூலிகைகள்**



கொத்தலா இம்புட்டு



பம்பரக் கொடி



மரமஞ்சள்



புஸ் கொடி

**எமது நாட்டிற்கே உரித்தான தாவர இனங்கள்**


சிறு மாங்காய்


ஆசினிப் பலா



பெருஞ் சிவப்புப் பூ


கெக்குண


பதுளை மரம்

**எமது நாட்டிற்கே உரித்தான விலங்கு வகைகள்**


மணிப்புறா


கருங்குரங்கு


பதிரண சாலயா (நன்னீர் மீன்)


காட்டு கோழி


ஓணான்

## வெளிநாட்டுக் கலாசாரத்தை அறிந்து கொள்தலும் அதன்மூலம் படிப்பினை பெறுதலும்

உள்நாட்டுக் கலாசாரம் பற்றியும் அவற்றின் பிரதான அம்சங்கள் பற்றியும் ஏற்கனவே கற்றோம். உமது நாட்டுக்கே உரித்தான கலாசாரம் போலவே பல்வேறு நாடுகளுக்கும் உரித்தான கலாசார அம்சங்கள் பலவும் காணப்படுகின்றன. அவை அந்நாடுகளுக்கே உரியவை என்றால் நாம் அவற்றிலிருந்து கற்றுக்கொள்வதற்கு நிறைய உண்டு. எனவே, உள்நாட்டுக் கலாசாரத்தைத் தாண்டி சிலநாடுகளின் கலாசாரப் பண்புகளைப் பற்றித் தெரிந்து கொள்வது பயனுடையது.

கிழக்காசிய நாடான ஜப்பானில் கலாசாரப் பண்புகள் பல காணப்படுகின்றன. தலைதாழ்த்தி வணக்கம் சொல்லுதல், பெண்கள் கிமோனா உடை அணிதல், சுமோ விளையாட்டு, இறந்தவர்களை வழிபடுதல் என்பன அவற்றுள் சிலவாகும். ஜப்பான் உலகில் சக்தி வாய்ந்த அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் நாடாகும். அபிவிருத்தியை நோக்கிப் பயணித்தது அவர்களின் கலாசாரத்தைப் பாதுகாத்து கொண்டவாறே ஆகும். ஜப்பானியரின் வணக்கம் செலுத்தும் முறையை அங்குள்ள சிறியோர் முதல் பெரியோர் வரை இன்றும் கடைப்பிடிக்கின்றனர்.



சிரம்தாழ்த்தி மரியாதை செலுத்துதல்



சுமோ விளையாட்டு



கிமோனா உடை

ஆபிரிக்க நாடுகளின் கலாசாரம் இதற்கு நேர்மாற்றமானது. அவர்களின் கலாசாரப் பண்புகளைப் பின்வரும் படங்கள் மூலம் அறியலாம்.





ஆபிரிக்கக் கலாசாரம்

ஆசிய நாடான சீனாவை எடுத்துக் கொண்டால் அவர்கள் வேதாளம் எனும் கற்பனை விலங்கை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்தைப் பின்பற்றுகின்றனர்.





சீனக் கலாசாரம்

**தேசியத்துவத்திற்கு மதிப்பளித்து தேசிய தனித்துவத்தைப் பாதுகாத்து உலக சமூகத்தில் பிரஜையொருவராகச் செயற்படுதல்**

''உலகம் பற்றிய விரிந்த பார்வை'' என்பது பற்றி நாம் ஏற்கனவே பார்த்தோம். அதன்படி மாற்றமடையும் இவ்வுலகுடன் அறிவு, தொழினுட்பம், நவநாகரிக மாதிரிகள், கலாசாரப் பண்புகள் எம்மை வந்தடைகின்றன் ஆயினும், அவற்றைப் பின்பற்றும் போது அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும். பூகோள சமூகத்தில் பெற்றுக் கொள்ளும் மாதிரிகளை எமது நாட்டுக்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்வதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறு நடைபெறாவிட்டால் நாம் எதிர்பாராத பிரச்சி னைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம்.

''சொந்த நாட்டு வளங்கள் சொர்க்கமாக அமையும்'' எனும் கூற்றுக்கு ஏற்ப எமது முன்னோர் பண்டைக் காலத்தில் தமக்கு வேண்டியவற்றைத் தாமே தயாரித்துக் கொண்டனர். இறந்த காலத்தின் கலாசாரத்தைப் பாதுகாத்து உலகம் தந்த அறிவையும் உள்வாங்கிக் கொண்டு எதிர்கால சந்ததியினருக்குத் தேவையானவற்றை வழங்கியுள்ளனர். எனவே, எமது கடமை என்னவெனில் அவர்கள் பெற்றுத் தந்தவற்றைப் பாதுகாத்து பூகோளக் கிராமத்திலிருந்து கிடைக்கும் முன்மாதிரிகளை தேசியத்துக்கு ஏற்ற வகையில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். இதற்குச் சிறந்த உதாரணத்தை அயல் நாடான இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அக்காலத்திலிருந்து இந்தியர் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டி வந்தனர். அந்த முன்மாதிரி அன்றைய இந்திய அரசியல்வாதிகள் மூலம் அவர்களுக்கு கிடைத்ததாகும். மகாத்மா காந்தி அவர்கள் தனது கைகளாலே தனக்குரிய ஆடைகளை நெய்து கொண்டார்.



தனக்குரிய ஆடையை நெய்யும் காந்தி அடிகளார்

இம்மாதிரியான முன்னுதாரணங்கள் மூலம் நாம் ஊட்டம் பெற வேண்டும். எமது நாட்டுக்குப் பொருந்தும் வகையில் அக்கலாசாரத்தின் மூலம் கிடைத்த முன்மாதிரி களைப் பிரயோகிப்பதில் கவனஞ் செலுத்த வேண்டும்.

### 2.6.3 உலகமயமாக்கலில் சகவாழ்வு செல்வாக்குச் செலுத்தும் விதத்தை அறிந்து கொள்ளுதல்

உலகில் வாழும் எந்தவொரு மனிதனாலும் தனித்து வாழ முடியாது. அதேபோல ஒரு நாடோ, ஓர் இனமோ தனித்து வாழ்வது முடியாத காரியமாகும். அதில் சில காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.



- வளங்களின் சமமின்மை
  (உ+ம் :- இலங்கையில் நுரைச்சோலை அனல் மின்னிலையத்துக்குத் தேவையான நிலக்கரி வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுதல்)
- பூகோளப் பல்வகைமை
- ஒரு நாட்டுக்குத் தேவையான சகலதையும் அந்நாட்டிலே உற்பத்தி செய்ய முடியாமை
- தொழினுட்ப வளர்ச்சியுடன் தகவல் தொழினுட்ப வளர்ச்சி துரித வேகம் கண்டுள்ளமை
- முழு உலகும் ஒரு கிராமமாகச் சுருங்கியுள்ளமை



மேற்படி விடயங்கள் பூகோளரீதியில் சகவாழ்வை மேற்கொள்ள வேண்டியமைக்கான காரணங்களாகும். எனவே, அவற்றுடன் இணைந்து செயற்படுவது தனிநபர் என்றரீதியில் நம்மனைவரதும் கடமையாகும். அவ்வாறு முடியாவிட்டால் உலகத்தின் முன்னிலையில் நாடொன்று என்ற வகையில் நாம் தனிமைப்பட்டு விடுவோம்.

### 2.6.4 அன்னியோன்னியத் தொடர்புகள்

நாம் வாழும் பிரதேசத்திலும் அயலவருடனும் வேலைத்தலங்களிலும் அன்னி யோன்னியத் தொடர்பு, சகவாழ்வு, ஒத்துழைப்பு நிலவுவதை அவதானிக்கலாம். 'ஒருவருக்கொருவர் உதவிசெய்வது ஒத்துழைப்புடன் செயற்படுதல் அன்னி யோன்னியத் தொடர்பு எனப்படும்.' நாட்டினுள் வாழும் இனக்குழுக்கள் மற்றும் சமயங்களிடையே நிலவும் சகவாழ்க்கை நாட்டின் சமாதானத்தினதும் அபிவிருத்தியினதும் அடிப்படையாகும். நாடொன்று என்ற வகையில் உலகின் ஏனைய நாடுகளுடன் அன்னியோன்னியத் தொடர்புகள் நிலவுகின்றன. எனவே, உலக நாடுகள் பல்வேறு சர்வதேச அமைப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளன.

உதாரணம் :- ஐக்கிய நாடுகள் சபை, ஆசியான், சார்க் அமைப்பு , ஐரோப்பிய ஒன்றியம்.

பல்வேறு ஒப்பந்தங்களான சப்தா (sapta), சப்டா (safta) என்பன ஏற்படுத்தப்பட் டுள்ளமை. இராஜதந்திரத் தொடர்புகள் மூலமும் உலகரீதியில் அன்னியோன்னியத் தொடர்புகள் பேணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

## செயற்பாடு - 2.6



- இலங்கைக்கே உரிய கலாசாரப் பண்புகள், கலாசார மரபுகள், கலாசார அம்சங்கள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.
- இலங்கைக்கே உரிய மரங்கள், விலங்குகள், மூலிகைகள் என்பவற்றைப் பெயரிடுக.
- அழிவடைந்து வரும் உள்நாட்டுத் தாவரங்கள், விலங்குகளைப் பெயரிடுக.
- பூகோளக் கிராமத்தில் செயற்படும்போது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உமது கருத்தை முன்வைக்குக.
- உலகில் நீங்கள் விரும்பிய நாடுகள் சிலவற்றைத் தெரிவுசெய்து அந்நாடுகளின் கலாசாரம் தொடர்பாக ஆய்வு செய்யுங்கள்.



### சாராம்சம்

- விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சியுடன் இணைந்து சமூகமும் பல்வேறு மாற்றங்களுக்கு நாளாந்தம் உட்படுகின்றது.
- ஆய்வுகள், பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் மூலம் சமூக முன்னேற்றம் ஏற்படுகின்றது.
- சனத்தொகை வளர்ச்சி, மனிதத் தேவைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை என்பன தொழினுட்பக் கருவிகளின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்துள்ளன.
- தொழினுட்பச் சாதனங்களைச் சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் நாம் கையாள வேண்டியுள்ளது.
- புதிய தொழினுட்பத்துடன் நாட்டின் பொருளாதாரத்தில் விவசாயம், கைத்தொழில். சேவைகள் என்பவற்றில் தொடர்ந்தும் மாற்றங்கள் இடம் பெறுகின்றன.
- விவசாயம், கைத்தொழில், சேவைகளில் புதிய போக்குகளைக் காணமுடிகிறது.
- சிக்கல் வாய்ந்த வாழ்க்கை முறைக்கேற்ப உலகம் போட்டிமிக்க வாழ்க்கை முறையொன்றுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் நாளுக்கு நாள் மனிதர்களிடம் நற்பண்புகள் குறைந்து வருகின்றன.
- நல்வாழ்வு மற்றும் சகவாழ்வு என்பவற்றின் மேம்பாட்டின் மூலம் வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

- ஒத்துழைப்புடன் ஒருவருக்கொருவர் உதவி செய்வதை நோக்காகக் கொண்டு கூட்டுறவு இயக்கம் உருவாக்கப்பட்டுச் செயற்படுகிறது.
- இன்று கூட்டுறவு இயக்கம் பல்வேறு சேவைகளையும் வழங்கக்கூடிய அமைப்பாக வளர்ச்சி கண்டுள்ளது.
- உலகம் பற்றிய விரிவான நோக்கை ஏற்படுத்தி தேசிய தனித்துவத்தைப் பாதுகாத்து, உள்நாட்டுக் கலாசாரத்தை மதிக்கின்ற பூகோள சமூகத்தின் பிரஜையாக செயற்படுவது முக்கியமானதாகும்.
- பூகோளரீதியல் செயற்படும்போது சகவாழ்வு, அன்னியோன்னியத் தொடர்பு என்பன அவசியமானவையாகும்.

# 3 சனநாயக ஆட்சி

## அறிமுகம்

சனநாயகமென்பது ஆட்சி முறை போலவே வாழ்க்கை முறைமையுமாகும். மக்கள் விருப்பினை அடிப்படையாகக் கொண்டு கட்டியெ ழுப்பப்பட்டுள்ள ஓர் ஆட்சி முறையே சனநாயக ஆட்சி என்று எளிதாகக் குறிப்பிடலாம். தற்கால உலகில் காணப்படுகின்ற ஆட்சி முறைகளுள் சனநாயக ஆட்சி முறை முக்கியமானதாகும்.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,**

- சனநாயகம் என்பதன் தெளிவான விளக்கம்,
- சனநாயக ஆட்சி முறையின் அடிப்படைப் பண்புகள்,
- சனநாயக சமூகத்தில் பிரசைகளுக்குள்ள உரிமைகளும் கடமைகளும்,
- சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள்,
- சனநாயக சமூகத்தில் தேர்தலும் வாக்குரிமையும்,
- சனநாயக சமூகப் பிரசை என்ற வகையில் சந்தர்ப்பத்துக்கேற்ற வகையில் நிலைபேறான தன்மையுடன் செயற்படுதல்,
- சனநாயக சமூகப் பிரசை என்ற வகையில் தேசியத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டிற்கான பங்களிப்பு ஆகியன தொடர்பான பரந்த விளக்கத்தினை பெற்றுக்கொள்ளல்

**இயலுமாகும்.**

## 3.1 சனநாயகம் பற்றிய அறிமுகம்

### 3.1.1 சமூகம் அறிமுகம்

பாடசாலையின் புதிய தவணை ஆரம்பத்துடன் நாவலர் மகா வித்தியாலயத்தின் தரம் 9 இற்கான வகுப்புத் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டிய தேவை வகுப்பாசிரியைக்கு ஏற்பட்டது. அதற்குப் பொருத்தமான வழிமுறை பற்றி மாணவர்களிடம் கேட்கப்பட்டபோது வகுப்பறையில் அவர்களிடையே நடைபெற்ற நிகழ்ந்த கலந்துரையாடலின் ஒரு பகுதி பின்வருமாறு,



துஷாந்தன்

ரஸ்மி வகுப்புத் தலைவராவதை நான் விரும்புகிறேன்.

நாம் ... வேறொருவரையும் வகுப்புத் தலைவராகத் தெரிவு செய்யலாம் தானே....



மதுசன்



தேவிகா

ராசிக் வகுப்புத் தலைவராவதை நான் விரும்புகிறேன்.

துஷாந்தன் வகுப்புத் தலைவராவதை நான் விரும்புகிறேன்.



பாத்திமா



ஆசிரியை

பிள்ளைகளே! நீங்கள் சிலரின் பெயர்களைப் பிரேரிக்கிறீர்கள். எனவே வகுப்புத் தலைவரைத் தெரிவுசெய்வது இப்போதைக்கு இலகுவான காரியமன்று. நல்லது, இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்யலாம் என்பதை யாராவது சொல்லுங்கள் பார்க்கலாம்?

அப்படியென்றால் நாம் தேர்தல் ஒன்றின் மூலம் வகுப்புத் தலைவரைத் தெரிவு செய்வோம்.



அஹமட்



மாலா

அஹமட்டுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அப்படியாயின் இன்று நாம் சனநாயம் பற்றியும் படிக்கலாம். எமது குடியியல் கல்விப் பாடத்தில் சனநாயகம் என்றொரு தலைப்பு இருக்கின்றதல்லவா?

மிகவும் நல்லது. அஹமட் சொல்லிய கருத்து மிகவும் பெறுமதியானது. அப்படியாயின் நாம் தேர்தல் ஒன்றை நடாத்தி அதிக வாக்குகளைப் பெறும் ஒருவரை வகுப்புத் தலைவராக நியமிப்போம்.



ஆசிரியை

சனநாயகம் என்பது மக்களின் அதிகாரத்தைக் குறிக்கும். சனம் என்பது மக்களையும் நாயகம் என்பது தலைவரையும் குறிக்கும். எனவே மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவர்களால் மேற்கொள்ளப்படும் ஆட்சிமுறை என ஜனநாயத்திற்கு எளிமையாக வரைவிலக்கணம் கொடுக்கலாம். சனநாயகம் என்பது ஆங்கிலத்தில் DEMOCRACY என்று வழங்கப்படுகிறது. அது கிரேக்க மொழியிலிருந்து உருவானதாகும். கிரேக்க மொழியில் "Demos" என்றால் மக்கள் என்றும் "Kratos" என்றால் ஆட்சி என்றும் பொருள்படும்.

சனநாயகம் பற்றி அறிஞர்களால் பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் சிலவற்றைப் பார்ப்போம்.

மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சி.

-ஆபிரகாம் லிங்கன் -


சனநாயகம் அனைவருக்கும் உரிமைகளைப் பெற்றுத்தரும் ஆட்சி முறையாகும்.

- சீலர் -

பொதுமக்களின் பெரும்பான்மை விருப்பின் பேரில் அவர்களால் கட்டியெழுப் பப்படும் ஆட்சிமுறை சனநாயக ஆட்சி முறை என எளிமையாக விளக்கலாம்

சனநாயகம் ஓர் ஆட்சிமுறை என்பதைப் போன்று ஒரு வாழ்க்கைமுறை என்ற வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது. ஒவ்வொரு பிரசையும் தனது கடமைகளை நிறைவேற்றுவதுடன் உரிமைகளை அனுபவித்தல், அடுத்தவரின் கருத்தை மதித்தல், கலந்து ரையாடல் மூலம் முடிவுகளை மேற்கொள்ளல், சமத்துவத்திற்கு மதிப்பளித்தல் முதலியன சனநாயக வாழ்க்கை முறையின் பண்புகளுக்கான சில உதாரணங்களாகும். அப்பண்புகள் பிரஜைகளின் வாழ்க்கையில் வெளிப்படும்போது சிறந்த, சமாதானமான சமூகமொன்று கட்டியெழுப்பப்படும். குடும்ப அங்கத்தவர் என்பது போலவே பாடசாலையின் அங்கத்தவர் என்ற வகையிலும் இப்பண்புகளை வளர்த்துக் கொள்வது முக்கியமானது. சமூகத்தில் அனைவரிடமும் இப்பண்புகள் வளர்ச்சியடைவது ஜனநாயக ஆட்சி நல்ல முறையில் நிலைநாட்டப்படுவதற்குக் காரணமாக அமையும்.

### செயற்பாடு 3.1



- சனநாயகம் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் சிலவற்றைத் தொகுத்துக் கூறுக.
- சனநாயகம் பற்றி எளிமையான சொந்த வரைவிலக்கணமொன்றை உருவாக்குக.

## சனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள்

அஷ்ரப் மத்திய கல்லூரியின் தரம் 9 இன் குடியியற் கல்விப் பாட ஆசிரியை தனது பாடவேளையின்போது வகுப்புக்கு வந்தார். அப்போது வகுப்பு மாணவர்களுக்கும் ஆசிரியைக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் ஒரு பகுதியின் வருமாறு,

நேரடி சனநாயகம் என்ற ஒன்று நெடுங்காலத்துக்கு முன்னர் நிலவியுள்ளது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன் அது உண்மை தானா.


தேனுஜன்


நிமேஷா

ஆமாம். கிரேக்க நாட்டின் எதேன்ஸ் நகரில் நேரடி சனநாயகம் நிலவியதாம்.


இப்போது நேரடி சனநாயகம் செயற்படுவதில்லையா?


சியாம்


யாழினி

இன்று மறைமுக சனநாயகமே நிலவுவதாக நான் புத்தகமொன்றில் படித்துள்ளேன். சில சந்தர்ப்பங்களில் மறைமுக சனநாயக ஆட்சி முறையிலும் நேரடி ஜனநாயகப் பண்புகளை செயற்படுத்துவதற்குள்ள சந்தர்ப்பங்களை அவதானிக்கலாம்.

மிகவும் நல்லது. நான் இன்று சொல்லித்தரவிருந்த பாடம் தொடர்பில் அதிகமான விடயங்களை நீங்களே தெரிந்து வைத்துள்ளீர்கள்.


ஆசிரியை

**சனநாயகம்**

- நேரடி சனநாயகம்
- மறைமுக சனநாயகம்

## நேரடி சனநாயகம்

ஒரு நாட்டின் பிரசைகள் நேரடியாக ஆட்சியில் பங்குபற்றுதல் நேரடி சனநாயகத்தின் அடிப்படை இயல்பாகும். கிரேக்கத்தின் எதேன்ஸ் நகர அரசியலில் நிலவியது இவ்வாறான ஆட்சி முறையாகும். எதேன்ஸ் நகர அரசில் பிரதான ஆட்சி நிறுவனமாக விளங்கியது பிரசைகள் சபையாகும். அங்கு ஆட்சி நடவடிக்கைகள் தொடர்பாகப் பிரசைகளின் விருப்பம் நேரடியாக வினவப்பட்டுள்ளது. ஆட்சி நடவடிக்கைகளில் பிரசைகள் அனைவரும் தொடர்புபட்டிருந்தனர்.

**தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டிலும் ஆட்சி நடவடிக்கைகளிலும் பிரசைகள் நேரடியாகத் தொடர்புபடுவது நேரடி சனநாயகமாகும்.**

நேரடி சனநாயகம் செயற்படுத்தப்பட்ட எதேன்ஸ் நகர அரசில் அடிமைகள், பெண்கள், வெளிநாட்டவர் என்போருக்கு ஆட்சி நடவடிக்கைகளில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. நகரவாசிகளுள் வயது வந்த ஆண்களுக்கு மட்டுமே நேரடி சனநாயக ஆட்சி முறையின்கீழ் செயற்படுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.


### நேரடி சனநாயக ஆட்சி முறையை அன்றைய காலத்தில் நடைமுறைப்படுத்துவது இலகுவாயமைந்தமைக்கான காரணங்கள்

- மனிதனின் தேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தமை
- சனத்தொகை குறைவாகக் காணப்பட்டமை
- ஒரிடத்தில் கூடி கலந்துரையாடுவதும் தீர்மானங்களுக்கு வருவதும் இலகுவாக இருந்தமை

**நேரடி சனநாயக ஆட்சி முறையை செயற்படுத்துவதில் இன்று காணப்படும் தடைகள்**

- *நாடுகளின் சனத்தொகை அதிகரித்தமை*
- *மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுவதற்கு வசதியின்மை*
- *மனிதர்களின் தேவைகள் விரிவடைந்தமை*
- *தற்கால ஆட்சி நிருவாகமுறை சிக்கலான தன்மையைக் கொண்டிருக்கின்றமை*

**செயற்பாடு 3.2**



- *இன்று நேரடி சனநாயக முறையைச் செயற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை உதாரணத்துடன் விளக்குக.*
- *கிரேக்கத்தின் எதேன்ஸ் நகரில் செயற்பட்ட நேரடி சனநாயக ஆட்சி முறையில்காணப்பட்டபலவீனங்கள்சிலவற்றைஅட்டவணைப்படுத்துக*

**மறைமுக சனநாயகம்**

- *நேரடி சனநாயகத்தை செயற்படுத்துவதிலுள்ள சிரமங்கள் காரணமாக மறைமுக சனநாயகம் ஆரம்பமானது.*
- *பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது மறைமுக சனநாயகத்தின் பண்பாகும். காலத்துக்குக் காலம் நடைபெறும் தேர்தல்கள் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.*
- *மறைமுக ஜனநாயகம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனவும் அழைக்கப்படும்*


*இன்று பிரதிநிதித்துவ ஜனநாயகம் செயற்படும் நாடுகளில் சில விடயங்கள் தொடர்பாக நேரடியாக மக்களிடம் விருப்பத்தை அறிவதற்கு அரசியல் யாப்பின்மூலம் இடமளிக்கப்பட்டுள்ளது.*

*அவ்வாறு பிரயோகிக்கப்படும் நேரடி சனநாயக முறைக்கு உதாரணமாக பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பைக் கூறலாம். எமது நாட்டிலும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு எமது நாட்டு அரசியல் யாப்பின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

### 3.1.2 *பிரதிநிதித்துவ சனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள்*

*பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கிணங்க பிரதிநிதிகளால் ஆட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பிரதிநிதித்துவ சனநாயக ஆட்சி முறையின் அடிப்படைப் பண்பாகும். பிரதிநிதித்துவ ஆட்சி நடைபெறும் நாடொன்றில் காணப்படக்கூடிய பண்புகள் பலவாகும். தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவர்கள் சனநாயகத்தின் அடிப்படைப் பண்புகளை ஆக்கபூர்வமாக கலந்துரையாடி முன்வைப்புச் செய்த விதம் இங்கு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.*

பிரதிநிதித்துவ சனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள்



### 3.1.3 சனநாயக ஆட்சி முறையின் வெற்றிக்குத் தேவையான காரணிகள்

சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகளைத் தொகுத்து சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குமாறு குடியியற் கல்விப் பாட ஆசிரியை தமது வகுப்பு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். ஒரு குழுவினர் தயாரித்த சுவரொட்டியில் காணப்பட்ட விடயங்கள் பின்வருமாறு,

சனநாயகத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

- மக்களின் அரசியல் அறிவும் புரிந்துணர்வும் உயர் மட்டத்தில் காணப்படும்.
- மக்கள் ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்யும்போது புத்திசாதுரியத்துடன் செயற்படுவர்.
- அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய வசீகரமிக்க தலைமைத்துவம் காணப்படல்.
- நாட்டில் சிறந்த பொருளாதார நிலை காணப்படல்.
- ஊடகத்துறைத் சுதந்திரம் நிலவுதல்.
- நாட்டில் சட்டவாட்சி நிலவுதல்.
- அரசாங்கத்தின் பணிகள் தெளிவான முறையில் வேறுபடுத்தப் பட்டிருத்தல்.
- பலமான எதிர்க்கட்சி காணப்படல்.





தேர்தலின் போது வாக்காளர் வாக்களித்தல்

### 3.1.4 பிரதிநிதித்துவ சனநாயகம் நிலவும் நாடுகள் சில

- இலங்கை
- இந்தியா
- ஜப்பான்
- பிரான்ஸ்
- ஐக்கிய இராச்சியம்
- சுவிற்சர்லாந்து
- ஐக்கிய அமெரிக்கா
- கனடா

## செயற்பாடு 3.3



- பின்வரும் அட்டவணையில் நிரல் I இல் சனநாயகத்தின் வெற்றிக்கு ஏதுவாகும் காரணிகள் தரப்பட்டுள்ளன. அவை சனநாயக ஆட்சியின் வெற்றிக்குக் காரணமாக அமையும் விதத்தை நிரல் II இல் சுருக்கமாகக் குறிப்பிடுக.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| **சனநாயகத்தின் வெற்றிக்குத் தேவையான காரணிகள்** | **சனநாயக ஆட்சியின் வெற்றிக்குக் காரணமாக அமையும் விதம்** |
| அரசியல் அறிவும் புரிந்துணர்வும் உடைய பொதுமக்கள் | |
| அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உண்மையான தலைவர்கள் | |
| ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யும்போது புத்திசாதுரியத்துடன் செயற்படுதல் | |
| உறுதியான எதிர்க்கட்சி காணப்படுதல் | |
| சட்டத்தின் ஆட்சி நிலவுதல் | |

சனநாயக ஆட்சி தொடர்பான மேலதிக தகவல்களை தரம் 10 குடியியற் கல்விப் பாட நூலின் முதலாம் அத்தியாயத்தினை வாசித்து விளங்கிக் கொள்ளலாம்.

## 3.2 சனநாயக சமூகத்தில் பிரசை ஒருவருக்குள்ள உரிமைகளும் அதனோடு இணைந்த கடமைகளும்

### 3.2.1 பிரசை ஒருவருக்குள்ள உரிமைகள்

சனநாயக சமூகமொன்றில் பிரசை ஒருவருக்குள்ள உரிமைகள் பற்றி தரம் 9 மாணவ மாணவிகளிடையே நிகழ்ந்த கலந்துரையாடலின் ஒருபகுதி பின்வருமாறு,



ஈஸ்வரி

சிறந்த வாழ்க்கையை மேற்கொள்வதற்காகத் தனி நபருக்கு சமூகத்தில் கிடைத்துள்ள அனைத்தும் உரிமைகளாகும் என்று எனது அப்பா சொல்லித் தந்தார்.

நாம் எல்லோரும் பெயரையும் இனத்தையும் கொண்டிருப்பதற்கு உரிமை உடையவர்களாவோம்.



நிரோஜன்



ராதா

பெயரும் இனமும் இருப்பது போலவே சுதந்திரமாக வாழ்வதற்கும் உரிமை இருக்க வேண்டும் தானே? ஏனைய எல்லா உரிமைகளையும் விட வாழ்வதற்கான உரிமை பெறுமதியானது என நான் நினைக்கின்றேன்.



ராஜா

ஏன் கல்வி பெறுவதற்குள்ள உரிமையும் முக்கியம் தானே?




ஜஸ்மின்

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் ஒன்றைச் செய்யவும் உரிமையுண்டு அல்லவா?



சுரேஸ்

தாம் விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமையும் முக்கியமானது.



குமார்

ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்வதற்கான உரிமையும் சனநாயக சமூகத்தில் பிரசைக்குரிய முக்கியமான உரிமையாகும்.



ஆசிரியை

இந்தப் பிள்ளைகள் கெட்டிக்காரர்கள். சனநாயக சமூகமொன்றில் பிரசைகளுக்குரிய உரிமைகள் என்னவென்று எல்லாரும் தெரிந்து வைத்துள்ளீர்கள்.

மேற்படி கலந்துரையாடலைச் செவிமடுத்த மாணவி ஒருவர் பிரசை ஒருவருக்குள்ள உரிமைகளைச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பெடுத்திருந்தார்.

- வாழ்வதற்கான உரிமை
- பெயரையும் இனத்தையும் கொண்டிருப்பதற்கும் உரிமை
- கல்வி பெறுவதற்கான உரிமை
- அங்கீகரிக்கப்பட்ட தொழில் ஒன்றைச் செய்வதற்கான உரிமை
- தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றுவதற்ககான உரிமை
- தான் விரும்பும் இடத்தில், பிரதேசத்தில் வாழும் உரிமை
- ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்யும் உரிமை
- தான் விரும்பிய அரசியல் கட்சிக்கு வாக்களிக்கும் உரிமை
- தொழிற்சங்கங்களில் சேர்வதற்குள்ள உரிமை

நாம் அனுபவிக்கும் உரிமைகளுடன் இணைந்த கடமைகளையும் சிறப்பாகச் செய்வது, உரிமைகளை மேலும் பாதுகாப்பதற்குக் காரணமாக அமையும். தாம் அனுபவிக்கும் உரிமைகளுடன் இணைந்த கடமைகளைச் செய்வது ஏனையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பெருந்துணைபுரியும். அடுத்து அவ்வாறான கடமைகள் என்ன வென்று பார்ப்போம்.

### 3.2.2 உரிமைகளை அனுபவிக்கும் எம்மால் சமூகத்திற்கு ஆற்றப்பட வேண்டிய கடமைகள்

உரிமைகளை அனுபவிக்கும் எம்மால் சமூகத்துக்கு ஆற்றப்பட வேண்டிய பணிகளே கடமைகளாகும் என அறிமுகப்படுத்தலாம். ஒவ்வொரு உரிமையுடனும் இணைந்த ஒவ்வொரு கடமை காணப்படுகிறது. உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று காணப்படுகின்றன. சனநாயக சமூகத்தில் சமாதானம், சகவாழ்வு, ஒற்றுமை சமூகப் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குக் கடமைகளைச் செய்வது துணைபுரியும்.

எனவே, உரிமைகளை அனுபவிக்கும்போது பிரசைகள் என்ற வகையில் எம்மால் சமூகத்திற்கு ஆற்றப்பட வேண்டிய கடமைகள் பல உள்ளன. அவற்றுக்கான உதாரணங்கள் சில பின்வருமாறு,

- சிறப்பான முறையில் கல்வி பெறுதல்.
- பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் கட்டுப்படுதலும் அவர்களை மதித்தலும்.
- மூத்தோரை ஆதரித்தல்.
- சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- சமயப் பெரியார்களை மதித்தல்.
- சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதலும் அவற்றைக் கடைப்பிடித்தலும்.
- பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு உதவியாக இருத்தல்.
- அரசினால் விதிக்கப்படும் வரிகளை உரிய முறையில் செலுத்துதல்.
- தாம் பெற்றுக் கொள்ளும் சேவைகளுக்குரிய கட்டணங்களைச் செலுத்துதல்.
- இலஞ்சம், ஊழல் போன்ற மோசமான நடவடிக்கைகளைத் தவிர்த்தலும். அவற்றைத் தடுப்பதற்கு உதவுதலும்.
- சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.
- பயங்கரவாதத்தைப் புறந்தள்ளுதல்.
- கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல்.
- தேசத் துரோக செயல்களைத் தவிர்த்தல்.
- குப்பை கூளங்களையும் கழிவுகளையும் உரிய முறையில் அகற்றுதலும் அது தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு உதவுதலும்.
- சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாத்தல்.

பாடசாலை மாணவர் ஒருவரான உமது கடமை கல்வி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டு சமூகத்திற்குப் பயனுள்ள பிரசையாவதாகும். இதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றுடன் தேர்ச்சியையும் ஏற்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும். ஆசிரியர் தனது கடமையை நிறைவேற்றுவது மாணவரின் உரிமைகளை அனுபவிப்பதில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும்.

*1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் 28 ஆம் வாசகம் பிரசை ஒருவரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைக் கடமைகள் சிலவற்றைக் கூறுகின்றது. அவையாவன.*

- *அரசியல் யாப்பையும் சட்டத்தையும் போற்றிப் பாதுகாத்தல்.*
- *தேசிய நலனை மேம்படுத்தலும், தேசிய ஐக்கியத்தை வளர்த்தலும்.*
- *தாம் தேர்ந்தெடுத்த தொழில் முயற்சியை மனச்சாட்சியுடன் செயற்படுத்தல்.*
- *பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்தலும் அவை பிழையான முறையில் பயன்படுத்தலையும் வீணாக்கப்படுதலையும் தடுத்து நிறுத்துதலும்.*
- *மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதித்தல்.*
- *இயற்கையைப் பாதுகாத்தலும் அதன் செல்வங்களைக் காத்தலும்.*

### 3.2.3 சட்டத்திற்குட்பட்ட வகையில் உரிமைகளை அனுபவிப்பதன் முக்கியத்துவம்

ஒவ்வொரு பிரசையும் சட்டத்திற்குட்பட்ட வகையிலேயே உரிமைகளை அனுபவிக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனின் மற்றொருவரின் உரிமை பாதிக்கப்படுவதற்கு அது காரணமாக அமையலாம். சட்டத்திற்குட்பட்ட வகையில் உரிமைகளை அனுபவிப்பதற்கு எல்லாப் பிரசைகளும் முன்வருவாராயின் அது தேசிய அபிவிருத் திக்கு உதவும்.

- *பிரசை ஒருவருக்கு வீதியில் பயணஞ்செய்ய உரிமை இருந்தாலும் வீதிச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டே அவர் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.*
- *தொழில் செய்வதற்கு ஒவ்வொரு பிரசைக்கும் உரிமை இருப்பினும் அது சட்டரீதியான தொழிலாக இருக்க வேண்டும்.*
- *தொழில்ரீதியான உரிமைகளை வென்றெடுப்பதற்கு உரிமை இருப்பினும் அதற்கான நடவடிக்கைகள் நாட்டில் நிலவும் சட்டத்திற்குப் புறம்பாக அமையக் கூடாது.*

*சனநாயக நாடுகளில் பொது சமூக நலனைப் பாதுகாப்பதற்காகவும் சமாதான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காகவும் உரிமைகளை அனுபவிப்பதற்கு எல்லை விதிக்கப்பட்டுள்ளது. யுத்தகாலங்களில் ஊடகங்களைக் கட்டுப்படுத்தல், பொதுச் சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் சேதமேற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றைத் தடுத்தல் என்பன இதற்குரிய உதாரணங்களாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் விதிக்கப்படும் தடைகள் பிரசை களின் உரிமைகளை மீறுவதாக அமையாது. அது சமூகத்தின் நன்மைக்கும் தேசிய அபிவிருத்திக்கும் பெருந்துணை புரிவதாக அமையும்.*

## 3.3 அரசியல் கட்சியொன்றின் கடமைகளை அறிந்து கொள்வோம்

### 3.3.1 அரசியல் கட்சிகள் ஓர் அறிமுகம்

தரம் 9 மாணவர்கள் இருவரிடையே அரசியல் கட்சிகள் தொடர்பான வாதமொன்று இடம்பெற்றது. இதன்போது அவர்களால் முன்வைக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கான எளிய வரைவிலக்கணங்கள் இரண்டு பின்வருமாறு,







அரசியல் கட்சிகள் தொடர்பில் பல்வேறு அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் சில பின்வருமாறு,






அரசியல் கட்சி என்பது குறிப்பிட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒன்றிணைந்த தனிநபர்களைக் கொண்ட குழுவொன்றாகும்.

எமது நாட்டில் அரசியல் கட்சிகள் பலவும் செயற்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வேறு நாடுகளிலும் அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. ஒரு நாட்டில் செயற்படும் அரசியல்கட்சி முறையை அடிப்படையாகக் கொண்டு அது வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**அரசியல் கட்சி முறை**

| ஒரு கட்சி முறை | இரு கட்சி முறை | பல கட்சி முறை |
| --- | --- | --- |
| ஒரு நாட்டில் ஓர் அரசியல் கட்சி மட்டும் தொடர்ந்து அதிகாரத்தைப் பெற்றுக் தொடர்ச்சியாக செயற்படுமெனின் அது ஒரு கட்சி முறையாகும். சோசலிச நாடுகளில் செயற்படும் கட்சியாகும். உதாரணம் :- வடகொரியா, கியூபா | ஒரு நாட்டில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உண்மையாகச் செயற்படுவன இரண்டு கட்சிகள் என்றால் அது இரு கட்சி முறையாகும். அந் நாட்டில் வேறு கட்சிகள் காணப்படலாம். ஆனால் அவை அரசியல் அதிகாரம் பெறும் வகையில் பலம் வாய்ந்திருக்காது. அரசியல் அதிகாரத்தைப் பெறுவதில் இரண்டு கட்சிகளினிடையேயும் போட்டி நிலவும். உதாரணம் :- ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் | ஒரு நாட்டில் இரண்டு கட்சிகளை விடக் கூடுதலான கட்சிகள் செயற்படுமாயின் அவ்வாறான நாடு பல கட்சி முறை நிலவும் நாடாகும். அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சில கட்சிகள் ஒன்றிணைவது பல கட்சி முறை நிலவும் நாடுகளில் காணப்படும் பண்பாகும். உதாரணம் :- இலங்கை, இந்தியா |

### 3.3.3 அரசியல் கட்சியொன்றின் பணிகள்

- சிதறிக் காணப்படும் பொதுசன அபிப்பிராயத்தை ஒன்று திரட்டல்.
- தமது கட்சியின் நோக்கம், கொள்கை என்பவற்றைச் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
- எதிர்காலத் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல்
- பொதுமக்களுக்கு அறிவூட்டடல்.
- எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் சனநாயகக் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்.
- அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஏனைய கட்சிகளுடன் போட்டியிடல்.
- சமூக நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 3.3.4 மக்கள் சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அரசியல் கட்சிகள் ஆற்ற வேண்டிய பணிகள்

ஒரு நாட்டில் பல்வேறு கருத்துக்களையுடைய மக்கள் பலரும் காணப்படலாம். அவர்கள் அனைவரையும் பொதுநோக்கம் ஒன்றின்பால் திசைதிருப்புவது அரசியல் கட்சி செய்யவேண்டிய செயற்பாடாகும். அச்சந்தர்ப்பத்தில் தமது அரசியல் நோக்கத்தை அடைவதை மட்டும் கருத்திற் கொண்டு அரசியற் கட்சிகள் செயற்படக் கூடாது.

ஒரு நாட்டின் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும் பிரதான பொறுப்பு அரசியல் கட்சி களுக்கு உரியதாகும். அதற்கமைய அரசியல் கட்சிகளால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் சில பின்வருமாறு.

- பிரதேசம், இனம், சமயம் எனும் பேதங்களைக் கருத்திற் கொள்ளாது தேசியத் தேவைகளைக் கருத்திற்கொண்டு சனநாயக ஆட்சியை அர்த்தமுடையதாக்கி பிரயோகரீதியில் செயற்படுத்தல்.
- பல் கலாசார சமூகத்தில் எல்லா இனக் குழுவினரும் உரிமைகளை அனுபவிப் பதற்கான அடிப்படையை உருவாக்கல்.
- தேசிய ஒற்றுமை மூலம் தேசிய அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
- இனரீதியான, சமயரீதியான முரண்பாடுகள் ஏற்படும் வகையிலான செயற்பாடு களிலிருந்து தவிர்ந்திருக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தல்.
- முழு நாட்டு மக்களையும் ஒற்றுமையாகவும், சமத்துவமாகவும் ஒன்றுபட்டும் புரிந்துணர்வுடன் வாழ்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துதல்.

## 3.4 வாக்குரிமையும் தேர்தலும்

### 3.4.1 வாக்குரிமை

வாக்கு என்பது விருப்பமாகும். தான் விரும்பிய ஆட்சியாளரை அல்லது பிரதி நிதிகளைத் தெரிவுசெய்வதற்கு தமது விருப்பத்தை வெளியிடுவது தேர்தலின் மூலமாகும். ஜனநாயக நாடொன்றில் பிரசைகளுக்கான அரசியல் உரிமைகளுள் வாக்குரிமை பிரதானமானது. தேர்தல் ஒன்றின்போது மக்கள் பிரநிதிகளைத் தேர்ந் தெடுப்பதற்கு பிரசைகளுக்குள்ள உரிமை வாக்குரிமை எனப்படும்.

மக்கள் பிரநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் மக்கள் கருத்தை அறிவதற்கும் நடைபெறும் தேர்தல்களில் தமது விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமை வாக்குரிமையாகும்.

எமது நாட்டில் 18 வயது பூர்த்தியான பிரசைகளுக்கு சட்டரீதியாக வாக்குரிமை கிடைக்கும். உரிய முறையில் தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டிருப்பது வாக்குரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதியாகும்.

1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி வாக்குரிமை இல்லாமற் போவதற்கான காரணங்கள் சில பின்வருமாறு

- குடியுரிமை இல்லாமற் போனவர்.
- சித்த சுவாதீனமற்றவர் என சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்டவர்.
- குடியுரிமை நீக்கப்பட்டவர்.
- ஆயுள் கைதியாகச் சிறைவைக்கப்பட்டவர்.
- மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
- நீதிமன்றத்தால் வங்குரோத்தானவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

### 3.4.2 தேர்தல்

சனநாயக ஆட்சிமுறையில் பிரசைகளால் வாக்களிக்கப்பட்டு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர். ஆட்சி நிறுவனங்களுக்கு மக்கள் பிரதிநிகளைத் தெரிவு செய்தல், நாட்டின் முக்கியமான விடயங்கள் தொடர்பில் மக்கள் கருத்துக்கோரல் என்பவற் றுக்காகத் தேர்தல்கள் நடைபெறும்.

மக்கள் வாக்களிக்கும் நடவடிக்கை பல சந்தர்ப்பங்களில் நிகழ்வதுண்டு. சனநாயக சமூகமொன்றில் ஆட்சி நிறுவனங்களுக்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கு அதனூடாகச் சந்தர்ப்பம் கிட்டும். அதேபோன்று நாட்டின் முக்கியமான விடயங்கள் தொடர்பாக மக்கள் கருத்தை அறிவதற்காகவும் வாக்களிப்பு இடம்பெறும். எனவே, சனநாயக நாடுகளில் மக்களின் கருத்தை அறிவதற்காக மேற்கொள்ளப்படும் செயன்முறையே தேர்தல் ஆகும்.

**இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள்**

- *சனாதிபதித் தேர்தல்*
- *பொதுத் தேர்தல் / பாராளுமன்றத் தேர்தல்*
- *மாகாணசபைத் தேர்தல்*
- *உள்ளூராட்சி மன்றத் தேர்தல்*

### 3.4.3 சர்வசன வாக்குரிமை

*எவ்வித வேறுபாடுகளுமின்றி உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்துப் பிரசைகளும் தேர்தலின்போது வாக்களிப்பதற்கான உரிமை சர்வசன வாக்குரிமை எனப்படும். சர்வசன வாக்குரிமை கிடைப்பதற்கு முன்னர் எமது நாட்டில் செயற்படுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட வாக்குரிமை பற்றி குடியுரிமைக் கல்வி பாட ஆசிரியை மாணவர்களிடம் வினவியபோது மாணவர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் ஒரு பகுதி பின்வருமாறு,*



**ரவி**

*நான் வரலாற்றுப் பாடத்தில் படித்திருக்கிறேன். 1910 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி இலங்கையருக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை கிடைத்தது. அதன்படி 21 வயதுக்கு மேற்பட்ட கல்விகற்ற, செல்வம் படைத்த ஆண்களுக்கு மட்டுமே வாக்குரிமை கிடைத்தது.*

*அந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் பெயர் குறூ மக்கலம் யாப்பு என்பதாகும்.*



**நிரோஜன்**



**நந்தினி**

*சட்டவாக்கக் கழகத்திற்கு முதன்முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யக் கிடைத்தமை குறூ - மக்கலம் யாப்பின் சிறப்பியல்பாகும்.*

*உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்களுள் நால்வர் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.*



**ஜேசப்**



**மீனா**

*ஐரோப்பியருக்காக இருவர் பறங்கியருக்காக ஒருவர், கல்வி கற்ற இலங்கையருக்காக ஒருவர் என்ற வகையில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.*

*பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் கல்விகற்ற இலங்கையர் சார்பில் முதன்முதலாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினராவார்.*



**அல்பிரட்**



**ஆசிரியை**

*வரையறுக்கப்பட்ட வாக்குரிமை தொடர்பாக மிகவும் முக்கியமான விடயங்களை ஏற்கனவே நீங்கள் தெரிந்து வைத்துள்ளீர்கள். எனவே, சர்வசன வாக்குரிமை எவ்வாறு கிடைத்ததென்று நான் சொல்லித் தருகின்றேன்.*

*1931 ஆம் ஆண்டின் டொனமூர் அரசியல் யாப்பின்படி 21 வயது பூர்த்தியான இலங்கைப் பிரசைகளான ஆண், பெண் இருபாலாருக்கும் சர்வசன வாக்குரிமை கிடைக்கப் பெற்றது. எமது நாட்டில் அதிகளவு நலன்புரி சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக அமைந்ததே சர்வசன வாக்குரிமையாகும். 1958 ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமைக்கான வயதெல்லை 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.*

**வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதிகள்**

- இலங்கைப் பிரசையாக இருத்தல்
- 18 வயது பூர்த்தியாயிருத்தல்
- தேர்தல் இடாப்பில் பெயரைப் பதிவு செய்திருத்தல்
- வாக்களிக்கும் உரிமையினை இழக்காதவராயிருத்தல்

**வாக்களிப்பின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்**

- கல்வியறிவுடைய முன்மாதிரியான தலைவர்களைத் தெரிவுசெய்தல்
- தேர்தலுக்கு முன்னர் வெளியிடும் கொள்கை விஞ்ஞாபனங்களைக் கருத்திற் கொள்ளல்.
- சொந்த இலாபத்தை எதிர்பார்த்து செயற்படாத தலைவர்களைத் தெரிவுசெய்தல்.
- தேசிய நோக்கங்கள் மற்றும் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைவர்களைத் தெரிவு செய்தல்.

**வாக்குரிமையின் முக்கியத்துவம்**

- எவ்வித வேறுபாடுமின்றி உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள எல்லாப் பிரசைகளுக்கும் தமது அரசியல் கருத்தை வெளியிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- பொருத்தமான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- பிரசைகளுக்கு நடைமுறை அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்தல்.
- மக்களின் அரசியல் அறிவை விரிவுபடுத்திக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- தாமும் ஆட்சியின் பங்குதாரர்கள் எனும் உணர்வு மக்களிடையே மேம்படுதல்.
- விரும்பிய ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யவும் விருப்பமற்ற ஆட்சியாளர்களை விலக்குவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தல்.

### 3.4.4 தேர்தல்கள் தொடர்பான மக்களின் உரிமைகளும் கடமைகளும்

மக்கள், ஆட்சியில் பங்கேற்கும் சந்தர்ப்பமாக அமைவது தேர்தலாகும். தேர்தல்களின்போது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குள்ள பிரதான இரு முறைகள் பற்றி மட்டும் இங்கு எளிமையாகக் கலந்துரையாடுவோம்.

- எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறை
- விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை

வகுப்பு மாணவர்களிடையே பிரதிநிதித்துவ முறை பற்றிய கருத்துப் பரிமாற்றம் ஒன்று நிகழ்ந்தது. அதன் பின்னர் அவர்களால் இரண்டு வரைவிலக்கணங்கள் எழுதப்பட்டு வகுப்பறையில் இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டது.







எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் நாடுகளுக்கு உதாரணமாக ஐக்கிய இராச்சியத்தைக் குறிப்பிடலாம். அது தவிர 1931 முதல் 1977 வரை எமது நாட்டிலும் எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறையே செயற்பட்டது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அடிப்படையாகக் கொண்டு இன்று எமது நாட்டில் பாராளுமன்றம், மாகாண சபைகள் ஆகிய நிறுவனங்களுக்கு மக்கள் பிரதி நிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தேர்தல் தொடர்பான பிரசைகளின் உரிமைகளும் கடமைகளும் யாவை என்று குடியுரிமைக் கல்விப் பாட ஆசிரியை மாணவர்களிடம் வினவினார். குழுநிலையில் கலந்துரையாடி மாணவர்களால் திரட்டப்பட்ட தகவல்களை முன்வைப்பதற்கு ஒரு குழு முன்வந்தது.

| தேர்தல்கள் தொடர்பான பிரசைகளின் உரிமைகள் | தேர்தல்கள் தொடர்பான பிரசைகளின் கடமைகள் |
|---|---|
| ◆ தேர்தல்கள் இடாப்பில் பெயரைப் பதிவுசெய்து கொள்ளல்.<br>◆ வாக்களித்தல்.<br>◆ தான் விரும்பும் அரசியல் கட்சியில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளல்.<br>◆ அரசியல் கட்சிகளை அமைத்தல்.<br>◆ அரசியல் கூட்டங்களை நடாத்துதல், அவற்றில் கலந்து கொள்ளல், தனது கருத்துக்களை வெளியிடுதல்.<br>◆ வேட்பாளர் ஒருவராகக் தேர்தலில் போட்டியிடுதல்.<br>◆ தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.<br>◆ நியாயமான காரணங்களின் அடிப்படையில் அரசாங்கத்தை விமர்சித்தல். | ◆ வாக்களித்தல்.<br>◆ தேர்தல் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதல்.<br>◆ வன்முறைகளைத் தவிர்த்தல்.<br>◆ வெற்றி, தோல்வி இரண்டையும் சமமாக மதித்தல்.<br>◆ தேர்தல் சட்டங்களை செயற்படுத்துவதற்கு உதவுதல்.<br>◆ ஏனையவர்களின் உரிமைகளை மீறாத வகையில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.<br>◆ அடுத்தவரைப் பாதிக்காத வகையில் கருத்து வெளியிடுதலும், அடுத்தவரை அவமானப்படுத்தாதிருத்தலும்.<br>◆ வெற்றி தோல்வியை சமமாக மதித்து அடுத்தவரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.<br>◆ நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதிக்காத வகையில் செயற்படலும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தலும் |

## 3.5 நிலையுறுதியான தன்மை (உறுதிப்பாடான தன்மை)

### 3.5.1 நிலையுறுதியான தன்மை ஓர் அறிமுகம்

தனது மனச்சாட்சிக்கு ஏற்ப நேர்மையுடனும் நீதியுடனும் நிலையான கொள்கையுடனும் நடந்து கொள்வதை நிலையுறுதியான தன்மை என அறிமுகப்படுத்தலாம். உறுதிப்பாடான தன்மையுடன் செயற்படுவது பாடசாலை மாணவர் என்ற வகையில் சிறுவயது முதல் உங்களால் வளர்த்துக்கொள்ளப்பட வேண்டிய பண்பாகும். தனது எதிர்காலத்தை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்கு உறுதிப்பாடான தன்மையுடன் செயற்படுவது மிக முக்கியமானதாகும்.

### 3.5.2 நிலையுறுதியான தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு தனிநபர் தன்னுள் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள்





**தனிநபர் (சுய) நிலையுறுதியான தன்மை**

- எவ்விதமான சவால்களுக்கும் அஞ்சாமல் தன்னால் மேற்கொள்ளப்படும் சரியான, சிறந்த செயற்பாடுகளை கைவிடாதிருத்ததல்.
- தனது மனச்சாட்சிக்கேற்ப தான் சொல்பவை, செய்பவைகளை உறுதிப்பாட்டுடன் செயற்படுத்தல்.
- எவ்விதமான பலவந்தத்துக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் முறையற்ற வேலைகளையும் ஒழுக்கமற்ற செயல்களையும் தவிர்த்தல்.
- நல்ல மனப்பாங்குடன் விமர்சனரீதியில் நேரான கொள்கையுடன் செயற்படுதல்.

**பிறருடனான நிலையுறுதியான தன்மை**

- பிறருடன் செயற்படும் போது தனது மனச்சாட்சியைப் போன்றே கொள்கை களுக்கும் ஏற்ப சட்ட திட்டங்களுக்கும் சமூக ஏற்புகளுக்கும் இசைவாகச் செயற்படல்.
- தனது உணர்வுகளைத் தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான அளவு வெளிப்படுத்தல்.
- சிறந்த மனப்பாங்கைக் கொண்டிருத்தலும் விமர்சனத் தன்மையுடனும் சீரான கொள்கை யுடனும் செயற்படலும்.
- தனது தனிப்பட்ட இலாபத்தை மாத்திரம் எதிர்பாராது சரியானவை தொடர்பில் நேரடியாகக் கருத்து வெளியிடல்.
- பிறருடன் உறுதிப்பாடான தன்மையை ஏற்படுத்திக் கொள்ளும் போது நேர் மனப்பாங்குடன் விமர்சன ரீதியான சிந்தனையுடன் செயற்படல்.

## செயற்பாடு 3.4



பின்வரும் அட்டவணையில் நிரல் I இல் தனிநபர் நிலையுறுதியான தன்மையை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பண்புகள் தரப்பட்டுள்ளன. அப்பண்புகள் தனிநபர் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை நிரல் II இல் குறிப்பிட்ட பண்புகளுக்கு எதிரே எழுதுக.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| நிலையுறுதியான தன்மையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய பண்புகள் | தனிநபர் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதம் |
| ◆ நேர்மையான தன்மை | |
| ◆ நியாயத்தை மதித்தல் | |
| ◆ முன்மாதிரியான தன்மைகளைக் கொண்டிருத்தல் | |
| ◆ பொதுநல விருப்புடன் திகழ்தல் | |

## 3.6 தேசத்தைக் கட்டியெழுப்புதல்

### 3.6.1 தேசத்தைக் கட்டியெழுப்புதல் எண்ணக்கரு ஓர் அறிமுகம்

தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்பதற்கான ஆங்கிலப் பதம் 'Nation Building' என்பதாகும். இதன் பொருள் பல்வேறு இனங்கள், சமய குழுக்கள், சமூகக் குழுக்கள் என்பவை ஓரினமாக ஒன்றிணைந்து எதிர்காலச் சவால்களை வென்று அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக ஒற்றுமையுடன் செயற்படுவதாகும். இன, மத, கட்சி, குல, வகுப்பு வேறுபாடுகளின்றி அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுவது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாதது.

உதாரணமாக எமது நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் வேறு இனத்தவரும் வாழ்கின்றனர். இவர்களைத் தவிர பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம் முதலிய சமயக் குழுவினரும் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் இலங்கையர் எனும் தேசிய உணர்வுடன் தேசத்தைக் கட்டி யெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

### 3.6.2 தேசியக் கொள்கை பற்றிய அறிமுகம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கான தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட நீண்டகால வேலைத் திட்டம் தேசியக் கொள்கை எனப்படும். அது அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும். நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். தேசியக் கொள்கை என்பது ஆட்சியாளர்களின் தனிப்பட்ட தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காகவன்றி தேசிய மேம்பாட்டுக்கானதாக இருத்தல் வேண்டும். எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதிலும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும்.

கல்வி தொடர்பான தேசியக் கொள்கை, பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தேசியக் கொள்கை, கழிவுகளை முறையாக அகற்றுவது தொடர்பான தேசியக் கொள்கை என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

### 3.6.3 தேசியக் கொள்கையொன்றின் தேவை

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கான தேவைகளை அடைந்து கொள்வதற்காக தேசியக் கொள்கை ஒன்று செயற்படுவது அவசியமானதாகும். அது மக்களின் தேவைகளை நிறைவு செய்வது போலவே உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். தேசியக் கொள்கை மூலம் கிடைக்கும் பயன்கள் சில பின்வருமாறு

- நாட்டில் பொருளாதார அபிவிருத்தியும் சமூக அபிவிருத்தியும் ஏற்படும்.
- உரிய நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்ள உதவும்.
- மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.
- எதிர்கால சவால்களை முறியடிப்பதற்கு உதவும்.
- தேசிய ஒற்றுமை ஏற்படும்.
- நிலையான சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள உதவும்.
- நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த உதவும்.

### 3.6.4 தேசியக் கொள்கை உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்தல்

தேசியக் கொள்கை உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்வது நம்மனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும். அது தொடர்பில் செயற்பாட்டுரீதியில் பங்களிப்புச் செய்வதைப் போன்றே சொந்த இலாப நோக்கமின்றி செயற்படுவதும் முக்கியமானதாகும். தேசியக் கொள்கை உருவாக்கத்திற்கு பிரஜையொருவர் பங்களிப்புச் செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் தரம் 9 வகுப்பு மாணவர்கள் முன்வைத்த கருத்துக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய தேவைகளை இனங்காண உதவுதல்.
- பிரதேசத்தின் தேவைகளை இனங்கண்டு அது தொடர்பில் உரிய துறையினருக்கு அறிவித்தல்.
- தேசிய கொள்கைக்கு உரிய ஆலோசனைகள், வேலைத் திட்டங்களை முன்வைத்தல்.
- தேசியக் கொள்கை தொடர்பில் செயற்பாட்டு ரீதியில் பங்களிப்புச் செய்தல்.
- சொந்த இலாப நோக்கமின்றி தேசியக் கொள்கை உருவாக்கத்தில் பங்கேற்றல்
- தேசியக் கொள்கைகளுக்கேற்ப செயற்படல்

### 3.6.5 தேசியக் கொள்கைகளுடன் இணைந்து செயற்படுதல்

தேசியக் கொள்கை உருவாக்கத்திற்கு செயற்பாட்டுரீதியில் பங்களிப்புச் செய்வதுடன் அதனுடன் இணைந்து செயற்படுவதும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதற்கான உதாரணங்கள் சில பின்வருமாறு

- பொதுநல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தேசியக் கொள்கைகளை மதித்தல்.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசியக் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு செயல் ரீதியான பங்களிப்பை நல்குதல்.
- தேசியக் கொள்கைகளுடன் இணைந்து செயற்படுவதுடன் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

### 3.6.6 தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக எமது பங்களிப்பை அர்ப்பணிப்புடன் வழங்குவதன் முக்கியத்துவம்

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக எமது பங்களிப்பை அர்ப்பணிப்புடன் வழங்குவது மிக முக்கியமானதாகும். அதற்கான காரணங்கள் சில பின்வருமாறு.

- ஒவ்வொரு பிரசையும் தேசிய உணர்வுடன் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்தல்.
- நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொரு பிரசையும் தான் ஈடுபட்டுள்ள தொழிலின் அடிப்படையில் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் தன் சிரமத்தை அர்ப்பணித்தல்.
- ஒவ்வொரு பிரசையும் எந்த வேலையைச் செய்தாலும் அதனை தேசிய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செய்தல்.

அன்பார்ந்த மாணவர்களே, நீங்கள் பாடசாலையில் வகுப்பறையைச் சுத்தஞ் செய்தல், பாடசாலைத் தோட்டத்தைச் சுத்தஞ் செய்தல், அலங்காரத்திற்காகப் பூந்தோட்டமிடல், மரக்கன்றுகள் நடுதல், முறையாகக் கழிவுப் பொருள்களை அகற்றுதல் முதலிய பல்வேறு பணிகளில் ஈடுபடலாம். அவை சிறிய வேலையாகத் தெரிந்தாலும் அவையனைத்தும் தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கான பாரிய பங்களிப்பாகும். சிறுசிறு நீர்த்துளிகள் ஒன்றாகி பாரிய நதியொன்று உருவாவதைப்போல சிறுவர்களான நாம் ஒன்றிணைவதன் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பாரியளவில் பணியாற்ற முடியும்.

### 3.6.7 பிரசை என்ற வகையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பின்பற்றக் கூடிய வழிமுறைகள்

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பின்பற்றக்கூடிய வழிமுறைகள் யாவை என்று சிந்திக்கவும். ஒரே தேசமாக எழுச்சியடைவதற்குப் பிரசைகள் என்ற வகையில் நாம் நாட்டுக்காகச் செய்யவேண்டிய பணிகள் பலவுள்ளன. அதற்காக நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் சில பின்வருமாறு,

- தம்மால் ஆற்றப்படும் கடமையை முழுமையாகச் செய்து முடித்தல்.
- சமூகத்தால் தனக்குக் கிடைப்பதை விட தன்னால் சமூகத்துக்கு வழங்க வேண்டிய பங்களிப்பு பற்றிக் கவனத்துடன் செயற்படுதல்.
- இலங்கையர் என்ற வகையில் தேசிய ஒற்றுமை, சமாதானம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றல்.
- தன்னால் தாங்கக்கூடியளவில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தல்.
- தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம் தனது தனிப்பட்ட அபிவிருத்தியை மேம்படுத்திக் கொள்ளல்.
- நாட்டின் அபிவிருத்திக்காக உச்சளவில் பங்களிப்புச் செய்தல்.
- குறுகிய இலாப நோக்கமின்றி செயற்படுதல்.
- நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் தனது பணிகளைச் சிறப்புற நிறைவேற்றல்.
- தேசிய பாதுகாப்பிற்கு எதிரான, அச்சுறுத்தலான வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல்.
- சிறப்பாக கல்வி கற்று தனது அறிவையும் உழைப்பையும் நாட்டின் அபிவிருத்திக்கு வழங்குதல்.
- திருடுதல், வஞ்சனை செய்தல், இலஞ்சம், ஊழல் முதலிய முறையற்ற செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளல்.

## செயற்பாடு 3.5

பாடசாலை மாணவர் என்ற வகையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு உங்களால் பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தை அட்டவணைப்படுத்துக.

### சாராம்சம்

- சநாயகம் என்பது ஓர் ஆட்சி முறை என்பது போலவே ஒரு வாழ்க்கை முறையுமாகும்.
- சனநாயக சமூகத்தில் பிரஜைக்குரிய உரிமைகளை சட்டத்திற்குட்பட்ட வகையில் அனுபவித்தல் வேண்டும்.
- வாக்குரிமையும் தேர்தலும் சனநாயக சமூகத்தில் பிரசைகளின் பிரதான உரிமைகளாகும்.
- பொது மக்கள் ஆட்சியில் பங்குபற்றும் சந்தர்ப்பம் தேர்தலாகும்.
- எவ்வித வேறுபாடுமின்றி உரிய தகைமைகளைக் கொண்ட எல்லாப் பிரசைகளுக்கும் தேர்தலின்போது வாக்களிப்பதற்குள்ள உரிமை சர்வசன வாக்குரிமையாகும்.
- தனது மனச்சாட்சிக்கு ஏற்ப நேர்மையாகவும் நீதியாகவும் நிலையான கொள்கையுடன் செயற்படுவது உறுதிப்பாடான தன்மையாகும்.
- நிலையுறுதிப்பாடான தன்மையை ஏற்படுத்திக் கொள்வதும் அடுத்தவருடன் உறுதிப்பாடான தன்மையுடன் செயற்படுதலும் சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும்.
- தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக எல்லாப் பிரசைகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.
- தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக பயனுள்ள தேசியக் கொள்கையை வகுத்து செயற்படுவது மிக முக்கியமானதாகும்.
- பிரசை என்ற வகையில் தேசத்தை கட்டியெழுப்புவதற்காக தமது கடமைகளை முழுமையாக ஆற்ற வேண்டும்.
- இலங்கையர் என்ற வகையில் தேசிய நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

# 4

# உள்ளூராட்சி மன்றங்கள்

## அறிமுகம்

நாம் எமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பல்வேறு சேவைகளைப் பயன்படுத்துகின்றோம். அத்தகைய சேவைகளுள் பெரும்பாலானவை எமது வாழ்க்கையுடன் மிகவும் நெருக்கமான வகையில் பிணைக்கப்பட்டனவாக விளங்குகின்றன. அதேவேளை அவை அத்தியவசியமானவையாகவும் காணப்படுகின்றன. சுகாதார சுத்திகரிப்புச் சேவை, கழிவுகளை அகற்றுதல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்காகப் பாதுகாப்பான இடங்களை நிறுவுதல், சுத்தமானதும் பாதுகாப்பானதுமான வீதிகளை அமைத்துக் கொடுத்தல் என்பன அவற்றுள் பிரதானமானவையாகும். எமது நாட்டைப் பொறுத்த வரையில் இதுபோன்ற அத்தியவசிய சேவைகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அரச நிறுவனங்களின் பங்களிப்பு பிரதானமானதாக விளங்குகின்றது.

மக்களுக்கான இதுபோன்ற சேவைகளைப் பிரதேசரீதியாக மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன்மிக்கதாகவும் மேற்கொள்வது தொடர்பில் இலங்கையில் விசேடமாகக் காணப்படக்கூடிய நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் என அழைக்கப்படுகின்றன. அவை மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என மூன்று வகைகளாகத் தற்போது செயற்பட்டு வருகின்றன.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,**

- உள்ளூராட்சி மன்றங்களும் அவற்றின் கட்டமைப்புகளும்
- உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவம் மற்றும் அவை தத்தமது பிரதேசங்களில் மேற்கொள்ளக்கூடிய சேவைகளும்
- அத்தகைய சேவைகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்காகப் பொது மக்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைப் பொறுப்புக்கள் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் அத்தகைய சேவைகளை வழங்குவது தொடர்பில் புரிய வேண்டிய கடமைகளும்
- பிரதேச அபிவிருத்தியின் மூலம் தேசிய அபிவிருத்தியை அடைவது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குகின்ற பங்களிப்புக்கள் போன்றவற்றை விளங்கிக் கொள்ளவும்

**இயலுமாகும்.**

## 4.1 உள்ளூராட்சி மன்றங்களை அறிந்து கொள்வோம்

### 4.1.1 உள்ளூராட்சி மன்றங்கள்

அன்று விடுமுறை தினமாகும். மதியின் தந்தை காலைப் பத்திரிகைகளை வாசிப்பதில் ஈடுபட்டிருந்தார். மதி தேநீர் கோப்பையுடன் தந்தையை நோக்கி வருகின்றாள். தந்தை வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகைகள் மீது கவனம் செலுத்திய மதி தந்தையுடன் உரையாடினார். அவ்வுரையாடல் கீழே தரப்படுகின்றது.

மதி : அப்பா! இன்றைய பத்திரிகைளில் உள்ளூராட்சி மன்றங்கள் பற்றி நிறையச் செய்திகள் வந்திருக்கின்றதே ...?

தந்தை : ஆம் மகளே! உள்ளூராட்சி மன்றங்களைப் பற்றித்தான் இந்த இரண்டு பக்கங்களும் விபரிக்கின்றன.

மதி : உள்ளூராட்சி மன்றங்கள் என்று சொல்வது என்ன அப்பா ...?

தந்தை : பிரதேசங்களின் நிருவாகத்தை இலகுவாக்குவதற்கும் பிரதேசங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் விசேடமாக உருவாக்கப்பட்டிருப் பவைதான் உள்ளூராட்சி மன்றங்கள் என்று சொல்லப்படுகின்றன.

மதி : அப்படியானால் இந்த நிறுவனங்கள் உருவாக்கப்பட்டிருப்பது எமது நலனுக்காக அல்லவா அப்பா?

தந்தை : ஆம் மகளே! இந்த கட்டுரையை ஓய்வு நேரத்தில் வாசித்துப் பாருங்கள். உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய அதிகமான தகவல்களை உங்களுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.


பத்திரிகையில் காணப்பட்ட கட்டுரையை நன்கு வாசித்து மதி உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய முக்கிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டாள். அவை பின்வருமாறு,

- உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசின் வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றன.
- இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களாக மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்பன செயற்படுகின்றன.
- மத்திய அரசாங்கத்தின்மூலம் ஆக்கப்பட்ட பல சட்டங்களினால் பிரதேச நிருவாக அதிகாரங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 1987 ஆம் ஆண்டு 13 ஆவது சீர்திருத்தத்திற்கு அமைவாக உள்ளூராட்சி மன்றங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- உள்ளூராட்சி மன்றங்களின் நிறுவனக் கட்டமைப்பானது தேர்தலின்மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

- உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசாங்கம் விதிக்கின்ற கட்டளைகளின் படியும் செயற்படுவதற்குக் கடமைப்பட்டுள்ளன.
- சனநாயக ஆட்சிமுறையினுள் மத்திய அரசாங்கத்தின் நிருவாகச் செயற்பாடுகள் மிகவும் இலகுவாக மேற்கொள்ளப்படுவதற்கும் சமூக நலன்புரிச் சேவைகள் மக்களுக்கு மிக அண்மித்த வகையில் செயற்படுத்தப்படுவதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் பங்களிப்புச் செய்கின்றன.
- பிரதேச அபிவிருத்திக்காக உள்ளூராட்சி மன்றங்கள் அதிகளவு சேவைகளை மேற்கொள்கின்றன.

**மக்கள் சேவைகளை நகர்ப்புற, நகரை அண்டிய மற்றும் கிராமங்களில் இலகுவாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுத்துவதற்காகவுள்ள நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் என அழைக்கப்படுகின்றன.**

## செயற்பாடு 4.1



- உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக இலகுவான வரைவிலக்கணம் ஒன்றை உருவாக்குக.
- நீங்கள் வசிக்கின்ற அல்லது உங்களது பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய உள்ளூராட்சி மன்றத்தைப் பெயரிடுக.

### 4.1.2 உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவம்

பொதுமக்களுக்கு அவசியமான சேவைகளை வினைத்திறன்மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் மேற்கொள்வதே உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் நிறைவேற்றப்படும் அடிப்படைக் கருமமாகும். தரப்பட்டுள்ள உருவிலுள்ளவற்றை வாசித்து உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவம் தொடர்பாக அறிந்துகொள்ள முடியும்.

**உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவம்**

- சனநாயக ஆட்சிமுறை பிரதேச மட்டத்திற்குப் பரவுதல்
- பிரதேசத் தேவைகளுக்கு ஏற்றாற்போல செயற்படல்
- மக்கள் சேவைகளை முறைப்படி மேற்கொள் வது இலகுவாக அமைதல்
- பிரதேச அபிவிருத்தி மூலம் தேசிய அபிவிருத்தி விரைவுபடுத்தப்படல்
- பிரதேச கொள்கைகளை அடிப்படையாக கொண்டு தேசிய கொள்கைளைத் தயாரித்தல் இலகுவாகுதல்
- மத்திய அரசின் அதிகாரப் பரவலாக்கல் மூலம் பிரதேச நிருவாகச் செயற் பாடுகள் இலகுவாகுதல்
- அரசியல் தலைமைத்துவத் திற்கான இளைஞர்களின் பங்கேற்பு விரிவடைதல்
- பிரதேச அடிப்படையில் எதிர்கால அரசியல் தலைவர்களை உருவாக்க முடிதல்
- அவசரகால சந்தர்ப் பங்களின்போது செயற்ப டுவதற்கு இலகுவாகுதல்

### 4.1.3 வரலாற்றடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களின் வளர்ச்சி

இலங்கையின் நவீன உள்ளூராட்சி மன்றங்கள் பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலேயே ஆரம்பமாகியது. எனினும் புராதன காலம் முதலே இலங்கையின் ஆட்சிமுறையினுள் பிரதேச நிருவாகம் தொடர்பான விடயம் காணப் பட்டுள்ளதனை வரலாறு நிரூபிக்கின்றது. அநுராதபுரத்தை ஆட்சிசெய்த பண்டுகாபய மன்னன் 'கம்சபா' என்ற பிரதேச நிருவாக முறையை ஏற்படுத்தியிருந்தமை பற்றி உங்களுக்கு நினைவு வருகின்றதா... ?

பிரித்தானிய ஆட்சியில் அறிமுகம்செய்யப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை திறந்த பொருளாதார முறையுடன் இணைந்து அவற்றை முன்னேற்றுவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்ய வேண்டிய தேவையும் ஏற்பட்டது. வீதிகள், செய்திப் பரிமாற்றச் சேவை போன்றன இதற்கான சில உதாரணங்களாகும்.

சனத்தொகை வளர்ச்சி, நகரமயமாக்கம், மக்களுக்கு அவசியமான நலன்புரிச் சேவைகளை வழங்குதலின் தேவை அதிகரித்தமை போன்ற காரணிகள் பிரித்தானியரது ஆட்சியின்போது முறையான உள்ளூராட்சி மன்றங்களின் தோற்றத்திற்கு வித்திட்டன.

அதற்கமைவாகப் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தோற்றத்திற்கும் அவை சீராக வளர்ச்சியடைவதற்கும் வழிவகுத்தன. பிரித்தானியராட்சியின்போது ஏற்படுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- கி.பி 1865 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் கொழும்பு, கண்டி, காலி மாநகர சபைகள் தாபிக்கப்பட்டமை.
- கி.பி 1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராமச் செயற்பாட்டு சபைகள் சட்டத்தின் மூலம் கிராம செயற்பாட்டுச் சபைகள் தாபிக்கப்பட்டமை.
- கி.பி 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைகள் சட்டத்தின் மூலம் 1940 ஆம் ஆண்டில் நகர சபைகள் தாபிக்கப்பட்டமை.
- கி.பி 1946 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சிறிய நகரசபைகள் சட்டத்தின்மூலம் அவ்வாண்டு சிறு நகரசபைகள் தாபிக்கப்பட்டமை.

**இலங்கையில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட மாநகர சபைகள்**



கொழும்பு மாநகர சபை



காலி மாநகர சபை




கண்டி மாநகர சபை

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் பின்வரும் உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் செயற்பட்டன.

1. கிராம சபைகள்
2. சிறு நகரசபைகள்
3. நகர சபைகள்
4. மாநகர சபைகள்

1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டத்தின் மூலம்,

- கிராம சபைகள் மற்றும் சிறுநகரசபைகள் முறை ஒழிக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தாபிக்கப்பட்டன.
- மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் பங்குபற்றலை அதிகரிப்பதற்காக கிராமோதய மன்றங்கள் மற்றும் பிரதேச மன்றங்கள் தாபிக்கப்பட்டன.


1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்மூலம் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஒழிக்கப்பட்டு பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டன.

இவற்றுக்கு அமைய 1987 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில்

★ பிரதேச சபைகள்
★ நகர சபைகள்
★ மாநகர சபைகள்

ஆகிய உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.

## செயற்பாடு 4.2



**"சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் உள்ளூராட்சி நிருவாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்" எனும் தலைப்பில் சுவர்ப் பத்திரிகைக்கான ஆக்கம் ஒன்றை எழுதுக.**

**உள்ளூராட்சி அமைச்சின் தரவுகளுக்கமைய 2017.05.01 ஆந் திகதியில் இலங்கையில் செயற்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்கள்**

| மாகாணம் | மாவட்டம் | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மேற்கு | கொழும்பு<br>கம்பஹா<br>களுத்துறை | 05<br>02<br>- | 05<br>05<br>04 | 03<br>12<br>12 | 13<br>19<br>16 |
| மத்திய | கண்டி<br>மாத்தளை<br>நுவரெலியா | 01<br>02<br>01 | 04<br>-<br>02 | 17<br>11<br>05 | 22<br>13<br>08 |
| தெற்கு | காலி<br>மாத்தறை<br>அம்பாந்தோட்டை | 01<br>01<br>01 | 02<br>01<br>01 | 17<br>15<br>10 | 20<br>17<br>12 |
| வடக்கு | யாழ்ப்பாணம்<br>மன்னார்<br>வவுனியா<br>முல்லைத்தீவு<br>கிளிநொச்சி | 01<br>-<br>-<br>-<br>- | 03<br>01<br>01<br>-<br>- | 13<br>04<br>04<br>04<br>03 | 17<br>05<br>05<br>04<br>03 |
| கிழக்கு | மட்டக்களப்பு<br>அம்பாறை<br>திருகோணமலை | 01<br>02<br>- | 02<br>01<br>02 | 09<br>17<br>11 | 12<br>20<br>13 |
| வடமேல் | குருணாகல்<br>புத்தளம் | 01<br>- | 01<br>02 | 19<br>10 | 21<br>12 |
| வடமத்திய | அனுராதபுரம்<br>பொலன்னறுவை | 01<br>- | -<br>- | 18<br>07 | 19<br>07 |
| ஊவா | பதுளை<br>மொனராகலை | 02<br>- | 01<br>- | 15<br>10 | 18<br>10 |
| சப்ரகமுவ | இரத்தினபுரி<br>கேகாலை | 01<br>- | 02<br>01 | 14<br>11 | 17<br>12 |
| மொத்தம் | | 23 | 41 | 271 | 335 |

### 4.1.4 உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பு

உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளை உள்ளடக்கியதாக விளங்குகின்றன. அத்தகைய நிறுவனங்கள் வெற்றிகரமாகவும் சிறப்பான வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரச அதிகாரிகளை உள்ளடக்கிய பணிக்குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒழுங்குக் கட்டமைப்புக்கு உரித்தான சில அடிப்படைப் பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.


- உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானி ஒரு மக்கள் பிரதிநிதியாவார்.
- அரச உத்தியோகத்தர்கள் மூலம் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பான தீர்மானங்கள், முடிவுகள் மக்கள் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

**உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானிகள்**

| நிறுவனம் → / பதவி ↓ | மாநகர சபைகள் | நகரசபைகள் / பிரதேச சபைகள் |
|---|---|---|
| பிரதானி | நகரபிதா / நகர மேயர் | தலைவர் |
| உப பிரதானி | துணை நகர பிதா | உபதலைவர் |
| நிருவாக அதிகாரி | நகர ஆணையாளர் | செயலாளர் |

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் நிலைத்தொடர்புகள் பின்வருமாறு,

பிரதேச சபையொன்றின் கட்டமைப்பு




உ+ம் :- தொழினுட்ப உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், சாரதிகள், சிற்றூழியர்கள்.

### நகர சபையொன்றின் கட்டமைப்பு

- தலைவர் (மக்கள் பிரதிநிதி)
  - உப தலைவர் (மக்கள் பிரதிநிதி)
    - மக்கள் பிரதிநிதிகள் (பிரதேச சபை உறுப்பினர்கள்)
    - அரச உத்தியோகத்தர்கள்
      - செயலாளர்
        - ஏனைய அரச உத்தியோகத்தர்கள்

உ+ம் :- தொழினுட்ப உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்
சாரதிகள், சிற்றூழியர்கள்.

இந்த அடிப்படைத் திட்டம் அந்தந்த நகரசபைக்கு உரிய வகையில் மாறுபடலாம். இதனைக் கற்பதன் மூலம் அடிப்படை மாதிரிக்கு அமைய அந்தந்தப் பிரதேசங்களது உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படும் விதம் தொடர்பாக அறிந்து கொள்ளலாம்.

### மாநகர சபையொன்றின் கட்டமைப்பு

- நகரபிதா / மேயர் (மக்கள் பிரதிநிதி)
  - துணை நகரபிதா (மக்கள் பிரதிநிதி)
    - மக்கள் பிரதிநிதிகள் (பிரதேச சபை உறுப்பினர்கள்)
    - அரச உத்தியோகத்தர்கள்
      - மாநகர ஆணையாளர்
        - ஏனைய அரச உத்தியோகத்தர்கள்

உ+ம் :- தொழினுட்ப உத்தியோகத்தர்,
முகாமைத்துவ உதவியாளர்,
சாரதிகள், சிற்றூழியர்கள்

## செயற்பாடு 4.3



- *உமது பாடசாலை அல்லது உமது வசிப்பிடம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு உட்பட உள்ளூராட்சி நிறுவனத்தின் நிருவாக ஒழுங்குக் கட்டமைப்பை ஆசிரியரது உதவியுடன் குழுவாகச் செயற்பட்டு வரைந்து காட்டுக.*
- *உமது பிரதேசத்தின் உள்ளூராட்சி நிறுவன ஒழுங்குக் கட்டமைப்பைப் பாடநூலில் தரப்பட்ட நிருவாக ஒழுங்கமைப்புடன் ஒப்பிடுக.*

***உள்ளூராட்சி மன்றமொன்றின் பிரதானியின் அதிகாரங்கள்***

- *சபையைக் கூட்டுதலும் ஒத்திவைத்தலும்*
- *சபை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்குதல்*
- *மக்கள் பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவது தொடர்பில் முன்னின்று செயற்படுதல்*
- *உள்ளூராட்சி மன்றத்துக்குரிய நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தலும் நடைமுறைப் படுத்தலும்*

- *மாநகர சபை ஆணையாளர் பதவிக்கு இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த அதிகாரியொருவர் குறித்த மாகாண சபையின் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.*
- *நகர சபை மற்றும் பிரதேச சபையொன்றினது செயலாளர் பதவிக்கு அரச முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த உயர்தர அதிகாரியொருவர், மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுகிறார்.*

*உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்து தேர்தல் நடைபெறும் வரை உள்ளூராட்சி நிறுவனத்தின் செயற்பாடுகள் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் ஆணையாளர் அல்லது செயலாளரின் பொறுப்பிலேயே இடம்பெறும். இல்லாவிட்டால் விசேட அதிகாரி ஒருவருக்கு நிருவாக அதிகாரம் ஒப்படைக்கப்படும்.*

*உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் உரிய சேவைகள் மேற்கொள்ளப்படும்போது அவற்றுக்குப் பல அதிகாரங்கள் உரித்தாகின்றன. அவ்வதிகாரங்களுக்கான சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

- வரிகள், தீர்வைகள் உட்பட ஏனைய வரிகளை விதித்தல்.
- வீதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- வீட்டு நிருமாண வரைவுகளுக்கு அனுமதி வழங்கல்.
- நிரந்தரக் கட்டடங்கள் மற்றும் வேறு நிருமாணங்களுக்கு அனுமதி வழங்குதல்.
- சட்டவிரோதக் கட்டடங்களை அகற்றுதல்.
- சுற்றாடற் பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்.
- பிரதானபாதைகள், வீதி, மதகுகள், பாலங்கள், பொதுச்சந்தைகள், மருந்தகங்கள், வாசிகசாலை, பூங்காக்கள் போன்றவற்றை நிறுவுதலும் வழிநடாத்துதலும்.
- தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சட்டரீதியற்ற சேரிகள், குடிசைகள் மற்றும் சுகாதாரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இடங்களை அகற்றுதல்.
- நீரூற்று மற்றும் நீர்த்தேக்கங்களின் உரிமைகளைப் பேணி வருதல்.

மேற்படி அதிகாரங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதானது மக்கள் நலன்புரிச் சேவைகள் மற்றும் பிரதேச அபிவிருத்திக்குப் பலமான வகையில் பயனளிக்கின்றது.

உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு சேவைகளை நடைமுறைப் படுத்துவதற்கான நிதியீட்டம் பல வழிகளில் இடம்பெறுகின்றது. அவற்றுக்குரிய உதாரணங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

**உள்ளூராட்சி மன்றங்கள் மூலதன வளத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகள் சில**

- வரிகள் மற்றும் குத்தகைகள் மூலம் பெறப்படும் நிதிகள்.
- உள்ளூராட்சி அமைச்சரின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப் படும் நிதி.
- உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை, உடைமைகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் நிதி.

  உ+ ம் :- நகரமண்டபம், கடைகள், சாலைகள் போன்றன
- பொதுச்சேவைகளை வழங்குவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம்.
- சட்டங்களை மீறுகின்றமை தொடர்பில் நீதவான் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் தண்டப்பணம் மூலம் கிடைக்கின்ற நிதி.
- இலங்கைப் பாராளுமன்றம் மற்றும் உரிய உள்ளூராட்சி மன்றம் என்பவற்றின் அனுமதியுடன் வெளிநாட்டு அரசுகளிடமிருந்து கிடைக்கப்பெறும் உதவிகள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புகள் மூலம் கிடைக்கின்ற நன்கொடைகள் மற்றும் உதவிகள்.

**உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல்**


- *உரிய உள்ளூராட்சி அதிகார பிரதேசத்தில் உள்ள வாக்காளரின் வாக்குகள் மூலம் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர். இதற்கு விகிதசாராப் பிரதிநிதித்துவ முறை பயன்படுத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பான திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கிணங்க நடைமுறையிலுள்ள தேர்தல் வாக்கெடுப்பு முறைமை மாற்றிய மைக்கப்பட்டுள்ளது.*
- *இதற்கமைய புதிய தேர்தல் வாக்கெடுப்பு முறை வட்டார முறைமை அல்லது தனியங்கத்துவமுறை மற்றும் விகிதசார முறை ஆகிய இரு முறைகளின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு எதிர்பார்க்கப் படுகிறது.*

**உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை நிருணயம் செய்தல்**

*உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை நிருணயம் செய்யும் பணி தேசிய எல்லை நிருணய ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கிணங்க உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிருணயத்தின்போது கவனத்திற் கொள்ளப்படுகின்ற காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.*

- *இனரீதியான சனத்தொகைப் பரம்பல்*
- *நிலப்பிரதேசமும் அவற்றின் பௌதிக இயல்பும்*
- *சனத்தொகையும் சனத்தொகை அடர்த்தியும்*
- *பொருளாதார வளர்ச்சி மட்டம்*

*உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப் பிரதேச எல்லை நிருணயத்திற்கு அமைய கொழும்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப் பிரதேசம் கீழே தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.*




1. கொழும்பு மாநகர சபை
2. கொலன்னாவை நகர சபை
3. கொட்டிகாவத்தை - முல்லேரியாப் பிரதேச சபை
4. ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை
5. தெஹிவல - கல்கிஸ்ஸ மாநகர சபை
6. மொரட்டுவ மாநகர சபை
7. பொரலஸ்கமுவ மாநகர சபை
8. மகரகம நகர சபை
9. கடுவல மாநகர சபை
10. கெஸ்பேவ நகர சபை
11. ஹோமாகம பிரதேச சபை
12. சீதாவக்கை பிரதேச சபை
13. சீதாவக்கபுர நகர சபை

## செயற்பாடு 4.4



- உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் முறை தொடர்பாக பாட ஆசிரியருடன் கலந்துரையாடி சிறு அறிக்கை ஒன்றைத் தயாரியுங்கள்.
- ''உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதுதற்கு மிகவும் சிறந்தது விகிதாசார முறையா? அல்லது வட்டார முறையா?'' என்ற தலைப்பின் கீழ் வகுப்பு ஆசிரியரின் வழிகாட்டலில் விவாதம் ஒன்றை மேற்கொள்க.

## 4.2 உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகள்

குடியியற் கல்வி தரம் 9 பாடத்தின் கீழ் அன்றைய தினம் ''உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகள்'' பற்றிக் கற்க வேண்டி இருந்தது. அது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக வகுப்பாசிரியரின் அழைப்பை ஏற்று பிரதேச சபை அதிகாரியான திரு. அருட்குமரன் அவர்கள் உரிய நேரத்திற்கு வகுப்புக்கு வருகை தந்திருந்தார்.

அருட்குமரன் அவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகள் தொடர்பாக வகுப்பிலுள்ள மாணவர்களுடன் மேற்கொண்ட உரையாடலின் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது.

அருட்குமரன் : பிரதேச மக்களுக்கும், விசேடமாக பாடசாலை மாணவர்களுக்கும் பயனுள்ள பல சேவைகள் உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. அவையாவன.

நூலகம், வாசிப்பறை, சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம், உடற் பயிற்சிக்கான நடைபாதை போன்றனவாகும்.

அதேபோன்று பொது முக்கியத்துவம் வாய்ந்த சமய, கலாசார வேலைத் திட்டங்களும் உள்ளூராட்சி மன்றங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், முன்பள்ளி விருத்தி நிலையங்கள் போன்றனவும் உள்ளூராட்சி மன்றங்களால் நடாத்தப்படுகின்றன.


நூலகசேவை


வாசிப்பறை



சிறுவர்பூங்கா



உடற்பயிற்சிக்கான நடைபாதை



சிறுவர் பாடசாலை

மாலினி : பாதைகளைப் புனர்நிருமாணிக்கின்ற சேவையும் உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படுகிறதா சேர்... ?

அருட்குமரன் : ஆம், மாணவர்களே! உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசத்திற்கு உட்பட்ட வீதிகளைப் புனரமைத்தல், பாலங்கள், மதகுகள் அமைத்தல், புதிய பாதைகளை நிறுவுதல் போன்ற வேலைகளும் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.



பிரதேச வீதியொன்றின் புனரமைப்பு

கௌதமி : உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் வேறு சேவைகளும் உள்ளனவா சேர்?

அருட்குமரன் : சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல் உள்ளூராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முக்கிய சேவையாகும். இதன்மூலம் மலசலகூடங்களை உரிய வகையில் நிறுவி நடாத்திச் செல்லுதல், வடி கால்கள் மற்றும் கால்வாய்களைப் பராமரித்தல், பொது மலசலகூடங்களை நடாத்திச் செல்லல் என்பன போன்ற பெறுமதியான சேவைகள் பல மேற்கொள்ளப்படுகின்றன.



மலக்கழிவகற்றல் சேவை

அமான் : கழிவு முகாமைத்துவமும் உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள் ளப்படும் ஒரு சேவை தானே சேர்?

அருட்குமரன் : ஆம், குப்பைக் கழிவுகளை உரியவாறு முகாமை செய்வது உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் மிக முக்கிய சேவைகளுள் ஒன்றாகும். கழிவுகள், குப்பைகளை முறையாக அகற்றுதல், கழிவுகளின் மீள்சுழற்சிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றன உள்ளூராட்சி மன்றங்கள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன.



மீள்சுழற்சிப் பாவனைக்காக குப்பைகளை சேகரித்தல்

ஹஸ்னா : சுகாதாரத்திற்கு தீங்குதரும் பொருள்களை விற்பனை செய்வதைத் தடைசெய்வதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்கின் றனவா?

அருட்குமரன் : ஆம், ஆம் அதுபற்றி நினைவூட்டியதற்கு மிக்க நன்றி. சுகாதாரத்திற்கு தீங்கு தரும் பொருட்களை விற்பதைத் தடுப்பது மட்டுமன்றி அவை தொடர்பாக பொது மக்களுக்கத் தெளிவுபடுத்துவதிலும் உள்ளூராட்சி மன்றங்கள் ஈடுபடுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ளும் மேலும் பல சேவைகளும் உள்ளன. பொதுமயானம், தகனசாலை என்பவற்றைப் பராமரித்தல், பொதுக் கிணறுகளை அமைத்துப் பராமரித்தல், பிரதேச தேவை யினைக் கருத்திற்கொண்டு நீர் வழங்கல் சேவையை முன்னெடுத்தல், தீயணைப்பு சேவையை செயற்படுத்துதல் போன்ற சேவைகளும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.



பொதுக் கிணறு



தீயணைக்கும் சேவை

நிசாந்தன் : எமது பிரதேச சபை மூலம் எமது கிராமத்தில் கிளினிக் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைத்து நடத்துகிறார்கள்...

அருட்குமரன் : ஆம்... ஆம்... குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம், தாய்மார் சிகிச்சை நிலையம், டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வேலைத்திட்டங்கள், வேறு தொற்றாத நோய்கள் தடுப்பு வேலைத் திட் டங்கள் போன்றனவும் உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.



டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

ஆயுள்வேத மருந்தகங்கள் மூலமும் வைத்திய சேவைகள் முன்னெடுக் கப்படுகின்றன. அதுமட்டுமன்றி முதியோர்களுக்காக சமூகப் பாதுகாப்புச் செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.



கர்ப்பிணித் தாய்மார் சிகிச்சை நிலையம்



கிராமிய வைத்திய நிலையம்

அர்ச்சனா : பிரதேசத்தின் அபிவிருத்திக்காக உள்ளூராட்சி மன்றங்களால் மேற் கொள்ளப்படும். வேறு வேலைத்திட்டங்கள் இருக்கின்றனவா சேர்?

அருட்குமரன் : கால்வாய்களைப் புனரமைத்தல், சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை அபிவிருத்தி செய்தல் போன்றனவற்றின் மூலம் பொருளாதார அபிவி ருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றன. அதுமட்டுமன்றி சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தலும் உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளைத் தெளிவுபடுத்திய அதிகாரி அருட்குமரன் அவர்களுக்கு மாணவர்கள் ஆசிரியர்கள் சார்பில் வகுப்புத்தலைவர் லக்சான் நன்றியுரை நிகழ்த்தினார். அது வருமாறு,

இந்தளவு பரந்த சேவைகளை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்கின்றன என்பதை நாம் இதுவரை தெரிந்திருக்கவில்லை. மிகவும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் தாங்கள் எமக்கு அவைகள் பற்றித் தெளிவுபடுத்தினீர்கள். சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதற்கும், நாளாந்த நடவடிக்கைகளை இலகுவாக்கிக் கொள்வதற்கும் எமக்கு பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி மன்றங்களினால் பரந்தளவான சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களில் சேவையாற்றும் அனைவரும் எமக்காகவும், எமது நாட்டிற்காகவும் அரிய சேவைகளை மேற்கொள்கின்றனர் என்பது தற்போது எமக்குத் தெளிவா கின்றது. அவை தொடர்பாக நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். எம்மைத் தெளிவுபடுத்துவதற்காக வருகை தந்தமைக்காகவும் எம்முடன் நல்ல முறையில் உரையாடலை மேற்கொண்டமைக்காகவும் எமது அன்பும் கௌரவமும் நிறைந்த நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## செயற்பாடு 4.5



- உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் பின்வரும் சேவைகள் பிரதேச மனித வள அபிவிருத்திக்காகப் பங்களிப்புச் செய்யும் விதம் தொடர்பாகப் பாடப் பொறுப்பாசிரியருடன் கலந்து ரையாடுக.
    - i. நூலகம் மற்றும் வாசிப்பறை என்பவற்றை செயற்படுத்துதல்
    - ii. விளையாட்டு மைதானத்தைச் செயற்படுத்துதல்
    - iii. வைத்திய சிகிச்சை நிலையத்தைச் செயற்படுத்துதல்
- டெங்கு நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்காக உமது பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத்தினால் செயற்படுத்தப்படும் சில வேலைத் திட்டங்களைப் பரிந்துரை செய்க.

## 4.3 உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பில் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள்

உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்படும் சேவைகளை உச்ச அளவில் பயன் படுத்துவதன் மூலம் தமது வாழ்க்கை நிலையை முன்னேற்றிக் கொள்ளமுடியும். அதேபோன்று அத்தகைய சேவைகளைப் பெறுகின்ற அதேநேரம் அத்தகைய சேவைகள் தொடர்பில் தமது கடமைகளை குறைவின்றி மேற்கொள்வது பயனாளிகளான எமது கடமையாகும்.

பொதுமக்களால் (பயனாளிகள்) மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளுக்கான உதாரணங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

- உரிய நேரத்தில் வரி செலுத்துதல்.
- வழங்கப்படும் சேவைகளுக்கு உரியவாறு கட்டணம் வழங்குதல்.
- கழிவுகள் மற்றும் குப்பைகளை உரியவாறு அகற்றுவதற்கும் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்காகவும் உள்ளூராட்சி மன்றங்களின் அறிவுறுத்தல்களை ஏற்றுச் செயற்படல்.
- சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதற்காகவும் சுற்றாடலைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகவும் பங்களிப்புச் செய்தல்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தலும் முறையற்ற விதமாக அவை பயன்படுத் தப்படுவதைத் தடுத்தலும்.
- கட்டட நிருமாணப் பணிகளின்போது சட்டபூர்வ அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.
- உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல்.
- பிரதேச தேவைகள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளுக்கு தகவல் தெரிவித்தல்.
- சேவைகள் தடைப்படல் மற்றும் அவசர சந்தர்ப்பங்களின்போது அவை தொடர்பான நடவடிக்கைகளுக்காகத் தகவல் தெரிவித்தல்.

## 4.4 உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும்

இவ்வலகினைக் கற்பதனூடாக உங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் வழங்கப்படும் சேவைகள் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சிறப்பாக்கிக் கொள்வதற்கு ஏதுவாகின்ற வழிவகை குறித்து அறிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் தமக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவர நிறைவேற்றுவது மக்கள் திருப்தியடையும் வகையில் சேவைகளை வழங்குவதற்கு அத்தியவசியமாகின்றது.

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு,

| பொறுப்புக்கள் | கடமைகள் |
| --- | --- |
| • பிரதேச வளங்களை அடையாளம் காணுதல்<br>• மக்களின் தேவைகளையும் பிரச்சினை களையும் அடையாளம் காணுதல்<br>• அபிவிருத்திக்கான மூலோபாய வழிகளை இனங்காணல்<br>• திட்டங்களை வகுப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்<br>• தேவைகளைக் கருத்திற்கொண்டு முடிவு களை மேற்கொள்ளல்<br>• தீர்மானங்ளைச் செயற்படுத்துகையில் ஆராய்ந்து பார்த்தல்<br>• சட்டதிட்டங்களுக்கு அமைய கருமமாற் றுதல்<br>• தலைமைத்துவத்தை வழங்குதல்<br>• ஊழல், இலஞ்சம், மோசடி என்பவற் றுக்கு எதிராகச் செயற்படல்<br>• அரச சேவை மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை முறையற்ற விதத்தில் பயன் படுத்துவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்<br>• அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய வகையில் மேற்பார்வை செய்தல்<br>• தமக்குரிய கடமைப் பணிகளை சரிவர நிறைவேற்றுதல் | • மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தல்<br>• மக்களுடன் நெருங்கிய வகையில் தொடர்பினைப் பேணுதல்<br>• கூட்டங்கள், ஒன்று கூடல்களில் பங்கேற்றல்<br>• ஊழல், மோசடி, இலஞ்சம் என்பவற்றை ஒழித்தல்<br>• மக்கள் நலன்களுக்காக அர்ப்ப ணிப்புடன் செயற்படல்<br>• நேர்மையுடன் கருமமாற்றுதல்<br>• மக்களுக்கு விருப்புக்குரிய இட மாக நிறுவனத்தை நடாத்துதல்<br>• மக்களின் தேவைகளை வெற்றி கரமாகப் பூர்த்தி செய்தல்<br>• அரச சொத்துக்களும் சேவை களும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல்<br>• சேவைகளை வழங்குவதை உயர் தரத்தில் பேணுதல் |

## செயற்பாடு 4.6



- உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகள் அல்லது அரச அதிகாரிகளின் மூலம் நிறைவேற்ற வேண்டிய சில கடமைகள் அட்டவணையின் I ஆவது கூட்டில் தரப்பட்டுள்ளன. நிரந்தரமாக தமது பணிகள் மற்றும் சேவைகளை மேற்கொள்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகளை II ஆவது கூட்டில் பூர்த்தி செய்க.

| I ஆம் பகுதி | II ஆம் பகுதி |
|---|---|
| **மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள்** | **நாளாந்தம் தமது கடமைகளைச் செய்வதற்குரிய ஒழுங்குகள்** |
| மக்களுடன் நெருக்கமான வகையில் தொடர்புகளைப் பேணுதல் | |
| மக்கள் தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுதல் | |
| அரச சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல் | |
| மக்களின் நலன்களுக்காக அர்ப்பணிப்புடன் கருமமாற்றுதல் | |

## 4.5 தேசிய அபிவிருத்திக்கு உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பு

பிரதேசரீதியாக இடம்பெறக்கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகள் சமூகம், பொருளாதாரம், கலாசாரம் போன்ற சகல துறைகளிலும் ஏற்படக்கூடிய அபிவிருத்தியை உள்ளடக்கிய நாட்டின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது சூழற் சமநிலையைப் பாதுகாப்பது காலத்தின் தேவையாக விளங்குகிறது. பிரதேச அபிவிருத்தி தொடர்பாக நேரடியாக பங்களிப்புச் செய்கின்ற நிறுவனங்களுள் உள்ளூராட்சி மன்றங்கள் விசேடமானவையாக விளங்குகின்றன. பிரதேச அபிவிருத்தியின்மூலம் தேசிய அபிவிருத்தியை அடைவதற்காகச் செயற்படுகின்றபோது உள்ளூராட்சி மன்றங்களால் கவனம் செலுத்தப்பட வேண்டிய காரணிகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

1. பிரதேசத் தேவைகள் மற்றும் வளங்களை அடையாளம் காணுதல்
2. பிரதேசத் தேவைகள் மற்றும் வளங்களை அடையாளம் கண்டு அவற்றுக்குப் பொருத்தமான வகையில் திட்டத்தினைத் தயாரித்தல்
3. திட்டங்களை உரியமுறை நடைமுறைப்படுத்துதல்
4. பிரதேச ரீதியாகத் தலைவர்களை உருவாக்குதல்

மேற்படி காரணிகள் தொடர்பான சுருக்கமான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### i. பிரதேச தேவைகள் மற்றும் வளங்களை அடையாளம் காணுதல்

பிரதேச தேவைகள் என்பது, ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்களுக்குரிய விசேடமான தேவைகள் ஆகும். அத்தகைய தேவைகள் பல்வேறுபட்டனவாக இருக்கலாம். அவ்வாறு வேறுபாடுகள் நிலவுவதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை வருமாறு,

- வளங்களின் பரம்பல்
- கலாசார வேறுபாடுகள்
- தரைத்தோற்ற இயல்புகள்

இந்தக் காரணிகள் பிரதேசத் தேவைகளின் பல்வகைமை மீது தாக்கம் செலுத்துகின்றன. அதற்கமைவாக, ஒவ்வொரு பிரதேசத்திற்குமுரிய வேறுபட்ட தேவைகளை அடையாளம் காண்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பிரதான பொறுப்பாகும். பிரதேசத் தேவைகளுக்கான சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- உலர் வலயப் பிரதேசமொன்றிற்கு குடிநீர் வசதிகளை வழங்குதல்.
- நகர்ப்புறப் பிரதேசங்களில் குப்பைக் கழிவுகளை அகற்றுதலும் கழிவுகளை உரிய வகையில் முகாமை செய்தலும்.
- கிராமப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- கிராம மற்றும் நகர்ப்புறப் பிரதேச மக்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்குரிய வசதிகைளப் பெற்றுக் கொடுத்தல்.
  (நூலக சேவை, விளையாட்டு மைதானம், உடற்பயிற்சி, நடைபாதை, சிறுவர் பூங்கா போன்றன.)
- குறைந்த வருமானம் பெறுவோருக்காக வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வீதிகளுக்கான தெருவிளக்குகளைப் பொருத்தி பராமரித்தல்.
- முன்பிள்ளை விருத்திக்காக சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நடாத்துதல்.
- டெங்குநோய் பரவும் ஆபத்துள்ள பிரதேசங்களில் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

ii. பிரதேசத் தேவைகள் மற்றும் வளங்களை அடையாளங்கண்டு அவற்றுக்குப் பொருத்தமான வகையில் திட்டத்தினைத் தயாரித்தல்

***நீர் வழங்கல்***



குழாய்க்கிணறுகளை நிறுவுதல்

நீர்ப் பற்றாக்குறை நிலவுகின்ற பிரதேசங்களுக்கு நீர் வழங்கல் திட்டமொன்றைத் தயாரிக்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

உதாரணம் :-

- குடிநீர்ப் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களுக்கு நீர்வழங்கல் தொடர்பான பொருத்தமான நீர் மூலங்களை அடையாளங்காணல்.
- தேசிய மட்டத்தில் நீர்வழங்கல் ஆலோசனைத் திட்டத்தின் மூலம் நீர் வழங்குவதற்குள்ள இயலளவு தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல்.
- நீர்வழங்கல் ஆலோசனைத் திட்டத்திற்கு நிதியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிமுறையைத் திட்டமிடல்.
- தொழினுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளல்.




பவுசர் (நீர்த் தாங்கி)மூலம் குடி நீரை விநியோகித்தல்

***கழிவுகளை அகற்றுதல்***

- வீடுகளை அண்டியதாக கூட்டுப் பசளை உற்பத்தி செய்தல் தொடர்பான வசதிகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.
- கழிவுகளை வகைப்படுத்தி அகற்றுவதற்குத் திட்டமிடல்.
- கழிவுத் தொட்டிகளை விநியோகித்தல்
- கழிவுகளைச் சேகரித்தல்.
- மீள்சுழற்சி வேலைத்திட்டங்களைத் திட்டமிடல்.




கழிவு முகாமைத்துவம்

- சேதனப் பசளையை உற்பத்தி செய்வது தொடர்பான திட்டத்தினை வகுத்தல்.
- கழிவுகளை உரிய முறையில் அகற்றுதல் தொடர்பாக மக்களுக்குத் தெளிவூட்டுதல்.

இவை போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியதாக உரியவாறு இந்த திட்டத்தைத் தயாரிக்க முடியும்.

**டெங்கு ஒழிப்பு போன்ற தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கை**

- *பிரதேசத்தில் டெங்குநோய் பரவும் இடங்களை அடையாளம் காணுதல்.*
- *அத்தகைய இடங்களைச் சுத்தம் செய்வதற்குரிய வழிமுறைகளை முன்வைத்தல்.*
- *அது தொடர்பாக அரச நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், பிரதேச மக்கள் ஆகியோரது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளல்.*

### iii. திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தல்

*எதிர்பார்க்கப்படும் நோக்கத்தினை அடையும் வகையில் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது உள்ளூராட்சிமன்ற மக்கள் பிரதிநிதிகளினதும் அரச உத்தியோகத் தர்களினதும் பொறுப்பும் கடமையுமாகும். அதேபோன்று அத்தகைய திட்டங்கள் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் மேற்பார்வைக்கு உட்படுத்துதல் மூலம் மக்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்களால் இயலும்.*

*உதாரணம் :-*

- *பிரதேச வீதிகளை அமைத்தல் , புனரமைத்தல் போன்ற நடவடிக்கைளின் போது அவை முறையாக இடம்பெறுகின்றதா என்பதை மேற்பார்வை செய்தல்.*
- *கழிவு முகாமைத்துவத்தின் போது உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவை யாற்றுபவர்கள் மட்டுமன்றி பிரதேச வாசிகளும் தமது பொறுப்புக்களை உரியவாறு நடைமுறைப்படுத்துகின்றனரா என்பதை மேற்பார்வை செய்தலும் தேவையான சந்தர்ப்பங்களின்போது அவர்களுக்கு அது தொடர்பில் தெளிவூட்டுதலும்.*

### iv. பிரதேசரீதியாக தலைவர்களை உருவாக்குதல்


*வெற்றிகரமான சனநாயக ஆட்சிமுறை தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக நேர்மை, வினைத்திறன் மற்றும் முன்மாதிரிமிக்க தலைமைத்துவம் ஆகியன திகழுகின்றன. சனநாயக ஆட்சி முறையினுள் மக்களுக்கு மிக நெருக்கமான வகையில் பிரதேச நிருவாகம் தொடர்பான அதிகாரங்களைப் பெற்ற அமைப்புக்களாக உள்ளூராட்சி மன்றங்களே விளங்குகின்றன.*

*இதன் காரணமாக பிரதேசரீதியாக வாழுகின்ற மக்கள் தம்மிடையே சனநாயக பண்புடைய முன்மாதிரிமிக்க பிரதேச அரசியல் தலைவர்களை உள்ளூராட்சி மன்றங் களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டிய உரிமையைக் கொண்டுள்ளனர். அதேவேளை அது மக்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய மிகவும் முக்கியமான கடமையுமாகும்.*

மேலும், அவ்வாறு தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் பிரதேச மக்களுக்காக சேவையாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் சிறந்த அரசியல் அனுபவங்களையும் பயிற்சிகளையும் பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்பினையும் பெறுகின்றனர். அத்தகைய அர்ப்பணிப்புள்ள முன்மாதிரி மிக்க தலைவர்களை தேசிய அரசியலுக்கு அறிமுகம் செய்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடாகும்.

இவ்வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமாக சௌபாக்கியமிக்க இலங்கையைக் கட்டியெழுப்புவது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றிருக்கின்ற பங்களிப்பு அளப்பரியதாகும்.

## செயற்பாடு 4.4



- உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதியொருவரைத் தெரிவு செய்யும் போது அவரிடத்தில் காணப்பட வேண்டியதென நீர் கருதும் சிறந்த பண்புகள் சிலவற்றைப் பட்டி யற்படுத்துக.
- வீட்டுத்தோட்டத்தில் பாடசாலையில் நுளம்புகள் பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்காக செயற்படுத்த வேண்டிய வேலைத்திட்டங்களின் பட்டியலொன்றைத் தயாரிக்குக.
- நாளாந்தம் வீட்டை அண்மித்த சூழலில் சேருகின்ற கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக உமது ஆலோசனைத் திட்டமொன்றைத் தயாரிக்க.



### சாராம்சம்

- உள்ளூராட்சி மன்றங்கள் என்பது பிரதேச மட்டத்தில் மக்கள் பயன்பாட்டு சேவைகளை வினைத்திறன்மிக்கதாகவும் விளைதிறன்மிக்கதாகவும் செயற்படுத்துவது தொடர்பாக மத்திய அரசினால் தாபிக்கப்படும் விசேட நிறுவனங்களாகும்.
- உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளையும், அரச உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியுள்ளது.
- பிரதேச நிருவாகம் தொடர்பான எண்ணக்கரு மன்னராட்சிக் காலந்தொட்டே இலங்கையில் செயற்பட்டு வந்துள்ளது.
- நவீன உள்ளூராட்சி மன்றங்கள் இலங்கையில் பிரித்தானியராட்சிக் காலத்தின் போது ஆரம்பிக்கப்பட்டன.
- இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களின் மூலம் உள்ளூராட்சி மன்ற முறைமையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- இலங்கையில் தற்போது மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்றவகையில் உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
- உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மக்களது வாழ்க்கை நிலைகளை இலகுவாக்குவதற்காகவும் சிறப்பாக்குவதற்காகவும் பல்வேறு சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவர நிறைவேற்றுவது அத்தகைய சேவைகள் வெற்றிகரமான வகையில் செயற்படுத்தப்படுவதற்குக் காரணமாகின்றது.
- உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகள் தொடர்பில் பொதுமக்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் மேற்கொள்வதானது அத்தகைய சேவைகள் வெற்றிகரமாகவும் பயனுள்ளதாகவும் அமைவதற்கு ஏதுவாகின்றது.
- பிரதேச அபிவிருத்தியின் மூலம் தேசிய அபிவிருத்தியை அடைந்துகொள்வது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பாரிய பொறுப்புக் காணப்படுகின்றது.

# 5 மோதல் தீர்வு

## அறிமுகம்

தனிநபர்கள் பலரைக் கொண்டமைந்த ஒரு குழுவே சமூகம் எனப்படும். பல்வேறு வகைகளில் அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்களாவர். ஒவ்வொருவரினதும் கருத்துக்கள், கொள்கைகள், நம்பிக்கைகள், கல்வித் தரம், பொருளாதார நிலை என்றரீதியில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவ்வேறுபாடுகள் உருவாகலாம். இவ்வாறான வேறுபாடுகள் காரணமாக அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அதனால் கவலையுண்டாதல், மன அழுத்தம் ஏற்படல், மனக் குழப்பமேற்படல், வன்முறைகளுக்குத் தள்ளப் படல், அழிவு நாச வேலைகளில் ஈடுபடுதல் என அது வளர்ச்சியடையலாம். அதேபோன்று மோதல் என்பது தனி மனிதனுள்யேயும், நபர்களிடையேயும், குடும்பங்களிடையேயும், பிரதேசங்களிடையேயும் நாடுகளிடையேயும் பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பரவலடையலாம். அவ்வாறான மோதல்களைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வது மனித சமூகத்தின் சிறந்த நிலைப்பாட்டிற்கும் நிலையான சமாதானத்திற்கும் இன்றியமையாததாகும்.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களால்,**

- மோதல் என்பதன் வரைவிலக்கணம்
- மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள்
- மோதல் ஏற்படும் தரப்புகள்
- மோதல் வகைகள்
- மோதல் தீர்விற்குத் தேவையான பண்புகள்
- மோதல் தீர்விற்குப் பொருத்தமான முறைகள்
- மோதல்களை நன்மை பயக்கும் வகையில் தீர்த்தல்
- மோதல்களை நன்மை பயக்கும் வகையில் தீர்க்காமையால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் போன்றன தொடர்பில் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும்

**இயலுமாகும்.**

## மோதல் பற்றிய வரைவிலக்கணம்

ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் மோதல் பற்றிய பாடம் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



**மோதல் வரைவிலக்கணம்**

*''மோதல் என்பது வன்முறையான தாக்குதல், கிளர்ச்சி அல்லது போராட்டம் அல்லது உளரீதியாக நிகழும் போராட்டமாகும்.''*

*(ஒக்ஸ்போர்ட் (Oxford) அகராதி)*


இதன்படி மோதல் என்பது பல்வேறு வடிவங்களில் ஏற்படலாம் என்பது புலனாகிறது. பிரச்சினை, சண்டை, கருத்து வேறுபாடு, வாக்குவாதம், தாக்குதல், யுத்தம் போன்றவை இதற்கான உதாரணங்களாகும்.

தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தவொரு நபருக்கும் பல்வேறு மோதல் சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க நேரலாம். தனிநபர்களிடையிலும் நண்பர்களிடையிலும், சகோதரரிடையிலும் அயலவரிடையிலும் மோதல் ஏற்படலாம். அதேபோல இனம், அரசியல், சமயம் என்ற வகையில் குழுக்களிடையிலும் இவ்வாறான மோதல்கள் உருவாகலாம்.

மோதலுக்கான சந்தர்ப்பங்களை சாதகமான வகையில் மாற்றிக் கொள்வதற்காக புதிய கருத்துக்கள், புதிய ஆக்கங்கள், புதிய தொடர்புகள் ஆகியன ஏற்படலாம்.

எவ்வாறாயினும் மோதலை ஆரம்பத்திலேயே உரிய முறையில் தீர்த்துக் கொள்ளாதுவிடின் அது படிப்படியாக வளர்ந்து தீர்க்க முடியாத பாரதூரமான நிலை நோக்கிச் செல்லாலாம். இதன்மூலம் பெறுமதி வாய்ந்த மனித உயிர்களும் உடைமைகளும் அழிவடைவதனால் மோதலை ஆரம்பத்திலேயே தீர்த்துக் கொள்வது பிரதானமானதாகும்.

## 5.1 மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்



## செயற்பாடு 5.1



- நீங்கள் மோதல் ஒன்றுக்கு முகங்கொடுத்த சந்தர்ப்பம் ஒன்றை ஞாபகப்படுத்தி அதற்கு ஏதுவான காரணிகளைப் பட்டியப்படுத்துகள்.
- அம்மோதலைத் தவிர்த்துக் கொள்வதற்கு நீங்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் சிலவற்றை எழுதுங்கள்.

**மோதல் ஏற்படும் தரப்பினர்**

- தனிமனிதருள் (தன்னுள்)
- தனக்கும் நண்பருக்குமிடையில் (இருநபர்களிடையே)
- குடும்பம் ஒன்றினுள்
- அயலவர்களுக்கிடையில் (தனிநபர்களிடையே, குடும்பங்களிடையே, குழுக்க ளிடையே)
- கலாசாரங்களுக்கிடையில்
- நாட்டினுள் மற்றும் நாடுகள் இரண்டுக்கிடையில்
- நாடுகள் சிலவற்றுக்கிடையில்

**பல்வேறு மோதல் வகைகள்**

உலகில் நிலவும் பல்வேறு மோதல்களை அவற்றின் தன்மைக்கேற்ப பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம்.

- **அரசியல் அடிப்படையில் உருவாகும் மோதல்**



தேசங்களிடையிலான எல்லைப் பிரச்சினைகளை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இந்தியா, பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள காஷ்மீர் பிரதேசம் தொடர்பில் நீண்ட காலமாக நிலவும் மோதல்.

- **பொருளாதார அடிப்படையில் உருவாகும் மோதல்**

வளங்களைப் பெற்றுக்கொள்ளல், வறுமை, சந்தைகளைப் பெற்றக் கொள்ளல் அல்லது விரிவுபடுத்தல் முதலிய பல்வேறு பொருளாதாரக் காரணங்களின் அடிப்படையில் இவ்வாறான மோதல்கள் ஏற்படலாம். உதாரணமாக ஈராக், குவைத் நாடுகளிடையே ஏற்பட்ட பெற்றோலியப் பிரச்சினை

- **சமூக அடிப்படையில் உருவாகும் மோதல்**

தனிநபர்களிடையே அல்லது இனக் குழுக்களிடையே அல்லது நாடுகளிடையே இனரீதியாக, சமயரீதியாக ஏற்படும் கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் ஏற்படும் மோதலை இவ்வகையில் சேர்க்கலாம்.

## செயற்பாடு 5.2



- உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் நிலவும் மோதல்கள் பற்றிய தரவுகளைச் சேகரித்து மோதல்களால் மனித சமூகம் எதிர்கொள்ளும் அபாயகரமான நிலைமை பற்றி பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கும் வகையில் கட்டுரை ஒன்றை வரைக.

## 5.1 மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

மோதல் தீர்வு நடவடிக்கைகளின்போது பல்வேறு தடைகள் ஏற்படலாம். அவற்றுக்கான உதாரணங்கள் சில பின்வருமாறு, தமது நிலைபாட்டில் உறுதியாக இருத்தல்

- தனது கொள்கையை விட்டுக் கொடுக்காதிருத்தல்
- ஒரே தீர்வில் தங்கியிருத்தல்
- மாற்று வழிகளை நாடாதிருத்தல்
- மோதலுடன் தொடர்புடைய சகல தரப்பினரும் மோதல் தீர்வில் ஈடுபடாமை
- அடுத்த தரப்பினரை தோற்கடித்து தாம் வெற்றிபெற நினைத்தல்

அடுத்த தரப்பினரின் கருத்துக்கள், தேவைகளை கவனத்திற் கொள்ளாது ஒரு தரப்பினர் மாத்திரம் வெற்றிபெற முயற்சிப்பதன் மூலம் மோதல்நிலை தீவிரமடைய இடமளித்தல்.

விசேடமாக மோதல் நிலைமைகளின்போது மோதலுடன் தொடர்பான நபர்கள் அல்லது தரப்பினர்களிடையே நிலவும் விட்டுக்கொடுக்காத தன்மை மோதல் தீர்வின்போது பிரதான பிரச்சினையாக அமையும். பின்வரும் கதையை வாசிப்பதன் மூலம் அதனை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

ராகுல், ஜீவா இருவரும் தரம் 9 இல் கல்வி பயிலும் ஒரே வகுப்பு மாணவர்கள். புதிய கல்வியாண்டில் வகுப்புத் தலைவரைத் தெரிவு செய்யுமாறு வகுப்பாசிரியை கேட்டுக்கொண்டபோது இவ்விரு மாணவர்களும் அப்பதவிக்காக முன்வந்தனர். அவர்களிருவரும் தலைமைத்துவத்தைப் பெறுவதை வெகுவாக வெளிக்காட்டினர். ஒருவரை வகுப்புத் தலைவராகத் தெரிவுசெய்வதுடன் மற்றவரை உபதலைவராக நியமிக்கலாம் என்றும் ஆசிரியை எடுத்துக் கூறினார். ஆயினும், இருவரும் அக்கருத்தை நிராகரித்துத் தானே, தலைவராகும் நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்தமையால் வகுப்புத் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்ய முடியாமற்போனது.

மோதல் தீர்வுக்கான மற்றுமொரு பிரபலமான தடையாக ஒரே தீர்வில் விடாப்பிடியாக இருப்பதைக் கூறலாம். பின்வரும் கதையின் மூலம் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

*சாந்தியும் பிரபாவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களாவர். இவர்களிருவருக்குமிடையில் ஒருநாள் தொலைக்காட்சி பார்ப்பது தொடர்பில் மோதல் நிலையொன்று ஏற்பட்டது. ஒருவருக்கு காட்டூன் நிகழ்ச்சி பார்ப்பதற்கும், மற்றவருக்கு கிரிக்கெட் பார்ப்பதற்கும் தேவையிருந்தது. எனவே, இருவரும் சேய்மை ஆளுகை (ரிமோட் கொன்ட்ரோல்) மூலம் தமக்கு விருப்பமான வகையில் அலைவரிசைகளை மாற்றிக் கொண்டிருந்தனர். எனவே, இருவருக்குமிடையே முரண்பாட்டு நிலைமை உருவானது. இறுதியில் அவர்களின் தந்தை தலையிட்டு அப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியிருந்தது.*

இவ்வாறு தனிநபர் மட்டத்திலிருந்து பல்வேறு மட்டங்கள் வரை மோதல்கள் உருவாவதற்கு மோதல் தரப்பினர் ஒரே தீர்வில் தங்கியிருப்பதும் காரணமாகும்.

மோதல் சந்தர்ப்பங்களின்போது மாற்றுத் தீர்வுகள் பற்றிக் கவனம் செலுத்தாமையும் மோதல் வலுவடைவதற்குக் காரணமாகலாம். மேற்படி கதையில் மோதலைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் பின்வரும் மாற்று வழிகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப் பட்டிருப்பின் அதனை இலகுவாகத் தீர்த்திருக்கலாம்.

- நேர ஒழுங்குமுறைப்படி இருவரும் மாறி மாறி தொலைக்காட்சி பார்த்தல்
- வாராவாரம் நிகழ்ச்சிகளை மாற்றிப் பார்த்தல்
- இணையம் ஊடாக நடைபெற்று முடிந்த நிகழ்ச்சியைப் பின்னர் பார்த்து இரசித்தல்
- குறிப்பிட்ட நேரத்தில் இருவரும் பொதுவான வேறொரு நிகழ்ச்சியைப் பார்த்து இரசித்தல்

### செயற்பாடு 5.3



- மோதலில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டையோ ஒரு தரப்பினரையோ தெரிவுசெய்து அதனை ஆய்வுசெய்து அம்மோதல் தீர்விற்குத் தடையாக உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

### மோதல் தீர்விற்குத் தேவையான பண்புகள்

- பொறுமை
- உண்மையாகச் செவிமடுத்தல்
- கருணைத் தன்மை
- ஒத்துழைப்பு
- முடிவுக்கு வரும் ஆற்றல்
- கருத்துக்களைத் தெளிவாக முன்வைத்தல்
- மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தல்
- மற்றவரின் கருத்தை மதித்தல்
- தியாக மனப்பான்மை
- நடுநிலைமை
- ஒவ்வொரு நபரையும் மதித்தல்
- பொதுவான தீர்வை வரவேற்றல்
- உரிமைகளை மதித்தல்
- தமது கடமையை நிறைவேற்றல்

### மோதல் தீர்விற்குச் சிறந்த வழிமுறைகள்

மோதல்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில முறைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கான உதாரணங்கள் சில வருமாறு,

### பேச்சுவார்த்தை

மோதல் தீர்விற்காகப் பயன்படுத்தப்படும் எளிய முறை பேச்சுவார்த்தையாகும். மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் கலந்துரையாடல் மூலம் மோதலை தீர்த்துக் கொள்வது இதன்மூலம் நடைபெறும். இதன்மூலம் இருதரப்பினரும் வெற்றி - வெற்றி எனும் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### மத்தியஸ்தம் செய்தல்

இருநபர்களிடையே அல்லது இரு குழுக்களிடையே அல்லது இரு நாடுகளிடையே முரண்பாடொன்றைத் தீர்ப்பதற்குக் கலந்துரையாடல்மூலம் முடியாமற் போகும்போது அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறை மத்தியஸ்தம் செய்தலாகும். இது சமாதானமான செயற்பாடாகும். இதற்காக மோதல் தீர்வு நிபுணர்கள், இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் நபர்கள், வெளிவாரியான தரப்பினர் போன்றோரைப் பயன்படுத்தலாம். இம்முறையைப் பயன்படுத்தக்கூடிய சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு,

- குடும்பப் பிரச்சினை.
- மாணவர் குழுக்களிடையிலான மோதல்.
- இனக் குழுக்களிடையிலான மோதல்.
- நாடுகளுக்கிடையிலான மோதல்.

### இணக்கப்படுத்தல்

மோதல் அல்லது கருத்து வேறுபாட்டை தீர்ப்பதற்குப் பயன்படும் மற்றுமொருமுறை இணக்கப்பாடாகும். இணக்கப்பாடுகளைக் கொண்டதொரு சபையின் மூலம் இணக்கப்பாடு ஏற்படுத்தப்படும். இங்கு எதிரான இரு தரப்பினரையும் கலந்து ரையாடலில் ஈடுபடுத்தி பிரச்சினைத் தீர்வுக்கு வழிப்படுத்தல் இணக்கப்படுத்தலின் பிரதான பண்பாகும். இலங்கையில் இச்செயற்பாட்டிற்காக நீதி அமைச்சினால் இணக்க சபைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இச்சபை மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய விடயங்கள் சில வருமாறு,

- குடும்பப் பிரச்சினை.
- சிறு குற்றங்கள்.
- தனிநபர், குழுக்களிடையிலான பிரச்சினை போன்றன இதிலடங்கும்.

**தீர்ப்பளித்தல்**

இது நீதிமன்றச் செயற்பாடொன்றாகும். இதன்போது மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் இணக்கப்படுமாறு முதலில் அறிவுறுத்தப்படும். அது முடியாத போது வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும். நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு இறுதியானது என்பதுடன் அத்தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாதெனின் குறிப்பிட்ட தரப்பினருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

**உளவளத் துணை வழங்குதல்**

பல்வேறு வழிகளிலும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு ஆலோசனை வழங்கல் வழிகாட்டல் மூலம் மோதலைத் தீர்ப்பது உளவளத்துணைச் செயற்பாடாகும். இங்கு மாற்றுவழிகள் மூலம் இரு தரப்பினரும் தீர்வு நோக்கி வழிப்படுத்தப்படுவர். மோதலால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் சமாதானமான முறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதன் நன்மைகள் பற்றியும் இரு தரப்பினரையும் அறிவூட்டல், மோதலை இலகுபடுத்துவதற்காக இரு தரப்பினரையும் வழிப்படுத்தல் என்பன இதன்மூலம் செயற்படுத்தப்படும்.

**செயற்பாடு 5.4**



- உங்கள் பிரதேசத்தில் மோதல் தீர்விற்காக அமைக்கப்பட்டுள்ள இணக்க சபையில் மோதல் தீர்க்கப்படும் விதத்தை அவதானித்து அச்செயற்பாடு பற்றிச் சுருக்கமான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும்.

## 5.3 மோதலைச் சுமுகமாகத் தீர்ப்பதன் நன்மைகள்

முதலில் மோதல் ஏற்படுவது தனிநபரின் மனதிலாகும். சமூகத்தின் மிகவும் சிறய அலகான குடும்பத்தில் கூட மோதல் ஏற்படலாம். அப்போது குடும்பத்தில் நிலவிய ஒற்றுமையும் சமாதானமும் இல்லாமற்போக நேரிடும். அவ்வாறானதொரு குடும்பச் சூழலில் வளரும் பிள்ளைகள் பல்வேறு முரண்பாடான, வன்முறையான செயற்பாடுகளை வெளிப்படுத்துவர். எனவே, குடும்பத்தில் ஏற்படும் மோதல்களை உடனுக்குடன் தீர்த்துக்கொள்வதன் மூலம் குடும்பத்தில் சமாதானத்தையும் ஒற்றுமை யையும் ஏற்படுவதுடன் அதன் பயனாக சமூகத்திலும் சமாதானம், ஐக்கியம், இணக்கம் என்பன ஏற்பட வழிபிறக்கும்.

தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் இனமோதல், சமய மோதல் காரணமாக அதிகமான நாடுகளும் மக்கள் சமூகமும் மோதல்களில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறானதொரு வன்முறையான பின்னணியில் அதனால் ஏற்படும் உயிரிழப்பு, சொத்துக்களின் அழிவு, அகதிகள் உருவாதல் என்பவற்றைக் குறைத்துக் கொள்வதற்கு மோதல்களைச் சுமூகமாகத் தீர்த்துக் கொள்வது இன்றியமையாதது.

மோதலை சமாதானமாகத் தீர்த்துக்கொள்வதனால் ஏற்படும் நன்மைகள் சில பின்வருமாறு,

- **சமாதானம் நிலைநாட்டப்படல்**

மோதல் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிகழ்வது சமாதானம் இல்லாமற் போதலாகும். தனிநபரினுள் மோதல் ஏற்படும்போது மனதினுள் சமாதானம் இல்லாமற் போகும். அதேபோன்று இரு நபர்களிடையே, அல்லது சில நபர்களிடையே, குடும்பத்தில், சமூகத்தின் பல்வேறு தரப்பினரிடம் மோதல் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமாதானம் அற்றுப் போகின்றது. எனவே, மோதலை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும்போது சமாதானம் நிலைநாட்டப்படும். ஆதலினால் நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்த மோதலைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வது அவசியமாகும். அது தனிப்பட்ட முறையில் தமக்கும் பொதுவாகச் சமூகத்திற்கும் பயனளிக்கும்.

- **தனிநபர் மற்றும் சமூக அபிவிருத்தி**

மோதல் நிலவும் சகல சந்தர்ப்பங்களிலும் அது தனிநபரினதும் சமூகத்தினதும் அபிவிருத்தியைப் பாதிப்பதாக அமையும். எனவே, மோதலைச் சுமுகமாகத் தீர்ப்பதன் மூலம் தனிப்பட்ட வகையில் அது தமது அபிவிருத்திக்குக் காரணமாவதுடன் நேரடியாகச் சமூக அபிவிருத்திக்கும் காரணமாயமையும்.

- **அரசியல் உறுதிப்பாடு**

மோதல்நிலையின்போது பொதுவாக நாட்டின் அரசியல் உறுதிப்பாடு அற்றுப்போகும். பல்வேறு வகைகளிலும் இடம்பெறும் வன்முறையான நிகழ்வுகள் மற்றும் மோதல்கள் காரணமாக அரசியல்ரீதியாக இடம்பெறும் அரசியல் உறுதியற்ற தன்மை நாட்டை மிகவும் மோசமான வகையில் பாதிக்கும். எனவே, மோதல்களைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வது அரசியல் உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு இன்றியமையாதது.

- **வளங்களின் அழிவை இழிவளவாக்கல்**

பொதுவாகச் சமூகம், தனிநபர், நாடு என்று பார்க்கும்போது மோதல் ஏற்படுவதால் வளங்கள் பாரியளவில் அழிவடைவதைக் காணலாம். அதில் பௌதிக வளங்களைப் போன்று மனித வளமும் காலமும் வீணடிக்கப்படுகிறது. எனவே, மோதலை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதன்மூலம் வளங்களின் அழிவைத் தடுத்துக் கொள்ளவோ குறைத்துக் கொள்ளவோ முடியும் என்பது கவனிக்கத்தக்கது.

மேற்கூறப்பட்ட காரணங்களைத் தவிர மோதல்களைச் சுமுகமாகத் தீர்ப்பதன் மூலம் அடைந்து கொள்ளக்கூடிய நன்மைகள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி உங்கள் குடியியற் கல்விப் பாட ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

- நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்
- மனவழுத்தத்தைக் குறைத்தல்
- தனிநபரின் சுய கௌரவம் பாதுகாக்கப்படல்
- நல்லுறவு கட்டியெழுப்பப்படல்
- சமூகத் தொடர்புகள் வளர்ச்சியடைதல்
- கலாசார நல்லிணக்கம் மேம்படுதல்
- அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல்

- மனித உரிமைகள் பாதுகாக்கப்படுதல் (குறிப்பாக சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள்)
- உயிர், உடைமைச் சேதங்களைத் தடுத்தல்
- சர்வதேச தொடர்புகள் விரிவாதல்
- முதலீட்டாளர்களின் வருகை அதிகரித்தல்

### மோதல்களை சுமுகமாகத் தீர்க்காமையால் ஏற்படும் பிரதிகூலங்கள்

மோதல்கள் சுமுகமாகத் தீர்க்கப்படாவிட்டால் தனிநபரும் சமூகமும் மோசமான வகையில் பாதிக்கப்படலாம். வெற்றி - வெற்றி எனும் வகையில் மோதல் தீர்வு எட்டப்படாவிட்டால் ஏற்படும் தீய விளைவுகள் சில பின்வருமாறு,

- மனவழுத்தம் ஏற்படல்
- இகழ்ச்சியடைதல்
- ஒருவரையொருவர் சந்தேகத்துடன் நோக்கல்
- சமூகத் தொடர்பு பாதிக்கப்படுதல்
- தேவையற்ற தொல்லைகளும் செலவும் அதிகரித்தல்
- வளங்கள் அழிவடைதல்
- நிலையான சமாதானம் சீர்குலைதல்

மேற்படி காரணங்களை குடியியற் கல்வி ஆசிரியருடனும் சக மாணவர்களுடனும் மூத்தவர்களுடனும் கலந்துரையாடி அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

மோதலைத் தீர்த்துக்கொள்வது, மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினருக்கும் முக்கியமானது. மோதலை சுமுகமாகத் தீர்த்துக்கொள்வது அனைவருக்கும் நன்மை பயப்பதாக அமையும். அதேபோல் மோதலை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளாவிட்டால் அதன் தீமைகளும் அனைவருக்கும் பொதுவானதாக அமையும். எனவே, மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் உண்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு மோதலைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும். தனிநபர் அபிவிருத்தியைப் போன்றே சமூக அபிவிருத்தியிலும் அதன் செல்வாக்குப் பற்றி இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். தனிநபரினதும் பொதுவாக முழு மனித சமூகத்தினதும் சமாதானத்திற்கு மோதலைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளப்படுவது காரணமாக அமையும். மோதல் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதனால் ஒற்றுமை, சகவாழ்வு, புரிந்துணர்வு, சகோதரத்துவம், சுதந்திரம் முதலியவற்றை வளர்த்துக் கொள்ள முடியும். அதன்மூலம் பொதுவாக ஒரு நாடு ஒரு தேசியம் எனும் வகையில் முழுச் சமூகத்திற்கும் நிலையான சமாதானத் திற்கு வழிபிறக்கும். அன்பார்ந்த மாணவ மாணவிகளே நாமனைவரும் சகல பேதங்களையும் மறந்து மோதல்களை சமாதானமான முறையில் தீர்த்து நிலையான சமாதானத்திற்காக ஒன்றுபடுவோம். குரல் கொடுப்போம். அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இது இன்றைய எமது தேசிய கடமையாகும்.

## சாராம்சம்

- மோதல் என்பது தனிநபரினுள்ளும் நபர்களிடையிலும் குழுக்களிடையிலும் நாடுகளிடையிலும் ஏற்படுகின்றது.
- பல்வேறுபட்ட காரணங்களாலும் மோதல்கள் ஏற்பட்டு அவை வளர்ச்சி யடைகின்றன.
- அரசியல், பொருளாதார, சமூகரீதியில் மோதல் உருவாகும் துறையை அடிப் படையாகக் கொண்டு மோதல் வகைப்படுத்தப்படலாம்.
- மோதல் தீர்வின்போது பல்வேறு தடைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி நேர்வதுடன் அத்தடைகளை வெற்றி கொள்வதன் மூலம் சிறப்பான முறையில் மோதல் தீர்வை அடையலாம்.
- மோதல் தீர்வின்போது தனிநபரொருவர் தனியாகவும் சமூக ரீதியாகவும் பல்வேறு பண்புகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.
- பேச்சுவார்த்தை, உளவளத்துணை, மத்தியஸ்தம், இணக்கப்பாடு முதலியன மோதல் தீர்வில் பயன்படுத்தப்படும் வெற்றிகரமான முறைகளாகும்.
- மோதலைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வது தனிப்பட்ட வகையில் தனக்கும் பொதுவாக சமூகத்திற்கும் மிகவும் பயனுள்ள விளைவுகளைத் தருவதுடன் அது நிலையான சமாதானத்திற்கும் வாய்ப்பாக அமைகின்றது.
- மோதல் சுமுகமாகத் தீர்க்கப்படாமையால் பல்வேறு தீய விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதுடன் அது தனிப்பட்ட வகையிலும் சமூக அடிப் படையிலும் சமாதானம், சகவாழ்வு, சமத்துவம், நல்லிணக்கம், நிலையான சமாதானம் என்பவற்றின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது.

# 6

# வேலை உலகிற்கு ஆயத்தமாதல்



## அறிமுகம்

தற்காலக் கல்வியின் பிரதான இலக்கு நற்பண்புகளையுடைய சிறந்த பிரசையை சமூகத்திற்கு வழங்குவதாகும். இங்கு பாடசாலைக் கல்வியின் பிரதான இலக்கு சமூகத்திற்குப் பயனுள்ள பிரசையொருவரை உருவாக்கி அளிப்பதாகும்.

ஆகவே, எதிர்கால வேலை உலகினை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு, அவசியமான வழிகாட்டல்களைப் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதானது கல்வியின் மூலம் எய்தப்பட வேண்டிய விடயங்களில் ஒன்றாக உள்ளது. இதற்காக பாடசாலையின் அனைத்துக் கலைத்திட்டங்களிலும் இது தொடர்பான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும்.

வேலை உலகினை வெற்றிகொள்வதாயின்,

- எதிர்காலத்தில் எதிர்பார்க்கின்ற தொழிலைத் தெரிவுசெய்தல்.
- எதிர்காலத்தில் எதிர்பார்க்கின்ற தொழிலைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

மேற்கூறப்பட்ட எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்வதற்காக இவ்வத்தியாயத்தைக் கற்பது மிகவும் பயனுள்ளதாகும்.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,**

- வேலையுலகிலுள்ள தொழில்கள் / வாண்மைகளை இனங்காணவும்
- தனது திறமை, இயலுமை என்பவற்றை இனங்கண்டு தொழிலொன்றைத் தேர்ந்தெடுக்கவும்
- தொழில் விண்ணப்பப்பத்திரம், சுய விபரக்கோவை என்பவற்றைத் தயாரிக்கவும்
- நேர்முகப் பரீட்சையொன்றினை எதிர்கொள்ளும் திறனை விருத்திசெய்து கொள்ளவும்
- தொழில்புரியும் இடத்தில் செயற்றிறனுடனும் ஒத்துழைப்புடனும் செயலாற்றவும்
- தமது தொழிலையும் தனிப்பட்ட வாழ்க்கையையும் சமநிலையில் பேணவும்
- சிறந்த நிதி முகாமைத்துவத்துடன் தமது செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளவும்

**இயலுமாகும்.**

## 6.1 சுயவிபரக் கோவையொன்றைப் பேணல்

சகல தொழில்களுக்கும் சமூகப் பெறுமதி காணப்படுகிறது. அவ்வாறே அவற்றுக்கு தனியாள் பெறுமதியும் உண்டு என்பதை பின்வரும் வரிப்படத்திலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

**வேலை உலகிலுள்ள தொழில்கள்**



தொழிலொன்றைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர் உமது இயலுமை, திறன், விருப்பம் போன்றன தொடர்பாக சுய விசாரணை செய்துகொள்வது முக்கியமாகும். உங்களிடம் வேறுபட்ட திறன்கள், இயலுமைகள் காணப்படலாம். அவை பற்றி நன்றாக அறிந்து வைத்திருப்பது நீங்கள் மட்டுமே. பிறருடைய தூண்டுதலுக்காக தொழில் துறையொன்றைத் தெரிவுசெய்து கொள்வதிலும் பார்க்க நீங்களே உங்களுக்குப் பொருத்தமான தொழிலொன்றைத் தேர்ந்தெடுப்பது மிகவும் பொருத்தமானதாகும். அதனால் உங்களது தனிப்பட்ட இயலுமை, திறன், விருப்பம் போன்ற விடயங்களை உள்ளடக்கிய கோவையொன்றைப் பேணிவருவது எதிர்காலத்தில் தொழிலொன்றில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்குப் பயனுள்ளதாக அமையும்.

சுயவிபரக் கோவையொன்றைப் பேணும்போது அதனுள் உள்ளடக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆசிரியை வினவியபோது பிள்ளைகள் வழங்கிய பதில்கள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**விமல்** : டீச்சர், தன்னைப் பற்றிய தகவல்கள். அதாவது தனது பெயர், பிறந்த திகதி, முகவரி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கம், தவணைப் பரீட்சைப் பெறுபேறுகள், பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள், பரிசுகள், தாய் தந்தையின் பெயர், தொழில், தொலைபேசி இலக்கம் போன்றன.

**துஷ்யா** : டீச்சர், எமது தனிப்பட்ட பண்பு சார்ந்த விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என நினைக்கிறேன்.

**பரீட்** : அவை என்ன துஷ்யா?

**துஷ்யா** : அர்ப்பணிப்பு, பொறுமை, இலக்கு, சவால்களுக்கு முகங்கொடுக்கும் வல்லமை...

**நஸீஹா** : ஏன் டீச்சர், எமது திறமைகளும் தேவைதானா?

**ஆசிரியர்** : ஆமாம், சொல்லுங்கள் பார்ப்போம்.

**நஸீஹா** : தொடர்பாடல் திறன், தலைமைத்துவ ஆற்றல், மற்றவர்களுடன் இணைந்து செயற்படும்திறன், எழுத்தாற்றல், பாடுவதற்கு உள்ள திறமைகள், சுயமாக ஒன்றைச் செய்துகொள்ளும் ஆற்றல்.

**நவீன்** : ஆம், அதுமாத்திரம் போதுமானதன்று நாம் பெற்றிருக்கும் மேலதிக திறன்களையும் உள்ளடக்க வேண்டும். பாடுதல், விவாதம், விளையாட்டு போன்ற விடயங்களுக்காகப் பாடசாலையில் பெற்றுக்கொண்ட சான்றி தழ்கள், பாடசாலைக்கு வெளியில் பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள் ஆகியவற்றையும் உள்ளடக்க முடியும்.

**ஆசிரியர்** : மிகவும் நல்லது. உங்களைப் பற்றிய நிறைய விடயங்களை சுய விபரக் கோவையினுள் உள்ளடக்க முடியும் என்பதனை அறிந்து கொண் டீர்கள் அல்லவா? இவ்வாறான சுயவிபரக் கோவையொன்றைப் பேணி வருவதானது எந்தவொரு நபரினதும் எதிர்கால வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதொன்றாகும்.

மாணவர்கள் வழங்கிய விடைகள் உள்ளடங்கக்கூடிய வகையில் சுயவிபரக் கோவையொன்றினுள் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய தகவல்களை ஆசிரியர் கரும்பலகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

| | |
|---|---|
| 1. **சுய விபரங்கள்**<br>● பெயர்<br>● முகவரி<br>● தொலைபேசி இலக்கம்<br>● பிறந்த திகதி<br>● வயது<br>● கல்வித் தகைமைகள் | 2. **தனியாள் பண்புகள்**<br>● அர்ப்பணிப்பு<br>● விருப்பு<br>● நட்பு<br>● நேரடியாகக் கருத்துக்கூறல்<br>● தியாக மனப்பான்மை |
| 3. **தனிநபர் திறன்கள்**<br>● கலைத்திறன்<br>● விளையாட்டுத் திறன்<br>● வாகனம் செலுத்தும் திறன்<br>● மொழித்திறன் | 4. **தனிநபர் நடத்தைகள்**<br>● சமூகமயமாதல்<br>● தனித்து செயலாற்றுதல்<br>● குழுவாக இணைந்து செயற்படும் ஆற்றல்<br>● பகிர்ந்து கொள்ளல் |
| 5. **பாடசாலையில் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள்**<br>● மாணவர் தலைவன் / தலைவி<br>● மாணவர் படையணி<br>● சாரணர்<br>● வீதிப் போக்குவரத்து ஒழுங்குபடுத்துநர்<br>● சுற்றாடல் முன்னோடி | 6. **பாடசாலைக்கு புறம்பாக பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள்**<br>● சிரமதானங்களில் பங்கு கொள்ளல்<br>● அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் ஈடுபடல்<br>● முதியோர் இல்லம் / சிறுவர் இல்லங்களுக்கான உதவிச் சேவைகள்<br>● மாணவர் நலன்புரி நடவடிக்கைகள்<br>● பல்வேறு சங்கம் / அமைப்புகளில் பங்கேற்றல் |

## சுயவிபரக் கோவையொன்றினைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தைத் தேடி அறிவோம்

- இயலுமை, இயலாமை ஆகியன பற்றி அறிந்துகொள்ளக் கூடியதாயிருத்தல்.
- விருப்பத்தை விளங்கிக்கொள்ளக் கூடியதாயிருத்தல்.
- பலவீனங்களை அறிந்து அவற்றை தவிர்த்துக்கொள்ள முடியுமாயிருத்தல்.
- விருத்தி செய்து கொள்ள வேண்டிய தேர்ச்சி, திறன்களை அறிந்து கொள்ள முடியுமாயிருத்தல்.
- தன்னைப் பற்றிய தன்னம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாயிருத்தல்.
- தொழிலொன்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முடியுமாயிருத்தல்

**செயற்பாடு 6.1**



சுயவிபரக் கோவையில் உள்ளடக்கப்பட வேண்டிய அம்சங்கள் தொடர்பாக அவதானித்து உங்களைப் பற்றிய கவன ஈர்ப்பு ஏற்படும் வகையில் தனியாள் சுயவிபரக் கோவையொன்றை ஆரம்பித்து அதனை தொடர்ந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்க.

## 6.2 வேலையுலகிலுள்ள பல்வேறு வாண்மைத் தொழில்கள்

வேலையுலகும் இவ்வுலகினைப் போன்றே பல்வகைமை உடைய தாகும். இங்கு பல்வேறு வாண்மை / தொழில்களைக் காணலாம். வேலை உலகில் காணப் படுகின்ற வாண்மை / தொழில் தொடர்பான விளக்கமொன்று இருப்பது மிக முக்கியமானதாகும். எதிர்காலத்தில் நீங்கள் விரும்பும், உங்களுக்கு விருப்பமான வாண்மை / தொழிலொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு இது பயனுள்ளதாக அமையும்.

**வேலையுலகில் காணப்படுகின்ற துறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன**

**பல்வேறு வாண்மைகள் / தொழில்கள்**

| | | |
|---|---|---|
| அரச மற்றும் தனியார் துறைத் தொழில்கள் | அரச அல்லது தனியார் துறைகளுக்குரிய பல்வேறு வாண்மை / தொழில்கள் | ஆசிரியர்கள், வைத்தியர்கள், தொழிலாளர்கள் |
| சமூக நலன்புரி ச் சேவைகள் | சமூகத்திற்கு சேவை வழங் கும் நோக்கத்தை அடிப்ப டையாகக் கொண்டுள்ள தொழில்கள் | சுகாதார குடும்ப நல ஊழியர்கள், சுற்றாடல் முன்னோடிகள் |
| சேவை வழங்கு வோர் தொழில்கள் | தன்னால் ஆரம்பித்து நடாத் திச் செல்லப்படுகின்ற தொழில்கள் | நிறுவனத் தலைவர், வியாபார உரிமையாளர் |
| பணியாளர்களாக பணிபுரியும் தொழில்கள் | நிறுவனமொன்றில் ஊழியர்களாக பணியாற் றுகின்ற தொழில்கள் | ஆசிரியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் |
| சுய தொழில்கள் | தன்னால் சுயமாக செய்யப் படுகின்ற தொழில்கள் | கூலி வண்டிச் சேவை, வியாபார நடவடிக்கைகள் |
| தொண்டர் பணி புரியும் தொழில்கள் | இலாப நோக்கமின்றி செய்யப்படும் தொழில்கள் | அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பாடசா லைத் தொண்டர் ஆசிரியர்கள் |

**தொழில்செய்யும் இடத்திற்கமையவும் தொழில்களை வகைப்படுத்தலாம்**

- **உள்ளகத் தொழில்கள்** : காரியாலயம், வியாபார நிலையங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் ஆற்றப்படுகின்ற தொழில்கள்.




- **திறந்த வெளிகளில் செய்யப்படுகின்ற தொழில்கள்** : கமத்தொழில் செய்தல், பாதை அமைத்தல், நிருமாணிப்பு போன்ற தொழில்கள்.




- **நிலையான இடங் களில் செய்யப்படு கின்ற தொழில்கள்** : தொழிற்சாலைகளில், காரியாலயங்களில், வியாபார நிலையங்களில் மேற்கொள்ளப்படும் தொழில்கள்.




- நடமாடும் தொழில்கள்: இடத்துக்கிடம் பெயர்ந்து பொருட்களை விற்பனை செய்யும் தொழில்கள்.

சுதேச வைத்தியர்கள் சிலர் எவ்வித கட்டணங்களும் பெற்றுக் கொள்ளாமல் வைத்திய சேவை புரிவதை அறிந்திருக்கிறீர்களா? இங்கு அவர்கள் பணத்தை விட ஆன்மீக திருப்தியை மதிக்கின்றார்கள். ஊதியம் பெறும் தொழிலொன்றாக இருப்பினும், தமது சேவையைப் பணத்திற்கு மாத்திரம் வரையறுக்காது விருப்போடு செய்யும் பொழுது உங்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

சமூகத்தின் இருப்பை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் பல்வேறு தொழில்கள் மற்றும் சேவைகளை வழங்குவது அத்தியாவசியமானதாகும். அதனால் சகல தொழில்களும் சமூகத்தோடு ஒத்துப்போதல் முக்கியமானதாகும். அத்தகைய சகல தொழில்களுக்கும் ஓர் பெறுமதி உண்டு. நன்மதிப்பு உண்டு. சிலர் சிந்திப்பது போன்று உயர்வான தொழில் அல்லது தரக்குறைவான தொழில் என்று வகைப்படுத்துவது பொருத்தமானதல்ல. ஏனெனில் சகல தொழில்களும் சமூகத்திற்குச் சமனாக தேவைப் படுவதனாலாகும். இன்னும் சிலர் தொழில்களை வகைப்படுத்துவது அதற்காக விரயமாகும் சிரமம், பெற்றுக்கொள்ளும் வருமானம் அல்லது சமூக அந்தஸ்து ஆகிய விடயங்களைக் கொண்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனினும் தொழிலை அவ்வாறு வகைப்படுத்துவது பொருத்தமற்றதும் அவசியமற்றதுமாகும் என்பது உங்களுக்கே விளங்கியிருக்கும்.

## செயற்பாடு 6.2



வார இறுதிப் பத்திரிகை ஒன்றில் தொழில் வெற்றிடங்கள் / அறிவித்தல்கள் பிரசுரமாகியுள்ள பக்கமொன்றை வாசித்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வகை தலைப்புகளுக்குப் பொருத்தமான தொழில்களை தெரிவு செய்து அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| அரச துறைத் தொழில்கள் | தனியார் துறைத் தொழில்கள் | சுய தொழில்கள் |
|---|---|---|
| | | |

## 6.3 வெவ்வேறு தொழில் வாண்மைகளில் இணைதல்

தொழிலொன்றில் இணைவதற்கான பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. தமது எதிர்கால எதிர்பார்ப்புகளுக்குப் பொருத்தமானவாறு அவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் தமது கல்விச் செயற்பாடுகளை எதிர்கால வேலை உலகுக்குப் பொருத்தமான வகையிலே இலகுவாகத் திட்டமிட்டுக்கொள்ள முடியும். இங்கு தமது விருப்பம், தேர்ச்சி தொடர்பாகவும் கவனத்திற்கொள்ள வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்கள் பலவற்றிற்கான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- **பாடசாலையில் பாடம் அல்லது பாடத் துறையைத் தெரிவுசெய்தல்**

அன்பார்ந்த பிள்ளைகளே, இவ்வருடம் தரம் 09 இல் கல்வி கற்கும் நீங்கள் அடுத்த வருடம் தரம் 10 இற்கு செல்வீர்கள். அங்கு ஆறு பிரதான பாடங்கள் இருப்பதுடன் தொகுதிப் பாடங்கள் மூன்றையும் தெரிவுசெய்து கொள்ள வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் பொழுது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. உதாரணமாக இப்பாடங்களைக் கற்பதற்கு தன்னிடம் காணப்படுகின்ற இயலுமை, தனது விருப்பம், எதிர்கால வேலை உலகுடனான தொடர்பு என்பன அவற்றில் சிலவாகும். அவ்வாறே தொகுதிப் பாடங்களை தெரிவு செய்யும் பொழுது எதிர்காலத்தில் எந்தவொரு தொழிலைத் தேர்ந்தெடுத்தாலும் பண்பாடுடைய நற்பிரசையாக வாழ்வதற்கு அவசியமான அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தவல்ல குடியியற் கல்வி போன்ற பாடமொன்றைத் தெரிவு செய்து கொள்வதில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இதற்கு காரணம் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எந்தத் தொழிலைத் செய்தாலும் மனித நேயத்தின் பெறுமதி உயர்வாகக் காணப்படுதல் வேண்டும் என்பதாகும்.

க.பொ. த (சா / த) பரீட்சையில் சித்தியடைந்து உயர்தர வகுப்பிற்குச் செல்லும்போது விஞ்ஞானம், கணிதம், தொழினுட்பம், வணிகம், கலை ஆகிய சில பாடத்துறைகள் காணப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பத்தில் தனது விருப்பின் பிரகாரம் பாடத் துறைகளையும், பாடங்களையும் தெரிவுசெய்து கொள்ள வேண்டும்.

| உயர்தரத்திற்கான பாடத்துறைகள் | காணப்படுகின்ற தொழில்கள் சிலவற்றிற்கு உதாரணம் |
|---|---|
| விஞ்ஞான பாடத்துறை | வைத்தியர், பல் வைத்தியர், ஆய்வுகூட நுட்பவியலாளர், ஆசிரியர் தொழில் போன்றன. |
| கணித பாடத்துறை | பொறியியலாளர், மின்சார நுட்பவியலாளர், ஆடை உற்பத்தியாளர், திட்ட வரைஞர், கணித ஆசிரியர் தொழில் போன்றன. |
| வணிக பாடத்துறை | கணக்காளர், கணக்கு எழுதுவினைஞர், வியாபாரி, மதிப்பீட்டாளர், ஆசிரியர் தொழில் போன்றன. |
| தொழினுட்ப பாடத்துறை | இயந்திர தொழினுட்பவியலாளர், மின்சார தொழினுட்பவியலாளர், இயந்திராதிகளை திருத்தி அமைத்தல், ஆசிரியர் தொழில் போன்றன. |
| கலைப் பாடத்துறை | எழுதுவினைஞர், வியாபாரப் பணியாளர், ஆசிரியர் தொழில், சேவை வழங்குனர், சட்டத்தரணி போன்றன. |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளுக்கேற்ப நீங்கள் பாடப் பிரிவொன்றைத் தெரிவு செய்யும் பொழுது தொழிற்றுறை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்பது தெளிவாகின்றது. பிறருடைய தேவை, விருப்புகளை விடவும் உங்களது விருப்பு, இயலுமைக்கேற்ப பாடப் பிரிவுகளைத் தேர்ந்தெடுப்பது எதிர்காலத்தில் பயனுள்ளதாக அமையும்.

- **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்**

தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ளும்போது அதற்கு கல்வித் தகைமைகளுடன் தொழிற் தகைமையும் அவசியமாகும்.

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த (சா / த), க.பொ.த (உ /தர), டிப்ளோமா (உதாரணம் சங்கீதம், விவசாயம் போன்ற), பட்டம் (விஞ்ஞானம், கலை, வணிகம், தொழினுட்பம் போன்ற)

**தொழிற் தகைமைகள்** : தாம் கடமையாற்ற எதிர்பார்க்கும் / தற்போது கடமை புரியும் தொழிலுக்குரிய தகைமைகள் உதாரணம் : ஆசிரியர் தொழிலுக்கு, கற்பித்தலில் தேசிய டிப்ளோமா ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைப் பயிற்சி, கல்விமானி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா போன்றன தொழில் தகைமைகளாக கருதப்படும்.

- **முறையான மற்றும் சேவை அடிப்படைத் தொழிற் பயிற்சிகள்**

வேலையுலகில் கல்வித் தகைமை தொழிற்றகைமை, தேர்ச்சி ஆக்கத்திறனுள்ள நபர்களின் தேவை அதிகமாக காணப்படுகின்றன. தொழிற் தகைமை ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு நிறுவனங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் தற்போதைக்கு தொழிற்றகைமையை பெற்றுக் கொள்வதற்காக ''தேசிய தொழிற்றகைமை'' சட்டத்தின் கீழ் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் (NVQ) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பகுதிநேர, முழுநேர, டிப்ளோமா கற்கை நெறிகளை, தேசிய இளைஞர் சேவை மன்றம் போன்ற நிறுவனங்கள் நடாத்துகின்றன. பட்டமொன்றினை பெற்றுக் கொள்வதற்கு தொழினுட்பப் பல்கலைக் கழகமொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

தொழிற்றகைமையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்களையும் கற்கை நெறிகளையும் பின்வரும் வரிப்படத்தில் அவதானிக்கலாம்.

**தொழிற்தகைமை**

**நிறுவனம்**

- தொழினுட்பக் கல்லூரிகள்
- தொழிற்பயிற்சி அதிகார சபை
- தேசிய இளைஞர்கள் சேவை மன்றம்
- தேசிய பயிலுநர் சபை
- ஹோட்டல் பாடசாலைகள்
- தாதியர் கல்லூரிகள்
- விவசாயக் கல்லூரிகள்
- தொழினுட்பப் பல்கலைக் கழகம்
- சட்டக் கல்லூரி
- விதாதா வள நிலையம்



**கற்கைநெறி**

- மோட்டார் வாகன திருத்தவேலை
- கணினிப் பயிற்சி
- ஒப்பனை, அலங்காரம்
- உணவு தயாரிப்பு
- மின் தொழினுட்பம்
- திட்டப்பட வரைஞர்
- தாதியர் பயிற்சி

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக தொழில் வாண்மை தொடர்பாக இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் முழு நேரப் பயிற்சிகளுடன் தொழில் செய்து கொண்டிருக்கும் பொழுது சேவைக்காலப் பயிற்சியும் வழங்கப்படும்.
*(உதாரணமாக :- ஆசிரியர் தொழில், இயந்திர சாதனங்களை இயக்குதல் போன்றன)*

## செயற்பாடு 6.3



தொழிற்பயிற்சியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை திரட்டி வகுப்பில் உமது நண்பர்களுடன் அவற்றைக் கலந்து ரையாடுக.

தொழிற்பயிற்சி தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்கையில் அதற்கான பல நிறுவனங்கள் காணப்படுகின்றன.

- தொழினுட்பக் கல்லூரி மற்றும் பயிற்சித் திணைக்களம்
- தேசிய தொழிற் பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
- தொழிற்பயிற்சி அதிகார சபை
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

இவை தவிர செய்திப் பத்திரிகை, வர்த்தமானிப் பத்திரிகை, இணையத்தளம் ஊடாகவும் தொழிற் கற்கைநெறிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## 6.4 தொழிலொன்றுக்குத் தேவையான தகைமையும் அனுபவமும்

தொழிலொன்றினைச் செய்வதற்குத் தகைமை மாத்திரம் போதுமானதன்று. அதற்கான அனுபவம் இருப்பதும் அவசியமாகும். விசேடமாக வைத்தியர், சட்டத்தரணி ஆகிய தொழில்களைப் புரிவதற்கு முன்னர் தேவையான சேவை முன் பயிற்சிகளைப் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

பாடசாலை மாணவர்களாகிய நீங்கள் உங்களது எதிர்காலத் தொழில் எதிர்பார்ப்பு களுக்கேற்ப பாடங்களை அல்லது பாடத்துறைகளைத் தெரிவுசெய்து கொள்வது மிக முக்கியமாகும். பாடங்களைத் தெரிவுசெய்தல் தொடர்பாக க.பொ. த (சா / த) சித்தியடைந்த மாணவர்களுக்காக நடைபெற்ற செயலமர்வின்போது விரிவுரையாளர் முன்வைத்த கருத்தின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

''நீங்கள் தற்போது தயாராகுவது இரண்டாவது தடையை தாண்டுவதற்காகும். எனினும், அதற்குப் பொருத்தமான பாடங்கள் அல்லது பாடப் பிரிவுகளை தெரிவு செய்வது மிக முக்கியம். எதிர்காலத்தில் செய்யப்போகும் தொழிலைப் பற்றி முதலில் சிந்தியுங்கள். உதாரணமாக வங்கித்துறையைத் தெரிவுசெய்வதற்கு விருப்புடை யவரெனில் நீங்கள் வணிகப் பாடப் பிரிவையல்லவா தெரிவுசெய்ய வேண்டும்''

மேலே ஒரு விடயம் தொடர்பாக மாத்திரம் கூறப்பட்டுள்ளது. அதன் கருத்து பாடத்துறையொன்றைத் தெரிவுசெய்யும் பொழுது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் என்ன? என்பது பற்றி மாத்திரம் குறிப்பிட்டுள்ளமை.

- தெரிவுசெய்யும் பாடம் / பாடத்துறை தனது இயலுமை, திறமையோடு பொருத்த மானதாக இருக்குமா?
- இப்பாடத்துறையினால் எதிர்காலத்தில் கற்கக்கூடிய வேறு கல்வி மற்றும் பயிற்சிப் பாடநெறிகள் எவை?
- தெரிவுசெய்த பாடத்துறையின் மூலம் உயர்கல்விக்கான வாய்ப்பு உண்டா?
- தெரிவுசெய்த பாடத்துறையை தனது பாடசாலையில் கற்க முடியுமா?
- தெரிவுசெய்த பாடத்துறைக்கு ஏற்ப எதிர்காலத்தில் காணப்படக்கூடிய தொழில் வாய்ப்புகள் யாவை?

இவ் வினாக்களுக்கு நீங்கள் சாதகமான பதிலை வழங்க முடியுமாயின் எதிர்காலத்தில் வெற்றிகரமாக வேலை உலகினுள் பிரவேசிக்கலாம். தற்போது அநேக மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கான பாடத்துறையைத் தெரிவு செய்வதானது பெற்றோரின் விருப்பு, நண்பர்கள் அப்பாடத்தினைக் கற்கிறார்கள், நகர்ப்புற பாடசாலையொன்றுக்கு செல்லலாம் போன்ற காரணிகள் என்பது உங்களுக்கு தெளிவாகும். இவ்வாறான காரணிகளினால் பரீட்சையில் சித்தியடையத் தவறி வாழ்க்கையில் வெற்றிகரமாக முகங்கொடுக்க இயலாத அநேகர் சமூகத்தில் இருக்கின்றார்கள் என்பதை உங்களால் அவதானிக்க முடிகின்றதல்லவா?

- **தொழில் தொடர்பாக வகுப்பறையில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் உரையாடலை வாசித்துப் பாருங்கள்**

**நிமல்** : தொழில் / வாண்மைக்காக பூர்த்திசெய்து கொள்ள வேண்டிய வேறு விடயங்கள் உண்டா டீச்சர்.

**ஆசிரியர் :** ஆம் நிமால், பாடத்துறை மாத்திரமன்றி மேலும் நிறைய விடயங்கள் இருக்கின்றன. அதிலொன்றுதான் கல்விக் காலத்திற்கேற்ற உள மற்றும் உடல்சார் தேவை.

**நஸ்ரின் :** அவ்வாறென்றால் என்ன?

**ஆசிரியர் :** ஒவ்வொரு தொழில் தொடர்பாகவும் விசேட கல்வித் தகைமை உண்டு. இவ் அட்டவணையைக் கவனியுங்கள்.

| தொழில் / வாண்மை | கல்வித் தகைமை |
|---|---|
| ஆசிரியர் தொழில் | க.பொ.த (உ/தர) பட்டப்படிப்பில் சித்தியடைந்திருத்தல் |
| வழக்கறிஞர் தொழில் | சட்டத்துறைப் பட்டம் |
| வைத்தியர் தொழில் | மருத்துவப் பட்டம் |
| தாதியியல் | க.பொ.த (உ/தர) விஞ்ஞான பாடப் பிரிவில் சித்திய டைந்திருத்தல் |
| கணக்கியல் துறை | AAT, CIMA, ACCA போன்ற பரீட்சைகளில் சித்தியடைந் திருத்தல் |

**ஆசிரியர் :** இப்போது விளங்குகிறதா?

**நிஷா :** ஆம் டீச்சர். காலத்திற்கேற்ற தேவை என்றால் என்ன?

**ஆசிரியர் :** ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான தகைமைகள் காலத்துக்குக் காலம் வேறுபடலாம். எழுதுவினைஞர் தொழிலுக்கு க.பொ.த (உ/தர) சித்திய டைந்திருத்தல் போதுமானதாகும். எனினும், எதிர்காலத்தில் இதற்கு பதிலாகப் பட்டப் படிப்பு அவசியம் என்றும் கேட்கப்படலாம்.

**தனுஷன் :** அவ்வாறென்றால் உடல், உளசார் தேவை என்று கூறுவது என்ன?

**ஆசிரியர் :** ஆம், அதாவது தொழிலொன்றைச் செய்வதாயின் சிறந்த உள நலமும், உடற் சுகாதாரமும் இருக்க வேண்டும். உதாரணமாக உடல் நலக் குறைபாடு எனின் சாரதி போன்ற தொழில்களைச் செய்ய முடியாதல்லவா?

நல்லது, இப்போது உங்களுக்கு விளங்கியது தானே? அவ்வாறென்றால் இன்று வீட்டுக்குச் சென்ற பின்னர் பத்திரிகைகள் சிலவற்றை எடுத்து அதில் காணப்படும் பதவி வெற்றிடங்களை பரிசீலனை செய்து சுமார் ஐந்து தொழில்களுக்கான கல்வித் தகைமைகள் என்ன என்பதை குறித்துக் கொள்ளவும்.

**தனுஷன் :** அவ்வாறெனின் தொழில்களுக்கு விசேட தேர்ச்சிகளும் தேவையா டீச்சர்.

**ஆசிரியர் :** ஆம் மகனே! ஆசிரியராவதற்கு விசேட பயிற்சி தேவை. அதற்காக பட்டப் படிப்பு போன்று தொழிற்கைமையும் தேவை. உதாரணமாக தேசிய கல்வியல் கல்லூரிப் பயிற்சி, அல்லது கற்பித்தலில் தேசிய டிப்ளோமா நெறியைக் குறிப்பிடலாம். சாரதி தொழிலுக்கும் இத்தகைய விசேட தேர்ச்சிகள் தேவை. ஆகவே தான் வாகனங்கள் திருத்துதல், வீட்டு மின் இணைப்பு, வைத்தியர் தொழில் போன்றவற்றிற்குக் செயன்முறைச் செயற்பாடுகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன.

கடந்த காலங்களில் தொழிற் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் இலகுவான முறை குடும்ப அங்கத்தவர் மூலமாக பெற்றுக் கொள்ளுதலாகும். உதாரணமாக கமத்தொழில் செய்தல், மீன்பிடி நடவடிக்கைகள், தச்சுவேலை போன்றவற்றை குறிப்பிடலாம்.



தந்தையுடன் தச்சுவேலை செய்யும் சிறுவன்



தந்தையுடன் கமத்தொழில் செய்யும் சிறுவன்

உங்களுக்கும் இத்தகைய அனுபவங்கள் கிடைத்திருக்குமல்லவா? குடும்ப அங்கத் தவர்கள் மேற்கொள்ளும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு உங்களுக்கும் இவ்வாறான தொழில் அறிவு மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளலாம். பெற்றோர்

செய்யும் தொழிலையே தானும் செய்யவேண்டும் என்பது இதன் கருத்தல்ல. எனினும் தொழிலொன்றைச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சி போன்று பெறுமதிமிக்க அனுபவம் என்பவற்றையும் இதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே தனக்கும் ஏதாவதொன்றைச் செய்யமுடியும் என்ற தன்னம்பிக்கை உருவாகும்.

### செயற்பாடு 6.4



*செய்திப் பத்திரிகை, வர்த்தமானிப் பத்திரிகை, இணையத்தளம் போன்றவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள தொழில்வாய்ப்பு வெற்றிடங்களை பரிசீலனை செய்து கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.*

| தொழில் | தேவையான கல்வித் தகைமை | பயிற்சித் தகைமையை வழங்கும் நிறுவனம் | அதற்கான பாடநெறிகள் |
|---|---|---|---|
| **உ+ம்**<br>*1 மின் தொழினுட் பவியலாளர்* | *க.பொ.த (சா / தர) சித்தி, கைத்தொழில் நுட்ப பாடமொன்றை பயின்றிருத்தல்* | *தொழினுட்பக் கல்லூரி* | *மின் தொழில் நுட்பவியல்* |
| 2 ...................... | ..................................... | ......................................... | ............................... |
| 3 ...................... | ..................................... | ......................................... | ............................... |

## 6.5 தொழில் தொடர்பான விளம்பரங்கள் பிரசுரிக்கப்படல்

செய்திப் பத்திரிகை, வர்த்தமானி அறிவித்தல்கள், இணையத்தளம், வலைத்தளம் ஆகிய தொடர்பாடல் ஊடகங்கள் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. இன்னும் விளம்பரப் பதாகை அறிவித்தல், துண்டுப்பிரசுரம் என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

**தேசிய வைத்திய விஞ்ஞான நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம், ராஜகிரிய**

**கணினித் தொழினுட்ப ஆலோசகர் தரம் II பதவிக்கு, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

தகைமைகள்

I *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணினியியல் / கணினிப் பொறியியல் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப்பட்டப் பாடநெறியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் தர சித்தியை பெற்றிருத்தல்.*

*அல்லது*

II (a) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணினியியல் / கணினிப் பொறியியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் மற்றும் கணினி விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்றிருத்தல்.*

(b) *கணினித் துறையில் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

III(a) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானமாணிப் பட்டத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் மற்றும் கணினியியலை ஒரு பாடமாகக் கற்றிருத்தல் அல்லது கணினியியல் ஒரு பாடமாக தொடராத பட்சத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் தர சித்தியைப் பெற்றிருத்தல்*

*அத்துடன்*

(b) *கணனித் துறையில் இரு வருட அனுபவத்தை பெற்றிருத்தல்*

IV *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணினியியலை பாடத்துறைகளிலொன்றாக தொடர்ந்திராத சந்தர்ப்பத்தில் விஞ்ஞானமாணிப் பாடத்தில் சாதாரண சித்தியை பெற்றிருத்தல்.*

*அத்துடன்*

*கணினித் துறையில் மூன்று வருட அனுபவத்தை பெற்றிருத்தல்*

*அல்லது*

V *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட யாதாயினுமொரு பட்டம் மற்றும் கணினியியல் / கணினித் தொழினுட்பம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்*

*மற்றும்*

*கணினித் துறையில் ஒரு வருட அனுபவத்தை பெற்றிருத்தல்*

*வயது - 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்*

*மாதாந்த வேதன அளவுத்திட்டம் -* UAS 2 II - 26,020 - 3X 645 - 29, 955 (EB 28,000 - 14X 645 - 37, 630 *(மாதாந்தம்)*

*தேர்ந்தெடுக்கப்படும் முறை - எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியன மூலமாக*

*வர்த்தகமானி அறிவித்தலொன்று*


சர்வதேச நிறுவனமொன்றுடன் இணைந்து இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ள பாரிய செயற்திட்டமொன்றில் பங்குதாரராகி உயர்ந்த வேதனத்துடன் கூடிய தொழில் வாய்ப்பொன்றை பெற்றுக் கொள்வதற்காக

100% தொழில் உத்தரவாதத்துடன் நடாத்தப்படும் மூன்று மாத கால பயிற்சியுடனான வழிகாட்டல் பாடநெறி சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கிய இலகுவான தொழிநுட்ப பாடப் பயிற்சி வழங்கப்படும்

க.பொ.த (சா / த) வரை கற்றிருத்தல் ஆகக் கூடிய கல்வித் தரமாக கவனத்திற் கொள்ளப்படும்

பாடநெறியை தொடர்வதனால் காலம், சிரமம், பணம் என்பவற்றை விரயம் செய்யாது இன்றே நீங்களும் விண்ணப்பியுங்கள்

இப்பாடநெறியை முறையாக பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்காகவும் ரூபா 20,000 ற்கும் ரூபா 50,000 இற்கும் இடைப்பட்ட வேதனம், அத்துடன் தொழில்வாய்ப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும்.

விசேட திறமைகள் காட்டுபவர்களுக்கு சலுகைகளுடன் கூடிய பதவி வழங்கப்படும்

பாடநெறிக் கட்டணம் ரூபா 10, 000 ஆகும். பதிவுக் கட்டணம் ரூபா 500 செலுத்தி பாடநெறியைத் தொடரலாம். பாடநெறிக் கட்டணம் 50% ஐ மாத்திரம் மாதாந்தம் தவணைக் கட்டணமாக செலுத்தலாம்.

மிகுதியை உங்களது முதலாவது சம்பளத்தை பெற்றுக் கொண்ட பின்னர் செலுத்தலாம்.

துண்டுப் பிரசுரம்



நாட்டில் தேசிய பாடசாலைகளில் நிலவும் க.பொ.த (உ/த) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை 3-I (அ) தரத்திற்கு பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான போட்டி பரீட்சை - 2017

**Competitive Examination for the Recruitment of Graduates to Grade 3 - I (a) of Sri Lanka Teachers' Service for the Vacancies Existing in G. C. E. (A/L) Sinhala, Tamil and English Medium Teaching in National Schools – 2017**

வலைதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள தொழில் வெற்றிடம்


**தேசிய மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரண**

(மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு)

**வெற்றிடம்**

இவ் அதிகார சபையின் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கான அறிவித்தல் 2015.05.15 ம் திகதி முதல் www-ngja.gov.lk ஆகிய எமது வலையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது

1. புவிச்சரிதவியலாளர் (JM) 01 பதவி
2. சட்ட அதிகாரி (JM) 02 பதவி
3. செயற்பாட்டு மற்றும் பிரதேச அபிவிருத்தி உதவியாளர் (MA - 5 - I) -5 பதவி
4. அபிவிருத்தி உதவியாளர் (MA - 5 - I) - 01 பதவி

தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி
தேசிய மாணிக்கம் மற்றும் ஆபரண அதிகார சபை
இலக்கம் 25, கோல்பேஸ் டெரஸ், கொழும்பு -03
தொலை பேசி இல - 011 2329296 / 235364 / 239064508
வலைதளம் - www. ngja.gov.lk

பத்திரிகை அறிவித்தல்

மேற்குறிப்பிட்டுள்ள தொழில் வெற்றிட அறிவித்தல் தொடர்பான விபரங்களை பிரதானமாக மூன்று முறையில் குறிப்பிட்டுக் காட்டலாம்.

- சுய விபரக் கோவை மூலம்
- தொழில் விண்ணப்பப் படிவம் மூலம்
- கடிதமொன்றின் மூலம்

தொழிலொன்றுக்காக விண்ணப்பிக்கும்போது சுயவிபரக்கோவையொன்று சமர்ப்பிக் கப்படும். இது ஆங்கிலத்தில் **Curriculum Vitae** என்று குறிப்பிடப்படுகின்றது. இலத்தீன் மொழியிலிருந்து பிறந்து வந்த இச்சொல்லுக்கு சுய அனுபவம் தொடர்பான அறிக்கை என்ற கருத்து கொள்ளப்படுகின்றது. தனது முழுமையான சுய அறிக்கை என சுய விபரக் கோவையைக் குறிப்பிடலாம்.

சுயவிபரக் கோவையில் உங்களுடைய சுய விபரத்தை கவர்ச்சியாகவும், சிறப்பான தாயும் தயாரித்துக்கொள்வது முக்கியமாகும். அது மிக நீண்டதாக இருக்காமல் தேவையான சகல விடயங்களையும் உள்ளடக்க வேண்டியதும் அவசியமாகும். சிறந்த

சுயவிபரக் கோவையொன்றின் முக்கியத்துவம் பற்றி பிரய்ட் மற்றும் ஏர்ள் (**Bright & Earl, 2001**) ஆகியோர் பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

- தற்போது சுயவிபரக் கோவை சகலருக்கும் தேவையானதொன்றாக இருத்தல்
- உங்களைப் பற்றிய முழுமையான எண்ணக்கருவொன்றை உங்களது சுயவிபரக் கோவை மூலம் அறிந்து கொள்ள முடியுமாயிருத்தல்
- உங்களது நோக்கமாக இருக்கவேண்டிய சுயவிபரக் கோவையை பார்ப்பவரது மனம் கவரக்கூடியவாறு அமைத்துக் கொள்வதாகும்.
- தற்போதைய தொழிற்சந்தையில் போட்டித்தன்மை காணப்படல்
- உங்களுக்கு இருக்கின்ற கால அவகாசம் மற்றும் தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஏற்படுகின்ற இடர்பாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியுமாயிருத்தல்

க.ச. செல்வகுமார்
இல. 10 பூந்தோட்ட வீதி
வவுனியா,
தொ. இல. 0112555762
மின்னஞ்சல் - ghijsa@gmail.com

குறிக்கோள் :

1. கல்வித் தகமை

க.பொ. த. (உ/தரப்) பரீட்சை (2009)

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

2. க.பொ.த (ச/தரப்) பரீட்சை (2006)

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

தொழில் / வேறு தகைமைகள்
1.
2.
3.

புறக்கீர்த்திச் செயற்பாடுகள்
1.
2.
3.

தனிப்பட்ட விபரங்கள்
முழுப் பெயர் :
முதலெழுத்துக்களுடன் பெயர் :
முகவரி :
பிறந்த திகதி :
ஆண் / பெண் :
விவாகமானவர் / விவாகமாகாதவர் :
இனம் :
பாடசாலை :
தகவல் பெறக்கூடிய இருவர் (உறவினரல்லாத)
1. 2.

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

................. .................
கையொப்பம் திகதி

சுயவிபரக் கோவை யொன்றில் உள்ளடங்கக்கூடிய விபரங்கள் சிலவற்றைப் பற்றிய உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

### தனிப்பட்ட தகவல்கள்

பெயர், முகவரி, நகரம் / நாடு, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, இனம், பால் (ஆண், பெண்), விவாகநிலை, பிள்ளைகள் பற்றிய விபரம் போன்ற தகவல்களாகும்.

### கல்வித் தகைமைகள்

பாடசாலைக் கல்வி, உயர்கல்வியை பெற்றுக் கொண்ட நிறுவனம், பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள் (நிறுவனம், வருடம், சான்றிதழில் தகைமை என்பன)

### தொழிற் தகைமைகள் (குறித்த அனுபவம்)

விண்ணப்பிக்கும் தொழில் / வாண்மைக்குரிய அனுபவம், விசேட திறமை என்பன

### முன்னர் கடமையாற்றிய தொழில் தொடர்பான விபரம்

இதற்கு முன்னர் கடமையாற்றியிருப்பின் கடமை புரிந்த நிறுவனம், தொழில் கடமையாற்றிய காலம், வகித்த பதவி, பெற்றுக்கொண்ட பயிற்சிகள், பெற்றுக் கொண்ட புலமைப் பரிசில் மற்றும் வெற்றிகள் போன்றன

### திறன்கள்

உதாரணமாக விளையாட்டுத் திறன்கள், அழகியல் திறன்கள், ஆவணப் பதிவேடுகளிலுள்ள தேர்ச்சி, மொழிப் பிரயோகத்தில் தேர்ச்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### பெற்றுக் கொண்ட பரிசில்கள்

உங்களிடம் காணப்படும் விசேட திறமைகளின் அடிப்படையில் பரிசில்கள் வெற்றிகள் பெற்றிருப்பின் (விசேட பதக்கம், காப்புரிமைப் பத்திரம் என்பன)

### வெளியீடு

உங்களால் வெளியிடப்பட்டுள்ள எழுத்தாக்கம், நூல்கள், ஆய்வு அறிக்கை போன்றன இருப்பின்,

### தொழில் அங்கத்துவம்

நீங்கள் தொழில்சார்ந்த வேறு அமைப்புகளில் பதவி வகித்திருந்தால் அது தொடர்பான விபரங்கள், அவ்வாறே சமூக அபிவிருத்தி தொடர்பாக வகித்த பதவிகள், அங்கத்துவம் தொடர்பான விபரங்கள்

### பண்பு சார்ந்தவை

ஒப்படைக்கப்பட்ட கருமங்களை அர்ப்பணிப்புடன் செய்தல், பொறுமை, நட்புடைமை, பரீட்சிப்புத் தன்மை போன்றன இதற்கு உதாரணங்களாகும்.

### பொழுதுபோக்கும் விருப்புகளும்

இவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுக் கூறலாம்.

### தன்னைப் பற்றிய விபரங்களை விசாரித்தறியக் கூடிய நபர்கள்

பொதுவாக தமது உறவினரல்லாத இருவரின் விபரங்களை வழங்குவது அவசிய மாகும். அவர்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மற்றும் பதவி போன்றவற்றை குறிப்பிடல் வேண்டும்.


**சிறப்பான சுயவிபரக் கோவையொன்றினைத் தயாரிப்போம்**

வேலை உலகில் தொழிலில் இணைவதற்கு போட்டி நிலவுவதைக் காணலாம். ஆகையால் உங்களது சுயவிபரக் கோவை மற்றையவர்களைக் காட்டிலும் சிறப்பானதாக இருத்தல் வேண்டும். அத்தகைய சிறப்பான சுயவிபரக் கோவையொன்றினைத் தயாரிக் கையில் கவனத்திற்கொள்ள வேண்டிய சில விடயங்கள் வரிப்படம் மூலம் காட்டப் பட்டுள்ளது.



- தேவையான தகவல்களை சரியாகவும், தெளிவாகவும் முன்வைத்தல்
- தெளிவான புகைப்படமொன்றை இணைத்திருத்தல்
- விசேட, ஆற்றல், திறன் தொடர்பான குறிப்புகள் காணப்படல்
- தனது சகல விபரங்களையும் முன்வைத்தல்
- விண்ணப்பிக்கும் தொழிலுக்கான தொழிற்தகைமை, அனுபவம் போன்றவற்றை குறிப்பிடுதல்
- விண்ணப்பிக்கும் தொழிலுக்கான அனுபவத்தைக் குறிப்பிடுதல்
- தூய்மையானதாக இருத்தல்
- கவர்ச்சியான முடிப்பைக் கொண்டிருத்தல்
- விடயங்களை மிக எளிமையாகவும், சுருக்கமாகவும் முன்வைத்தல்
- உண்மையான தகவல்களை மாத்திரம் உள்ளடக்குதல்

**செயற்பாடு 6.5**



உங்களது விபரங்களை உள்ளடக்கிய சுயவிபரக் கோவையொன்றை தயாரிக்குக. நீங்கள் முன்னர் தயாரித்த தனிப்பட்ட கோவையில் அதனை வைத்துப் பேணுக.

## 6.6 தொழில் விண்ணப்பப் படிவமொன்றைச் சரியாகப் பூரணப்படுத்தல்

தரம் 09ல் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரினது உரையாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**சமீர் :** நாதனுக்கு ஒரு விடயம் தெரியுமா? எமது அண்ணா அடிக்கடி தொழிலுக்கு விண்ணப்பம் நிரப்புவார்.

**நாதன் :** ஐயோ! இது என்ன? எங்கட அண்ணாவும் இப்படித்தான். இன்னும் ஒரு நேர்முகப்பரீட்சைக்காவது அழைப்புக் கடிதம் வரவில்லை.

**சமீர்** : விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வது சரியானதா என்பது தெரியவில்லை என்று எங்கட அண்ணா கூறுவார். அதனால் தான் நேர்முகப் பரீட்சைக்கும் அழைப்பதில்லையாம்.

**சமீர்** : எங்கட ஆசிரியர் வருகிறார். விண்ணப்பமொன்றைப் பூர்த்தி செய்வது பற்றி இன்று அவரிடம் கேட்போம்.

- **தொழிலுக்கான விண்ணப்பப் படிவமொன்றினை பூரணப்படுத்தும் முறை**

தொழிலொன்றிற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் சிலவேளை அறிவுறுத்தல்களுடன் வழங்கப்படுகின்றன. சில விண்ணப்பப்படிவங்களை விற்பனை நிலையங்களிலிருந்து பெற்றக் கொள்ள முடியும். இவ்வாறே சில தொழில்வாய்ப்புக்கான அறிவுறுத்தல்களில் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டிருக்கும். அத்தகைய சந்தர்ப்பத்தில் தொழிலுக்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் செவ்வை பார்த்ததன் பிரதியொன்றைத் தயாரித்துக் கொள்வது அவசியம். அவ்வாறு முதன் முதலாக செய்து செவ்வை பார்த்தல் பிரதி யொன்றை தயாரிப்பதன் முக்கியத்துவம் என்ன? என்பதை அறிந்து கொள்வோம்.

**விண்ணப்பப் படிவமொன்றின் பிரதியொன்றை பூரணப்படுத்துவதின் முக்கியத்துவம்**

- விண்ணப்படிவத்தின் பிரதியொன்றை தனக்கு வைத்துக் கொள்ள முடியுமாக இருத்தல்
- தொழில்விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும் முறை தொடர்பாகவும் தரப்பட்டுள்ள அளவி டைகள், அது பற்றியதான அறிவுறுத்தல்களையும் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியுமாயிருத்தல்
- குறிப்பிடப்பட வேண்டிய அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்துக் கொள்ளலாம்.
- ஒரே தடவையில் எழுதும்போது ஏற்படக்கூடிய தவறுகளை தவிர்த்துக் கொள்ளலாம்
- மிகவும் சரியான தொழில் விண்ணப்பப்படிவ மொன்றை நேர்த்தியான முடிப்புடன் ஒழுங்கு படுத்திக் கொள்ள முடியுமாயிருத்தல்
- பூரணப்படுத்திய விண்ணப் பத்தை பிறிதொரு வரிடம் கொடுத்து சரிபார்த்துக் கொள்ளலாம்.
- பொருத்தமற்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அவற்றை நீக்கிக் கொள்ளலாம்

ஜா எல பிரதேச சபையின் தற்காலிக சாரதிப் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :

2.முதலெழுத்துக்களால் குறிக்கப்படும்பெயர் :

3. நிரந்தர முகவரி :

4. நிரந்தர வதிவிட மாவட்டம் :

5. ஆண் / பெண் :

6. பிறந்த திகதி : வருடம் : மாதம் : திகதி :

7. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குரிய வயது
   வருடம் : மாதம் : திகதி :

8. இலங்கைப் பிரஜையாக இருப்பது பரம்பரையாகவா? பதிவுமுறையிலா போன்ற விபரம் :

9. விவாகம் பற்றிய விபரம் விவாகமானவர் / விவாகமாகாதவர் :

10. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

11. தொலைபேசி இலக்கம் :

12. கல்வித் தகைமை :

13. தொழில் மற்றும் வேறு தகைமைகள் :

14. சேவை அனுபவம் :

15. யாதாயினும் குற்றச் செயல் தொடர்பாக நீதிமன்றில் குற்றவாளியாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தால் அக்குற்றத்தற்கான தண்டனை தொடர்பாக விபரிக்குக.

இவ்விண்ணப்பப் படிவத்தில் தன்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தாள் உறுதியளிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் தவறானதாக வழங்கப்பட்டிருப்பின் அல்லது இப்பதவிக்கு தெரிவு செய்வதற்கு முன்னர் அதுபற்றி தெரிய வருமிடத்து நான் இதற்கு தகுதியற்றவன் என்றும் குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டால் உடனடியாக சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் இதுபற்றி நான் நன்கு அறிவேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

........................... ..............................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

சுயவிபரக் கோவை மற்றும் தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பப்படிவமொன்றை மேலெழுந்தவாரியாக பார்க்கும்போது ஒரே மாதிரியாக இருப்பது போன்று காணப் பட்டாலும் விண்ணப்பப் படிவம் சுயவிபரக் கோவையினின்றும் வேறுபட்டிருப்பதை இவ்விண்ணப்பப் படிவத்தின்மூலம் தெளிவாக விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.

விண்ணப்பப் படிவமொன்றினைப் பூரணப்படுத்தும்போது முதலாவதாக நிழற்பிரதியொன்றை எடுத்து அதனைப் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பத்தை மிகவும் சரியாகப் பூர்த்தி செய்வதற்கு நிழற்பிரதி பயனுள்ளதாக இருப்பதுடன் அதற்காக செலவிடும் காலமும் பயனுள்ளதாகும்.

- **விண்ணப்பப் படிவமொன்றினைப் பூரணப்படுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள்**

**விண்ணப்பப் படிவமொன்றினை பூரணப்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்**

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தலை சரியாகப் பின்பற்றுதல்
- விண்ணப்பப்படிவத்தின் சகல விபரங்களையும் பூரணப் படுத்தல்
- தரப்பட்டுள்ள இடை வெளி அல்லது வரியை மாத்திரம் உபயோகித்தல்
- இறுதித் திகதி வரை தாமதியாது அதற்கு முன்னதாக விண்ணப் பித்தல்
- விண்ணப்படிவத்தைப் பூரணப்படுத்துற்கு முன்னர் நிழற்பிரதியொன்றைப் பெற்று அப்பிரதியை பூரணப்படுத் துதல்
- வினவப்பட்டுள்ளவற்றுக்கு சரியாக தகவல்களை வழங்குதல்
- பொருத்தமற்றவைக்கு இடைவெளி விடுவதற்குப் பதிலாக பொருத்தமில்லை / இல்லை என எழுதுதல்
- தெளிவான கையெழுத்தில் அல்லது கணினிப்பதிப்பிடல்

தாம் அனுப்பிய விண்ணப்பப் பத்திரத்தின் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக் கொள்வது, விண்ணப்பதாரிக்குரிய பிரசுரத்தின் பகுதி, பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் பற்றுச் சீட்டு என்பவற்றை வைத்திருப்பதானது யாதாயினும் ஒரு சந்தர்ப்பத்தில் அவை அவசியமாகும் நிலை ஏற்படலாம்

தொழிலொன்றுக்காக விண்ணப்பிக்கும்போது சுயவிபரக் கோவையொன்றையும் விண்ணப்பத்துடன் இணைந்து அனுப்ப நேரிடலாம். அவ்வாறே விண்ணப்பத்துடன் முகப்புக் கடிதமொன்றையும் இணைந்து அனுப்புதல் நல்லதாகும்.

## 6.7 தொழில் வெற்றிடமொன்றுக்கு கடிதம் எழுதுதல்

சில சந்தர்ப்பங்களில் தொழிலுக்கு விண்ணப்பிக்கும்போது சுயவிபரக் கோவையொன்றை அல்லது விண்ணப்பப் படிவமொன்றை அனுப்புவதற்குப் பதிலாக கடிதமொன்றின் மூலமாகவும் அதனைச் செய்யலாம்.

விண்ணப்பப் படிவத்தில் அல்லது சுயவிபரக் கோவையில் குறிப்பிடப்பட வேண்டிய தகவல்களை மீண்டும் நினைவுபடுத்துக. அத்தகவல்களின் சுருக்கத்தை கடிதம் எழுதும்போது உள்ளடக்க நல்லதாகும்.

நீங்கள் எழுதும் கடிதத்துக்கு ஏற்ப தொழில் வழங்குநர் உங்களைப் பற்றிய முழு மையான கணிப்பீடொன்றைச் செய்வதால் சிறந்ததாகவும், மனம் கவரும் வகையிலும் கடிதத்தை எழுதுதல் முக்கியமாகும்.

எம். பூலோகநாதன்
இல 36
பிரதான வீதி
ஜா எல,
2017.08.28

கௌரவ தலைவர்,
ஜா எல பிரதேச சபை,
கந்தானை.

ஐயா,

தற்காலிக சாரதிப் பதவிக்கு சேர்ந்துக் கொள்ளல்

குறித்த விடயம் தொடர்பாக 2017. 07. 29ம் திகதியுடைய பத்திரிகை விளம்பரம் தொடர்பானதாகும். அவ் அறிவித்தலுக்கேற்ப தற்காலிக சாரதிப் பதவிக்காக நானும் விண்ணப்பிப்பதற்கு விரும்புகிறேன். க.பொ.த (சா / தரம்) வரையில் கல்வி கற்றுள்ள நான் பார வாகனச் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுள்ளேன். அவ்வாறே சாரதியாக உதயகிரி நிறுவனத்தில் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலம் சேவை புரிந்துள்ளேன். அத்தோடு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த உடற்தகுதியையும் கொண்டுளேன் என்பதை அறியத் தருகின்றேன். தகைமை மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

ஆகவே குறித்த பதவிக்கு தன்னை சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்வதுடன், அவ்வாறு சேர்த்துக் கொள்ளுமிடத்து அர்ப்பணிப்புடன் சேவையாற்ற தயாராக இருக்கிறேன் என்பதையும் அறியத் தருகின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்
உண்மையுள்ள
....................
எம். பூலோகநாதன்

தொழில் தொடர்பாக கடிதம் எழுதும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. தமிழ்ப் பாடத்தில் அலுவலகக் கடிதம் எழுதுவது பற்றி கற்றுக் கொண்ட விடயங்கள் உங்களுக்குப் பயனுடையதாக இருக்கும்.

- **விண்ணப்பிப்பது தொடர்பாக எழுதும் கடிதத்தின் முற்குறிப்பைத் தயாரித்தலின் முக்கியத்துவம்**

  ★ உள்ளடக்கத்தை முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தி குறிப்பிட முடியுமாயிருத்தல்

  உ+ம் - ஆரம்பத்தில் முன்வைக்க வேண்டிய விடயங்களை ஆரம்பித்தலும், அதற்கடுத்து முன்வைக்க வேண்டிய விடயங்களை அதற்கடுத்ததாகவும் முன்வைத்தல்

  ★ தேவையான சகல தகவல்களையும் உட்படுத்த முடியுமாக இருத்தல்

  உ+ம் - கல்வித் தகைமை, அனுபவம், விருப்பு, பொழுதுபோக்கு போன்றன

  ★ முக்கிய தகவல்களை ஒழுங்குமுறையாக தயாரிப்பதற்கு முடியுமாயிருத்தல்

  ★ கடிதத்தை சரியாக எழுத முடியுமாயிருத்தல்

- **உள்ளடக்கத்தை முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தும் முறை உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.**

  உ+ம் - கடிதத்தை அனுப்புபவர் பெயர், முகவரி, திகதி

  கடிதத்தை பெறுபவர், பெயர் / பதவி

  கடிதம் சேர வேண்டிய முகவரி

  கடிதத்தில் உள்ளடக்க வேண்டிய அடிப்படை விபரங்கள்

  ★ தொழில் வெற்றிடத்தை பிரசுரித்த பத்திரிகை / வர்த்தமானி ஆகியவற்றில் பிரசுரமாகியிருந்த திகதி

  ★ அறிவித்தலில் கேட்கப்பட்டிருந்த தகவல்கள்

  ★ அறிவித்தலில் பிரசுரிக்கப்படும் சகல விடயங்கள் தொடர்பான தகவல்களையும் வழங்குதல்

  உ+ம் - தொழிற் திறமைகள் / பெற்றுக்கொண்ட வெற்றிகள்

  ★ விபரங்களை முன்வைக்கும் முறை சிறப்பாக இருத்தல் வேண்டும்.

- **ஒவ்வொருவரினாலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் தனது விண்ணப்பம் சிறப்பானதாக இருப்பதற்குரிய தகவல்களை முன்வைத்தல்**

  தாம் பெற்றுள்ள உயர் தகைமை

  ★ தேசிய, சர்வதேச அல்லது வேறு மட்டங்களிலான வெற்றிகள்

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்பதாக வெற்றிடம் தொடர்பான ஆர்வத்தை வெளிப்படுத்தல்

தொழில் தொடர்பாக விண்ணப்பம் அனுப்புகின்றபோது விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதியும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். இறுதித் தினம் வரை தாமதியாது தொழில் விண்ணப்பத்தை விண்ணப்பிப்பது முக்கியமாகும். அவ்வாறு முக்கியத்துவம் பெறுவதற்கான பிரதான காரணிகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- ★ தபால் விநியோகத்தில் ஏற்படக்கூடிய காலதாமதங்களிலிருநது தவிர்ந்து கொள்வதற்கு
- ★ வெற்றிடம் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ள தொழில் வழங்குநருக்கு வசதியாக இருத்தல்
- ★ விண்ணப்பதாரி குறிப்பிட்ட பதவி தொடர்பாக காட்டியுள்ள ஆர்வ வெளிப் பாட்டை தொழில் வழங்குநருக்கு அறிந்து கொள்ளக் கூடியதாயிருத்தல்

தொழில் தொடர்பான அறிவித்தலில், குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பதாக கிடைக்கும் வகையில் உங்களது கடிதத்தை அனுப்புவது மிக முக்கியமாகும். அதனால் உங்களது ஆர்வ வெளிப்பாட்டை வெளிப்படுத்துவது மாத்திரமன்றி மற்றைய விண்ணப்பதாரிகளின் கடிதத்தைக் காட்டிலும் உங்களது கடிதம் கவன ஈர்ப்பு கொண்டதாக இருக்கும்.

**செயற்பாடு 6.6**



*அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் நிருமாண வேலைப்பகுதியில் கொத்தன் (மேசன்) வேலைக்கான வெற்றிடம் காணப்படுகிறது என்றும் அதுபற்றிய அனுபவம் உள்ளவர்கள் கடிதம் மூலம் விண்ணப்பிக்குமாறு வார இறுதிப் பத்திரிகையொன்றில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதற்காக விண்ணப்பிக்கும் கடிதமொன்றை வரைக.*

## 6.8 நேர்முகப் பரீட்சைக்கான திறன்களை விருத்தி செய்து கொள்ளல்

தொழிலொன்றுக்கு விண்ணப்பித்ததன் பின்னர் அடுத்து எதிர்பார்த்திருப்பது நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு கிடைக்கப்பெற்றால் அதற்கு சமுகமளித்தலாகும்.

நேர்முகப் பரீட்சை என்பது தொழில்வழங்குனரால் வெற்றிடமாகவுள்ள தொழிலுக்கு நீங்கள் தகுதியானவரா? இல்லையா? என்று பரீட்சிப்பதற்கு நடாத்தப்படும் வாய்மொழி மூலப் பரீட்சையாகும்.

- நேர்முகப்பரீட்சை நடைபெறும் வகைகள்

தொழிலொன்றுக்குத் தேர்ந்தெடுப்பதற்கு நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூன்று வகையாக நடாத்தப்படுகின்றது.

i. **தனிநபர் நேர்முகப்பரீட்சை (Face to face Interview)**



நிறுவனத்தின் தலைவர் தனியாக விண்ணப்பதாரியுடன் வாய்மொழிமூல வினாக்களை வினவுவார். அதிலும் தனியார் துறைகளில் அதன் உரிமையாளரினால் நடாத்தப்படும் வியாபாரங்கள், ஆடைத்தொழிற்சாலை போன்றவற்றுக்கு தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு இத்தகைய நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

ii. **குழுவொன்றின்மூலம் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை (Group Interview)**



அரச நிறுவனங்கள் மற்றும் பாரியளவிலான தனியார் நிறுவனங்களுக்காக தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது இத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும். பொதுவாக குழுவில் அங்கத்தவர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினர் இடம்பெறலாம். உயர் தரத்திலான தொழில்களுக்காகத் தெரிவு செய்யும்போது 5 பேர் கொண்ட நேர்முகப்பரீட்சைக் குழு காணப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.

iii. **செயன்முறை நேர்முகப் பரீட்சை (Practical Interview)**



சிலவேளை செயன்முறைத் திறன்கள் தேவைப்படுகின்ற தொழில்களுக்கு வாய்மூல பரீட்சைக்கு மேலதிகமாக செயன்முறைப் பரீட்சையும் நடைபெறும். விசேடமாக கணினி வழிகாட்டல், தொழினுட்பத்துறை, சாரதித் தொழில், சங்கீதம், நடனம் போன்ற தொழில்களுக்கு இத்தகைய செயன்முறை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

- **நேர்முகப் பரீட்சைக்கான திறன்களை விருத்திசெய்து கொள்வதன் முக்கியத்துவம்**

நேர்முகப் பரீட்சைக்காக நல்ல முன் ஆயத்தத்துடன் சமூகமளித்தல் அவசியம். ஏனெனில், ஒரே வகையான தொழிலுக்கு உங்களைப் போன்ற பலர் சமூகமளிக்கலாம். ஆகவே, அதில் வெற்றியீட்டுவது முக்கியமாகும். நீங்கள் சிறப்பான முறையிலே நேர்முகப்பரீட்சைக்கு முகங்கொடுத்து இருந்தால் தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள இயலுமாக இருப்பதுடன் இதற்கு சிறப்பான முறையிலே முகங்கொடுக்க முடியாது விட்டால் சிலவேளை தொழிலொன்றின்றி வாழ வேண்டிய ஒரு நிலை உருவாகலாம்.

வெற்றிகரமாக நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு முகங்கொடுப்பது பற்றி சார்ளி மார்ஷல்ஸ் (Charlie Marshalls 2016) அவர்களினால் முன்வைக்கப்பட்ட சில வழிமுறைகள்

- நேர்த்தியாக ஆடை அணிதல் வேண்டும். சாதாரண உடையொன்றுடன் செல்வது பொருத்தமல்ல. நீங்கள் அணிந்திருக்கும் ஆடையின் மூலம் ஆளுமையும், மனம் கவரும் தோற்றமும் காணப்படல் வேண்டும்.
- அத்துடன் சுயவிபரக் கோவையொன்று, குறிப்பேடொன்று, பேனையொன்று உட்பட அவசியமானதை எடுத்துச்செல்ல வேண்டும்.
- முன் ஆயத்த பயிற்சி ஒன்றை செய்து கொள்ள வேண்டும்.
- நேர்முகப் பரீட்சைக்கு செல்லும் நிறுவனம் தொடர்பான பரந்த அறிவைப் பெற்றுக் கொள்ளவும்.
- உரிய நேரத்திற்கு வேலை செய்யவும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் குறித்த நேரத்திற்கு முன்பதாக குறித்த இடத்திற்கு செல்லவும்.
- நேர்முகப் பரீட்சை நடாத்துபவர் அல்லது குழுவினருடன் தர்க்கித்தல் அல்லது விவாதித்தலில் ஈடுபட வேண்டாம்.
- கேட்கப்படுகின்ற வினாக்களுக்கு நேர்மையாகவும், சிறப்பாகவும், விவாதத் தன்மை அற்ற முறையில் பதில் வழங்குக.
- நேர்முகப் பரீட்சையின்போது பணிவையும், தன்னம்பிக்கையையும் வெளிக்காட் டுதல் வேண்டும்.

- உங்களைப் பற்றி அளவுக்கதிகமாக விவரிக்காதீர்கள். நீங்கள் நீங்களாகவே இருப்பதற்கு முயற்சியுங்கள்.
- நீங்கள் முன்னர் கடமையாற்றியிருப்பின் அது பற்றிய எதிர்மறையான தகவல்களைக் குறிப்பிடாதிருத்தல்.
- நேர்முகப் பரீட்சையில் உங்களது சைகைமொழியை (Body Language) சிறப்பாகப் பேணுக.

நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்கும்போது எந்தவொரு நபருக்கும் மனக் குழப்பம், பதற்றம் உண்டாவது இயல்பானதாகும். நல்ல முறையில் பயிற்சி பெறுவதனூடாக மனக் குழப்பத்தைக் கட்டுப்படுத்தி வெற்றிகரமாக நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்க முடியும்.

**செயற்பாடு 6.7**



வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாக்கி மாதிரி நேர்முகப் பரீட்சையொன்றின் வகிபங்கை நடித்துக் காட்டச் செய்யவும்.

## 6.9 நேர்முகப் பரீட்சையைச் சிறப்பாக எதிர்கொள்வதன் முக்கியத்துவம்

நேர்முகப் பரீட்சையின்போது உங்களைப் பற்றி உருவாக்கிக் கொண்ட பிரதிமை நீண்ட காலத்திற்கு பயன்படக்கூடியது. நீங்கள் எந்தத் தகைமையை உடையவராயினும் தொழிலுக்குத் தெரிவுசெய்தல் அல்லது நிராகரிக்கப்படுதல் என்பதானது தீர்மானிக் கப்படுவது நேர்முகப் பரீட்சையை எதிர் கொள்ளும் முறையில் அமைந்து காணப்படும்.

சிறப்பாக நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்ளும் முறை தொடர்பாக குடியியற் கல்வி பாடப் பொறுப்பாசிரியர் மாணவர் குழுவொன்றிற்கு வழங்கிய ஆலோசனைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**நிமலன்** : சேர், நாளைக்கு நேர்முகப் பரீட்சையொன்று இருக்கின்றது எனக் கூறி எனது அண்ணா பயந்து போயிருக்கிறார்.

**ஆசிரியர்** : பயப்பட வேண்டியதில்லை. நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்ளும் முறை பற்றி தெரிந்து கொண்டால் சரியாகிவிடும்.

**நசார்** : எவ்வாறு சேர்? எங்களுக்கும் சொல்லித் தாருங்களேன்.

**ஆசிரியர்** : முதலாவது கவனிக்க வேண்டியது எமது புறத்தோற்றம் பற்றியாகும்.

**நசார்** : புறத்தோற்றம் என்றால் என்ன சேர்?

**ஆசிரியர்** : நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும்போது எமது உடை, தலைமுடி அமைப்பு, ஒப்பனை (Make up) போன்றன புறத்தோற்றம் எனக் கொள்ளப்படும்.

**ராஜினி** : சேர், தேவைக்கதிகமாக ஒப்பனை பண்ணக் கூடாதல்லவா?

**ஆசிரியர்** : அதுதான் சரி ராஜினி. எளிமையாக, நளினமாக இருத்தல் வேண்டும். அப்போது தான் நேர்முகப் பரீட்சை குழுவிலுள்ளவர்களுக்கு விருப்பு உண்டாகும்.

**சிராஜ்** : சேர், இன்னும் முக்கியமான விடயங்கள் ஏதும் இருக்கின்றதா?

**ஆசிரியர்** : இருங்க நான் சொல்லித் தருகிறேன். இந்த சுவரொட்டியைப் பாருங்கள்.

- நேர்முகப் பரீட்சைக்கு ஆயத்தமாதல்

- **தனிப்பட்ட தோற்றம்**
  - தலைமுடி அமைப்பு
  - ஒப்பனை (Make up)
  - உடை

- **சைகை மொழி** (Body Language)
  - அமர்ந்திருக்கும் முறை
  - கண்தொடர்பு (eye contact)
  - முகபாவனை (facial expressions)
  - கைகளின் அசைவு (Use of hands)

- **கவனமும் ஆர்வமும்**
  - நேர்முகப் பரீட்சைக் குழுவினருடன் நேர்த் தொடர்பைப் பேணல்.
  - சிறப்பான முறையில் நேர்முகப் பரீட்சை குழுவினரின் கவனத்தை ஈர்க்கக் கூடிய வகையில் பயிற்சியெடுத்து ஆயத்தமாயிருத்தல்.
  - நேர்முகப் பரீட்சைக் குழுவினரால் வினவப்படும் வினாக்களுக்கு அவதானத்துடனும் நேரடியானதுமான பதில்களை வழங்க வேண்டும்.
  - கவனமாகவும், சோம்பேறித்தனமின்றியும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் முன் செல்லுதல்.

- **பேச்சு மொழிப் பயன்பாடு**
  - விளக்கமாகவும், தெளிவாகவும் நேர்முகப் பரீட்சைக் குழுவினர் செவிமடுக்கும் வகையில் கதைத்தல்.
  - சரியாகவும், கட்டுப்பாட்டுடனும், மரியாதையான முறையிலும் கதைக்க வேண்டும்.

- **மரியாதை பேணல்**
  - நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடத்திற்குப் பிரவேசிக்கும் பொழுது, அவ்விடத்திலிருந்து வெளியேறும் போதும் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.
  - மரியாதையாக விளித்தல், அமரும் போது எழுந்து செல்லும் போதும் மரியாதையை பேணல்.
  - நேர்முகப் பரீட்சைக் குழுவினர் கேட்கும் வினாக்களுக்கு மரியாதை யுடனும், கட்டுப்பாட்டுடனும் விடையளித்தல் / மரியாதையாகக் கதைத்தல்.
  - நேர்முகப் பரீட்சைக் குழு முன்னிலையில் மரியாதையுடன் நடந்து கொள்ளல்.

நேர்முகப் பரீட்சை என்பது போட்டிமிகு சந்தர்ப்பமாகும். சிலவேளை ஒரு தொழிலுக்கு பத்து அல்லது பதினைந்து பேர் கூடச் சமூகமளிக்கலாம். இங்கு ஏனையோரை விட அதிக பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் சிறந்த முறையில் நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்ள வேண்டும். உங்களிடம் எவ்வளவுதான் சான்றிதழ்கள் காணப்படினும் சில சந்தர்ப்பங்களில் உங்களை விடக் குறைந்த கல்வித் தகைமை உடையவரொருவர் நேர்முகப் பரீட்சையை சிறப்பாக எதிர்கொண்டதன் மூலம் அவருக்கு / அவளுக்கு அத்தொழில் கிடைத்திருக்கலாம்.

**செயற்பாடு 6.8**



''நேர்முகப் பரீட்சையொன்றினை வெற்றி கொள்வதாயின்'' என்ற தலைப்பின் கீழ் கட்டுரை எழுதுக.


## 6.10 நேரத்தை சீராக முகாமை செய்தல்

நேர்முகத் தேர்வொன்றில் சித்திபெற்றதன் பின்னர் உங்களுக்கு தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். தொழிலின் முன்னேற்றத்திற்காக உங்களுக்குள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள் பல உண்டு. அதில் சில கீழே தரப்பட்டுள்ளன.

இலக்கு மற்றும் அர்ப்பணிப்பு, தன்னம்பிக்கை, தொழில் வழங்குனரின் எதிர்பார்ப்புக்களுக்கேற்ப கடமையாற்றுதல், செயற்றிறனையும், பயனுறுதியையும் ஏற்படுத்திக் கொள்ளல். நேரத்தை சீராக முகாமை செய்தல், தனியாள் நடத்தை, தொழிலிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமநிலை பேணல்.

மேற்குறிப்பிட்ட திறமைகளுள் மிக முக்கியமாக இருப்பது நேர முகாமைத்துவமாகும். அதற்கு காரணம் நேரம் என்பது பெறுமதியில் கூடிய வளமொன்றாகக் காணப்படுகின்றது. ''நேரம் பொன்னானது'' போன்ற பழமொழிகள் நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. தொழிற் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு நேரத்தை வேலைக்கேற்ப பிரித்து செயலாற்றுதல் வேண்டும். இது நேர முகாமைத்துவம் எனப்படும்.

## நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்




**நேர முகாமைத்துவம் தொடர்பாகப் பின்பற்றக்கூடிய வழிமுறைகள் சில தரப்பட்டுள்ளன**

- தனக்குரிய கடமையை நன்றாக விளங்கிக் கொள்ளுதல்
- வேலைகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளல்
- ஒவ்வொரு கருமத்துக்குமான கால எல்லையை தீர்மானித்துக் கொள்ளல்
- நாளாந்த கால அட்டவணையொன்றை பின்பற்றுதல்
- நாளின் இறுதியில் தாம் திட்டமிட்ட விடயங்களின் முன்னேற்றத்தைப் பரீட்சித்தல்
- தாமதமேற்பட்ட அல்லது நிறைவேற்றிக்கொள்ள முடியாதுபோன வேலை களுக்கான காரணங்களை தேடியறிதல்
- விடுமுறை பெற்றுக்கொள்ளும்போது தனது வேலைக்குப் பதிலாக பதிலீட்டு வேலையொன்றினை ஏற்பாடு செய்தல்

தனிநபரொருவர் தனது நேரத்தை பின்வருமாறு மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| தனிப்பட்ட நேரம் → | தன்னுடைய சொந்த தேவைகளுக்காக செலவிடும் நேரம் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. கடமை நேரத்திற்கு புறம்பாக இந்நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். |
| வேலைசெய்யும் நேரம் → | காரியாலயமொன்றில் அல்லது வேலைத் தளமொன்றில் தனக்கு சேவை புரிவதற்கு எடுக்கும் காலம் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. பொதுவாக இலங்கையில் இக்கால அளவு எட்டு மணித்தியாலங்களாக காணப்படுகிறது. |
| கற்றலுக்கான நேரம் → | தொழிலுக்கு புறம்பாக மேலதிக பயிற்சிகள் மற்றும் தகைமைகளை அதிகரித்துக் கொள்வதற்காக செலவிடும் நேரத்தை இக்காலத்தினுள் உள்ளடக்கலாம். சிலவேளைகளில் நிறுவனத்தின்மூலம் விடுமுறை வழங்கப்பட்டு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவர். |

தொழில் வழங்குனர் எப்போதும் நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கதான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவர்.

வினைத்திறன் : வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல்
விளைதிறன் : ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட நோக்கங்களை அவ்வாறே அடைதல்

நேரத்தை முறையாக பயன்படுத்தாவிடில் வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பவற்றை அடைந்து கொள்ள முடியாமலிருக்கும்.

**வினைத்திறன், விளைதிறன் தொடர்பாக வேலை வழங்குநரின் கவனம்**

- சகல தொழில் வழங்குனர்களினதும் எதிர்பார்ப்பாக இருப்பது சேவை நிலையத்தை பயன்பாடுடையதாகவும் செயற்றிறனுடையதாகவும் நடாத்திச் செல்வதாகும்.
- அதனால் பணியாட்களுக்கு வழங்கும் நிதி மற்றும் பிற சலுகைகளுக்கு ஏற்புடையதான சேவையைப் பெற்றுக்கொள்ளும் உரிமை தொழில் வழங்குனருக்கு உண்டு.
- எனவே பணியாட்கள் தமது சேவையில் குறைவிடாது முழுமையாகக் கருமமாற்றுவது தனது கடமை என எண்ண வேண்டும்
- இச்செயற்பாடுகள் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டால் நிறுவனமொன்றின் பயனுறுதிமிக்க, செயற்றிறனுள்ள நோக்கத்தை அடைந்து கொள்வது மிக எளிதாக இருக்கும்.



*இது 1960ம் ஆண்டின் நடுப்பகுதியில் நிகழ்ந்த சம்பவமாகும். ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஜோன். எப். கென்னடி, கேப் கெனவரல் முனை எனும் இடத்தில் அமையப்பெற்றிருந்த விண்வெளி நிலையத்தை பார்வையிடச் சென்றார். கட்டடம் முழுவதும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த கென்னடிக்கு அங்கு சேவை புரியும் நபரொருவரை சந்திக்க நேர்ந்தது. நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள்? என்று கென்னடி வினவினார். நான் வாழ்வதற்கு எவ்வாறாவது சம்பாதித்துக் கொள்கிறேன். என்று பதிலளித்தார். அவருக்கு வாழ்த்துத் தெரிவித்த கென்னடி முன்னே சென்றார். இன்னுமொரு நபரை சந்தித்த கென்னடி முன்னர் வினவிய அதே வினாவை வினவினார். நான் சகல குப்பைகளையும் அப்புறப்படுத்தி சுத்தம் செய்கிறேன் என்று பதில் கூறினார். அவர் இன்னுமொரு நபரை சந்திக்கும் நோக்கில் மூன்றாவது நபரிடத்திலும் வினவினார். மலர்ந்த முகத்துடன் புன்முறுவலுடன் அவர் கூறிய பதிலாவது ஜனாதிபதி அவர்களே, நான் மனிதரொருவரை சந்திரனுக்கு அனுப்ப உதவி செய்கிறேன் என்றார்.*

**செயற்பாடு 6.9**




1. உமது பாடசாலை நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கான நாளாந்த நேர அட்டவணை ஒன்றைத் தயார் செய்க.
2. பிரஜை என்ற வகையில் நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றி கடிதமொன்று வரைக.

## 6.11 தனியாள் நடத்தையை வெளிக்காட்டுதல்

நிறுவனமொன்றில் வெவ்வேறு தரத்தினாலான தொழில்களில் ஈடுபடும் நபர்களைக் கண்டுகொள்ளலாம். அவ்வகையில் தொழில் செய்யுமிடத்தில் தமது தனியாள் நடத்தையை சிறப்பாக ஒழுங்கமைத்துக் கொள்வது அவசியமாகும். தனிநபர் ஒருவரினது நடத்தைப் பிறள்வு ஏனையோரிலும் தாக்கம் விளைவிக்கும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

தனியாள் நடத்தையை ஒழுங்கமைத்துக்கொள்ளும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களில் சில வரிப்படம் மூலம் காட்டப்பட்டுள்ளன.




அவ்வாறே நிறுவனம் இக்கட்டான நிலையை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் சமத்துவத்துடன் செயலாற்றுவதன் மூலம் நிறுவனம் அந்நிலைமையிலிருந்து மீளுவதற்காக செயற்படுவது அவசியமாகும். நிறுவனத்தினுள்ளும் நிறுவனத்திற்கு வெளியிலும் அதன் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் தனது நடத்தையை வெளிக்காட்டுவது சகல பணியாளர்களினதும் கடமையாகும்.

இதற்கு மேலதிகமாக பணியாட்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடத்தைப் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- தனது நடத்தைமூலம் மற்றவர்களுக்கு அகௌரவம், தொல்லை ஏற்படுத்தாதிருத்தல்
- நிறுவனத்தின் நோக்கம் நிறைவேறத்தக்க விதத்தில் தனது நடத்தையை ஒழுங்கமைத்துக் கொள்ளல்
- குறித்த நேரத்திற்கு கடமைக்குச் சமூகமளித்தல்
- பொருத்தமற்ற விதத்தில் வேலையில் தாமதங்களை ஏற்படுத்தாதிருத்தல்
- நிறுவனத்துக்கு உதவி தேவைப்படுமிடத்து அதற்கு சுயமாக முன்வருதல்
- வளங்களின் உச்சப் பயன் பெறத்தக்க வகையில் செயலாற்றுதல்
- நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படா வண்ணம் நடந்து கொள்ளல்

பணியாட்களின் நடத்தையானது நிறுவனத்தின் நற்பெயருக்கு நேரடி விளைவை ஏற்படுத்தும். ஒவ்வொரு நபரினதும் நடத்தையானது பிறருடைய செயற்பாடுகளுக்காக இருப்பினும் அவர்களது நடத்தையில் பண்புள்ளதும், பண்பற்றதுமான விளைவை ஏற்படுத்தலாம்.

கடமை நேரத்தில் மது அருந்தியிருத்தல், வெற்றிலை மெல்லுதல், புகைத்தல், விஷமச் செயல்கள், இலஞ்சம் பெறுதல் கடமையாற்றும் இடத்திலிருந்து அடிக்கடி வெளியில் சென்று வருதல், குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் காரணமாக நிறுவனத்துக்கு பாரிய அபகீர்த்தியை உண்டாக்குதல்

குறித்த நேரத்திற்குக் கடமைக்குச் சமூகமளித்தல், குறித்த காலத்தில் கடமை புரிதல், குறித்த நேரத்திற்கு கடமைக்குச் செல்லுதல் என்பன முக்கியமாகும். கடமைக்கு வருகை தருதல், கடமை முடிந்து செல்லுதல் என்பவற்றை முறைப்படுத்துவதற்காக பெரும்பாலான நிறுவனங்கள் வரவுக் கையொப்பப் புத்தகத்திற்கு பதிலாக அட்டையில் அடையாளமிடல், கைவிரல் அடையாளப் பதிவு போன்ற முறைகளை அறிமுகப் படுத்தியுள்ளன. சில வகையான தொழில்களில் கடமை நேரத்திற்குப் புறம்பான நேரங்களிலும் நடத்தையில் கவனமாக இருத்தல் வேண்டும். இதற்கு ஆசிரியர் தொழில், வைத்தியத் தொழில் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.


சில வகையான தொழில்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் சமூகத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்வதற்கும் உதவுவதுடன் சேவைக்காலத்தின் பின்னரும் தனது சுகாதாரத்திற்குப் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படலாம். இரசாயனப்பரிசோதனை நிலைய சேவகர்கள், கதிர்வீச்சு தொடர்பான வேலைகளில் ஈடுபடுவோர். அதிர்வு இயந்திர செயற்பாட்டாளர்கள் போன்றோரை இதற்கு உதாரணங்களாக குறிப்பிடலாம். இத்தகைய தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு அத்தொழில் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள், பாதுகாப்பு முறைமைகளை முறையாக பின்பற்றுவதன் மூலம் அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம்.


## 6.12 தனிப்பட்ட சரியான நிதி முகாமைத்துவம்

### வருமானமும் செலவுகளும்

மனிதன் வாழ்வதற்கு வருமான வழிகள் அவசியம். அதற்கென தொழில் / வாண்மையில் ஈடுபடுவதும் அவசியமாகவுள்ளது. அவ்வாறின்றேல் தனக்கென்று வேறு வருமான வழியொன்று இருத்தல் வேண்டும்

தனது வருமானத்திற்கேற்ப செலவுகளைத் தீர்மானித்துக் கொள்வது சிறப்பான வாழ்வுக்குத் தேவையானதாகும். ஆகவே பணத்தை கவனமாக கையாள்வது முக்கியமானதாகும்.





**Company Name**

[Address]

Salary Slip

**Employee Name:** ____________________

**Designation:** ____________________

**Month & Year:** ____________________

| Earnings | | Deductions | |
|---|---|---|---|
| Basic & DA | 5,200.00 | Provident Fund | 358.00 |
| HRA | 3,000.00 | E.S.I. | 120.00 |
| Conveyance | 500.00 | Loan | - |
| | | Profession Tax | - |
| | | TSD/IT | - |
| | | | |
| Total Addition | 8,700.00 | Total Deduction | 478.00 |
| | | **NET Salary** | **8,222.00** |
| | | | |


**Dollars Eight Thousand Two Hundred Twenty Two Only**

Cheque No. ____________ Name of Bank: ____________

Date: ____________

Signature of the Employee: ____________ Director: ____________

*சம்பளப் பட்டியல்* (Pay Slip)



*பற்றுச் சீட்டு* (Bill)

தமது வருமானத்திற்கேற்றாற்போல் செலவுகளைத் தீர்மானித்துக் கொள்தல் வேண்டும். அதற்கேற்ப நிதியைப் பரிபாலிக்க வேண்டும்.

- **சாதாரண அல்லது அவசர சந்தர்ப்பங்களில் பணத்தைப் பயன்படுத்துதல்**

அன்றாட நிலைமைகளிலும், அவசர சந்தர்ப்பங்களின் போதும் பணம் தேவைப்படும். அந்நேரத்தில் உங்களிடம் பணம் இருக்க வேண்டும்.

- **வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்தல் / பேணிவருதல்**

பணப் பரிமாற்றத்திற்கென வங்கிக் கணக்கொன்றைப் பேணிவருவது அன்றாட செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்ள உதவியாக இருக்கும். பணத்துக்குப் பாதுகாப்பு வழங்கவும், மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவும் இயலும். உதாரணம் - வங்கியில் பணத்தைச் சேமிப்பதன் மூலம் மாதாந்த அல்லது வருடாந்த வட்டியைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் தனிப்பட்ட நிதி முகாமைத்துவம் பேணப்படும்.

- **எதிர்காலத்திற்காக சேமித்தல்**

தனிப்பட்ட நிதி முகாமைத்துவத்தின் போது எதிர்காலத்திற்காக சேமிப்பது அத்தியாவசியமானதாகும்.

- எதிர்பார்க்கப்படும் நிலைமையில் மேலும் பணம் திரட்ட முடியாத சந்தர்ப்பம் ஏற்படல்.
- அவசர நிலைமையொன்று ஏற்பட்டால், அத்தகைய சந்தர்ப்பத்தில் பயன்படுத்த முடிதல்
- முதுமையின்போது அல்லது சேவையிலிருந்து ஓய்வு பெறும்போது பயன்படுத்த முடியுமாகவிருத்தல்
- பிறருக்குச் சுமையாக இருக்காமை

- **நுகர்விற்காகக் கடன் கொடுக்கல் வாங்கலிருந்து தவிர்ந்திருத்தல்**

நிதி முகாமைத்துவம் செய்யும் சகல சந்தர்ப்பங்களிலும் இயன்ற வரை கடன் கொடுக்கல் வாங்கலிலிருந்து தவிர்ந்து கொள்வது தனக்கு நன்மை பயக்கும். அன்றாட செயற்பாடுகளின்போது கடன் பெறுவதற்கோ, கடன் கொடுப்பதற்கோ நேரிடுவதால் எதிர்பாராத பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படலாம். குறிப்பாக அன்றாட நுகர்வுத் தேவைக்காக கடன் பெறக்கூடாது. தமது வருமானத்திற்கேற்ப செலவைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டியது அவசியம்.

- **கடன் அட்டை** (Credit Card)

கடன் அட்டைப் (Credit Card) பயன்பாடு தொடர்பாக நீங்கள் தெரிந்து வைத்திருப்பது என்ன? கடன் அட்டை என்பது பணத்தை கடனுக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வழிமுறைகளிலொன்றாகும்.




உங்களது குடும்ப அங்கத்தினரிடையேயும் இத்தகைய கடன் அட்டைப் பாவனை இருக்குமல்லவா? அதனை உபயோகிக்கும் முறை பற்றி அவர்களுடன் கலந்து ரையாடுங்கள்.

| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
| --- | --- |
| • பணத்தை இடத்துக்கிடம் கொண்டு செல்வதற்கு மிகவும் பாதுகாப்பான முறையாகும்.<br>• தான் விலை கொடுத்து கொள்வனவு செய்யக் கூடிய பொருளின் பெறுமதிக்கான கடனை தீர்மானித்துக் கொள்ளலாம்.<br>• வட்டியின்றி பணம் செலுத்தும் காலம் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>• செலவிடும் தொகைக்கேற்ப பல்வேறு பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.<br>• எந்தப் பண அலகிலும் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்.<br>• உடனடி தேவைகளுக்குக் கடன் பெற்றுக் கொள்ளலாம்.<br>• பட்டியல்களுக்கான கட்டணத்தை குறித்த தினத்திற்குள்ளாக செலுத்தி விடலாம். | • கடன் அட்டைப் பாவனை மூலம் சிலவேளை தனக்கு அவசியமில்லாத நுகர்விற்கு தூண்டப்படும் நிலை ஏற்படலாம்.<br>• அதிக வட்டி அறவிடப்படல்.<br>• இன்னொருவரும் அதனை முறையற்ற விதமாகப் பயன்படுத்தலாம்.<br>• பணத்தை செலுத்தும் போது மேலதிக கட்டணமொன்றை அறவிட்டுக் கொள்ளல்.<br>• திடீரென நிபந்தனைகள் மாற்றப்படுதல்<br>• பண வருமானத்தைக் காட்டிலும் செலவுசெய்யத் தூண்டப்படுதல்.<br>• குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக மிகுதியை செலுத்தத் தவறினால் மேலதிக கட்டணம் சேர்க்கப்படல்.<br>• நீண்ட கால கடனாளியாக ஆகுதல்.<br>• வருடாந்தக் கட்டணம் கூடுதலாக அறவிடல். |

கடன் அட்டைப் பாவனை மூலம் அனுகூலங்கள் இருப்பது போன்றே பிரதிகூலங்களும் உண்டு என்பதை விளங்கிக் கொண்டிருப்பீர்கள். ஏனெனில் பொருள்கள் மற்றும் சேவைகளை எல்லையற்ற விதத்தில் கடனட்டை மூலம் பெற்றுக் கொள்வதனால்

அதிலிருந்து விடுபட முடியாதவாறு கடனட்டை நிறுவனங்கள், எம்மை நீண்ட கால கடனாளியாக மாற்றியுள்ளன என்பது முக்கிய பிரச்சினையாயுள்ளது.

குறிப்பிட்ட வருமானம் உள்ளவர்கள் நீர், மின்சாரம் போன்ற பட்டியல்களுக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கும், அதிக வேலைப்பளு உள்ளவர்களுக்கும் கடன் அட்டைப் பாவனை பொருத்தமானதாகும். செலவுசெய்வதில் சிக்கனம் பேணாத அதிக கடன் பெற்றுள்ள குறித்த வருமானம் இல்லாதவர்களுக்கு கடனட்டைப் பாவனை மூலம் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம்.

- **எதிர்காலத்திற்காக முதலீடு செய்தல் அல்லது சேமித்தல்**

- தனது எதிர்கால வியாபார நடவடிக்கைகள் அல்லது தனிப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை சாதகமாக்கிக் கொள்வதற்காக பணத்தை முதலீடு செய்தல் அல்லது சேமித்தல் என்பது இதன் கருத்தாகும்.

உதாரணம் - வியாபார நடவடிக்கைகளில் பணத்தை முதலீடு செய்தல்.
பணத்தை நிலையான சேமிப்பில் வைத்தல்

முதுமை வயதை அடைந்திருக்கும்போது ஓய்வூதியப் பணம் அல்லது ஊழியர் சேமலாப நிதி போன்றவற்றை எதிர்காலத்திற்காகத் திட்டமிட்டு முகாமை செய்ய வேண்டும்.

ஓய்வூதியம் அல்லது ஊழியர் சேமலாப நிதி போன்ற சலுகைகள் அற்ற தொழிலொன்றைப் புரிந்தால் எதிர்காலத்திற்காக திட்டமிட்டவாறு சேமிப்பை முறையாக பேணி வருதல் அவசியமாகும்.

அவ்வாறே தொழிலின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தினால் எதிர்கால நலனுக்காக குறித்த தொகைப் பணத்தை சேமிப்பது அவசியம். தொழிலிருந்து விலகும்போது அல்லது ஓய்வு பெறும்போது சேமிப்பை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அவசர தேவைகளுக்கு பண அவசியம் ஏற்படுகின்றபோது இச்சேமிப்பை பிணையாக வைத்து கடன் பெற்றுக்கொள்ள முடியும். ஓய்வூதியம் வழங்கப்படாத தொழிலொன்றை செய்வதற்கு நேர்ந்ததால் இச்சேமிப்பை எதிர்கால முதலீடாகப் பயன்படுத்தலாம்.

ஓய்வூதியம் அல்லது ஊழியர் சேமலாப நிதியம் மூலம் கிடைக்கின்ற பணத்தை கட்டுப்பாடாகச் செலவுசெய்ய வேண்டும். ஏனெனில் தொழிலொன்று செய்யாத நிலையில் உங்களுடைய வருமானம் குறைந்து விட வாய்ப்புண்டு. அத்தகைய சந்தர்ப்பத்தில் முறையாக இப்பணத்தை முதலீடுசெய்து வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியுமாயின் உங்களுடைய ஓய்வுகாலத்தை மகிழ்ச்சிகரமானதாக ஆக்கிக் கொள்ளலாம். தற்போது வங்கிகள் மூலம் சிரேட்ட பிரசைகளின் சேமிப்பு தொடர்பாக அதிகூடிய வட்டியுடன் விசேட சலுகைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செயற்பாடு 6.10



கடனட்டைப் பயன்பாட்டின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் எனும் தலைப்பில் செய்திப் பத்திரிகைக்கு கடிதமொன்று எழுதுக.

## 6.13 தொழில் வாழ்க்கையையும், தனிப்பட்ட வாழ்க்கையையும் சமனிலையாகப் பேணுதல்

தொழில் வாழ்க்கை, தனிப்பட்ட வாழ்க்கை ஆகியவற்றை சிக்கலின்றி சமனிலையுடன் பேணுவது முக்கியமாகும். தனிப்பட்ட வாழ்க்கையையும் தொழில் வாழ்க்கையையும் ஒன்றுடனொன்று சிக்கலாக்கிக் கொள்வதனால் தொழிலைப் போன்று வாழ்க்கையையும் விருப்பற்றதாக்கிவிடும். தொழிற் செயற்பாடுகளை காரியாலயத்திலேயே நிறைவு செய்துவிட்டு வீட்டுக்கு செல்வதன் மூலம் தனிப்பட்ட வாழ்க்கையை சிறப்பாகப் பேணிக்கொள்ளலாம். அவ்வாறே தேவையான அளவை விட மேலதிக வேலை, மேலதிக செயற்பாடுகளில் ஈடுபடல் காரணமாக தனிப்பட்ட வாழ்க்கை சிக்கல் மிகுந்ததாகி விடும். ஏனெனில் தனது குடும்ப அங்கத்தவர்களுடன் சிறிது நேரத்தைத் செலவிடுவது அவசியமானது.

வீட்டு வேலைகள், பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடல், ஒன்றாகவிருந்து உணவு பரிமாறல், சுற்றுலா செல்லல், விளையாட்டுகளில் ஈடுபடல், சமய அனுட்டானம், சமூக சேவை மற்றும் குடும்பத்தினரின் பொது வேலைகளில் பங்குபற்றுதலானது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆரோக்கியத்தை தருவதற்கு காரணமாக அமையும்.

அவ்வாறே தனிப்பட்ட வாழ்க்கையைப் பிரதானமாகக் கொண்டு தொழில் செயற்பாடுகளில் கவனம் செலுத்தாதுவிட்டால் தொழில் வழங்குவோரும், தொழிலாளர்களுக்கும் இடையிலும், நிறுவனத்தின் ஏனைய தொழிலாளர்களினதும் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். அதனால் தனிப்பட்ட வாழ்க்கை, சமூக வாழ்க்கை மற்றும் தொழில் வாழ்க்கை என்பவற்றுக்கிடையில் சமனிலைத் தன்மையை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தல் பயனுள்ளதாகும்.

தனிநபர் ஒருவரின் அன்றாட வாழ்க்கையில் ஐந்து பிரதான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| தொழில் வாழ்க்கைச் செயற்பாடுகள் Professional Life | தொழில் தொடர்பான செயற்பாடு, ஆவணங்கள் தயாரித்தல், கூட்டங்களில் பங்குபற்றல், பயிற்சி களில் கலந்துகொள்ளல் |
| தனிப்பட்ட வாழ்க்கை செயற்பாடுகள் Personal Life | நண்பர்கள், உறவினர்களை சந்தித்தல், மேலதிக மாக கற்றல், தனியாள் சுகாதாரம் பேணல் |
| குடும்ப வாழ்க்கைச் செயற்பாடுகள் Family Life | பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை, சுற்றுலாப் பயணங்கள் செல்லுதல், வீடு வாசல் புதுப்பித்தல் வேலை, உணவு தயாரித்தல், நோய்களின்போது சிகிச்சை பெற்றுக்கொடுத்தல் |
| சமூக வாழ்க்கைச் செயற்பாடுகள் Social Life | பிரதேசத்தின் அமைப்புகள், சங்கங்களில் கலந்து கொள்ளல், பொது வேலைகளுக்கு உதவுதல், சமய விடயங்களுக்குப் பங்களிப்புச் செய்தல் |
| ஆன்மீக வாழ்க்கைச் செயற்பாடுகள் Spiritual Life | ஆன்மீக பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் |

இவ்விடயங்களை சமநிலையோடு பேணுதல் சிறந்த வாழ்க்கையொன்றினை முன்னெடுத்துச் செல்வதற்கு காரணமாக அமையும். மது பாவனை, போதைப்பொருள் பாவனையைத் தவிர்த்தல், புகைத்தலில் ஈடுபடாதிருத்தல், தீய நண்பர்களுடன் நட்புகொள்ளாதிருத்தல், சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல், இலஞ்சம் மற்றும் ஊழல்களில் பங்கு கொள்ளாதிருத்தல் மூலமாக வாழ்க்கையை சமநிலையில் பேணி வரலாம்.

தொழிற் செயற்பாடுகள் மற்றும் குடும்பச் செயற்பாடுகள் சிக்கலடைவதற்கு ஏதுவான பிரதான காரணிகளுள் நிதிப் பற்றாக்குறையைக் குறிப்பிடலாம். வருமானத்தை விட செலவு அதிகரிப்பதனூடாக நிதிப்பற்றாக்குறை ஏற்படலாம். வருமானத்துக்கு ஏற்றவாறு அநாவசிய மற்றும் மேலதிக செலவுகளை வரையறுத்துக் கொள்ள வேண்டும். நிதிப் பற்றாக்குறை ஏற்பட்ட பொழுது தனக்கு நெருங்கிய உறவினர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்துவது அவசியம். விசேடமாக பெற்றோர், நண்பர்களிடத்தில் பணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் கடனட்டைப் பயன்பாடு, வட்டிக்கு பணம் பெறுதல் போன்ற முறைகளில் ஈடுபாடு கொள்வதால் சிக்கலான நிலை இன்னும் அதிகரிக்குமே தவிர அதிலிருந்து உங்களுக்கு மீள முடியாது போகும். திட்டமிட்ட முகாமைத் துவத்தின் மூலம் தொழில் நிலையத்தின் செயற்றிறன் மற்றும் பயனை அதிகரிக்கச் செய்வதன்மூலம் தொழில் புரிவோருக்கு பிரதிபலன்களை பெற்றுக்

கொள்ள முடிவதுடன், தனிப்பட்ட வாழ்க்கையை வெற்றிகரமானதாகவும், சிறப்புடையதாகவும் ஆக்கிக் கொள்வதற்கான வழியை தேடிக்கொள்ளலாம். பணம் என்பது வாழ்க்கை அல்ல. என்பதை நினைவில் வைத்துக் கொள்வது மிகவும் முக்கிய மானதாகும்.

## செயற்பாடு 6.11



திட்டமிட்ட முறையில் வேலை செய்வதனால் தொழில் வாழ்வும் தனிப் பட்ட வாழ்வும் வெற்றியடையும் எனும் தலைப்பின் கீழ் கட்டுரை ஒன்றை எழுதுக.



## சாராம்சம்

- சிறு வயதிலிருந்தே தனி சுய விவரக்கோவையொன்றைப் பேணுதல்மூலம் தன்னைப் பற்றிய விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்
- தொழிலொன்றைத் தெரிவுசெய்வதற்கு முன்னர் எப்போதும் தனது திறன், விருப்பு தொடர்பான தெளிவைப் பெற்றுக்கொண்டு பொருத்தமான தொழிலொன்றுக்கு செல்லக் கூடியதாயிருக்கும்.
- வேலை உலகில் பல்வேறு தொழில் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அது தொடர்பாக நன்றாகப் பகுப்பாய்வு செய்து தனக்கு பொருத்தமான தொழிலொன்றைத் தெரிவுசெய்து கொள்வதற்காக செயல்படுவது முக்கிய மாகும்.
- சரியாக சுயவிபரக் கோவை அல்லது தொழில் விண்ணப்பப் பத்திரமொன்றை பூரணப்படுத்துவதன்மூலம் போட்டி மிகுந்த வேலை உலகை இலகுவாக வெற்றி கொள்ள முடியும்.
- பல்வேறு நேர்முகப் பரீட்சை தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல், அவற்றை சிறப்பாக எதிர்கொள்வதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்ளச் செய்யவும், எதிர்கால வாழ்க்கை இலக்கை வெற்றி கொள்ளவும் பேருதவியாக அமையும்.
- நேர முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் என்பன வாழ்க்கையின் வெற்றிக்கு அத்தியாவசியமானவையாகும்.
- தனியாள் நடத்தையை சிறப்பாகப் பேணுதல் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் தொழில் வாழ்க்கைக்கும் முக்கியமானதாகும்.
- தனிப்பட்ட வாழ்க்கையைப் போன்று தொழில் வாழ்க்கையை சமநிலையாக பேணுவதானது தனியாள் அபிவிருத்திக்கும் சமூக அபிவிருத்திக்கும் இன்றிய மையாதது.